161

ESSAYS ON MONEY

நாணயம்

மதுரை
அமெரிக்கன் கலாசாலைப் பேராசிரியர்
ஜே. எஸ். பொன்னையா, எம். ஏ.
இயற்றியது.

முதற் பதிப்பு

விலை] 1935. [ரூ. 1 அ. 4.

முகவுரை.

மக்களின் வாழ்க்கைக்குவேண்டும் பலநிறப்பொருள்களை ஆக்கல் (Production), உண்ணல் (Consumption), மாற்றல் (Exchange) முதலிய துறைகளை ஆய்ந்து அவற்றுட்கிடக்கும் பொதுநெறிகளை விளக்கிக் காட்டுவது பொருளாதாரக்கலை (Science of Economics) என்னப்படும்.

இப்பொருளாதாரக்கலை இக்காலத்தில் எல்லா நாடுகளிலும், எல்லா மக்களாலும் சிறப்பாகக் கற்கப்பட்டு வருகிறது. ஆயினும் நம் நாட்டிலோ இக்கலை கல்லூரி மாணவர்களுள் ஒருசிலரால்மட்டுமே கற்கப்பட்டுவருகிறது. அங்ஙனம் கற்கப்படுவதும் பிறமொழிவாயிலாயிருத்தலின் அது பெரும் பயனை அளித்திலது.

பொருளாதாரக்கலையின் எல்லாப் பகுதிகளும் தமிழில் வெளியிடப்படுமாயின் அது நம் நாட்டு மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் நற்பேற்றினை உதவுவதாகும் என்னும் துணிபுடையேன். இதற்காகவே இக்கலையின் மூலக்கருத்துக்கள் அடங்கிய ஆரம்பநூல் (A First Book of Economics) ஒன்றை மூன்று ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டேன்.

இவ்வாண்டில் வெளியிடப்பட்டுள்ள நாணயம் நாணயமாற்று என்ற இருநூல்களும் பொருளாதாரக் கலையின் சிறப்பான பகுதிகளைப்பற்றிக் கூறுவன. அன்றியும், இவை இப்பொழுது தோன்றியுள்ள பொருளாதாரக் குழப்பத்துக்கு நாணயத்திலும் நாணயமாற்றிலும் அடங்கிய குறைபாடுகள் எவ்வாறு காரணமாகவிருந்தன என்பதைத் தெரிவிப்பனவாதலின் எல்லாராலும் அவசியம் கற்கத்தக்கனவும் ஆம்.

இதுகாறும் தமிழில் எழுதப்படாத இப்பகுதிகளைத் தமிழில் அமைப்பதில் உண்டாகும் இடர்ப்பாடுகளைத் தமிழறிஞர் நன்குணர்வர். அவற்றை நான் விரித்துரைக்க வேண்டா.

பொருளாதாரக்கலை கல்லூரிமாணவர்களாலேனும் கற்கப்படவேண்டும் என்னும் நோக்குடன் நான் ஆற்றிய இச்சிறுபணியைத் தமிழன்பர்கள் ஏற்று ஆதரிப்பார்கள் என நம்புகிறேன்.

அமெரிக்கன் காலேஜ்,
மதுரை.
ஏப்ரில் 30, 1935.

ஜே. எஸ். பொன்னையா.

பொருளடக்கம்.

1. பண்டமாற்று நிகழுமாறு 1
The Mechanism of Barter

2. உலோகங்கள் பண்டமாற்றுப் பொருளானமை 10
Metals as Media of Exchange

3. நாணய வரலாறு 15
The Evolution of Coins

4. நாணயமதிப்பும் உலோகமதிப்பும் 18
The Value of Money and the Money Metals

5. தங்கநாணயத்திட்டம் 26
The Gold Standard

6. தாள்நாணயம் 38
Paper Money

7. இரட்டைநாணயத்திட்டம் 52
Bimetallism

8. தங்கமாற்றுத்திட்டம் 62
The Gold Exchange Standard

9. யுத்தத்திற்குமுன்வழங்கிய நாணயத் திட்டம் 78

The Pre-War Monetary System

10. தங்கத்திட்டம் நீங்கியவாறு 89

The Breakdown of the Gold Standard

11. தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவுதல் 100

The Restoration of the Gold Standard

12. உலகப் பொருளாதாரக் குழப்பம் 109

The World Economic Crisis

13. புதிய நாணயத்திட்டங்கள் 118

The New Currency Systems

14. எதிர்கால உலகநாணயத்திட்டம் 123

The Future of the World Monetary System

'There is nothing so universally used and so little understood as money'

(*Warburgh*)

1

பண்டமாற்று நிகழுமாறு.

ஆதியில் மக்களின் தோற்றமும் வாழ்க்கையும்.

இவ்வுலகின்கண் மக்கள் எக்காலத்திற்றோன்றினரென்றும், எவ்விடத்தில் முதலில் வாழ்ந்தனரென்றும் நாம் துணிந்து கூறுவதற்கிடமில்லையாயினும், பூமியினின்றுந் தோண்டியெடுக்கப்பட்ட பற்பல சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு அன்னவரின் வாழ்க்கைநிலையை நாம் ஒருவாறு அறிதல்கூடும்.

2. தொடக்கத்தில் மக்கள் சிறுசிறு குழுவினராகக் காடுகளிலும் குகைகளிலும் வதிந்துவந்தனர். கற்கருவிகளைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடிப்புசித்தும், நீர்நிலைகளிலுள்ள மீன்களைப் பிடித்துத் தின்றும், இயற்கையிலேயே விளைந்து கிடந்த காய், கனி, கிழங்குகளை அருந்தியும் உயிர் வாழ்ந்து வந்தனர். உணவுப்பொருள்களைச் சேர்ப்பதிலேயே அவர்கள் முழுநேரமும் செலவிடப்பட்டது! ஒவ்வொரு குடும்பத்தாரும் தத்தமக்குரியனவற்றையெல்லாம் தாமே

அமைத்துக்கொண்டனர். (self-sufficing family economy) ஆதிமக்கள் இவ்வெளிய வாழ்க்கைநிலையிலேயே நெடுங்காலத்தைக் கழித்தனர்.

பண்டமாற்றுக்குக் காரணங்கள்.

3. காலப்போக்கில் மக்கட்கூட்டம் பல்கிற்று. இயற்கையாய் விளைந்துகிடந்த உணவுப்பொருள்கள் குறைவுபட்டமையால் பயிர்த்தொழில் (agriculture) கைக்கொள்ளப்பட்டது. பகைவர்களுடன் போர்புரிவதற்காகப் போர்க்கருவிகளும் செய்யப்பட்டன. இவைபோன்ற பலகாரணங்களினால் தொழில்கள் பலப்பலவாகப் பெருகின. ஒவ்வொரு பகுதியிலும் அதனதன் வளத்திற்கும் பிற இயற்கையமைப்புக்கும் ஏற்றவாறு மக்கள் தத்தம் திறமைக்குத்தக்கபடி வெவ்வேறு விதமான தொழில்களை மேற்கொண்டனர். சிலர் பயிர்த்தொழிலொன்றையே இயற்றினர்; சிலர் போர்த்தொழிலொன்றையே பூண்டனர்; வேறுசிலர் மேற்கூறிய தொழிலாளர் முதலியோருக்குரிய கருவிகளைச்செய்வதிலேயே தங்கள் உழைப்பைச் செலவிட்டனர். மற்றுஞ்சிலர் குற்றேவல் புரியும் அடிமைகளாக மாறினர். இவர்களுள் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் பிறரியற்றும் பலவிதப்பொருள்களும் இன்றியமையாதனவாக இருந்தமையால் ஒருவர் தாம்செய்த (அல்லது விளைவித்த) ஒரு பொருளைக்கொடுத்து அதற்குப் பிரதியாகப் பிறரிடமிருந்து தமக்கு வேண்டும் வேறொரு பொருளைப்பெற்றுக்கொள்வது அவசியமாயிற்று. இவ்வழக்

கத்திற்குத்தான் 'பண்டமாற்று' (barter) என்று பெயர். மக்கட்கூட்டம் மிக்ககாலத்து தொழிற் பாகுபாடுகளும், வேலைப்பகுப்பும் பண்டமாற்றும் ஒருங்குநிகழும் நிகழ்ச்சிகள் என ஆசிரியர் வெஸ்டன் கூறுகிறார்.

4. "பண்டமாற்று மக்கள் வழக்கம்" (Barter is a human act) என ஆடம் ஸ்மித் (Adam Smith) அழகாகக் கூறியுள்ளார். ஏனெனில் பண்டமாற்று நிகழுவதற்கு மூன்று வகை உணர்ச்சிகள் வேண்டும். அவையாவன:—(1) உடைமை அல்லது உரிமை உணர்ச்சி (ownership); (2) பொருள்களை மதித்தறிதல் (objective valuation); (3) ஒன்றற்கொன்றுள்ள ஒப்புமை உணர்ச்சி (reciprocal recognition) என்பனவாம். இவ்வுணர்ச்சிகள் மக்களிடத்தேயன்றி விலங்கினங்களிடத்து நிகழ்வனவல்ல.

5. ஒவ்வொரு பண்டமாற்றிலும் கொள்வாரும் கொடுப்பாரும் ஆகிய இருதிறத்தாரும் ஒத்தமனத்தினராய், ஒருவர் தமக்குரியதொரு பொருளைக்கொடுத்து, அதற்குப் பிரதியாக வேறொருவரிடமிருந்து தமக்கு வேண்டும் அதே மதிப்புள்ள வேறொரு பொருளைப் பெற்றுக்கொள்வது அமைந்திருப்பதைக் காணலாம்.

6. உரிமையுணர்ச்சி காரணமாகப் பண்டமாற்று நிகழ்கின்றது; பண்டமாற்று அவ்வுணர்ச்சியை வலியுறச் செய்கின்றது. எனவே பொருள்களை மேலும்மேலும் முயன்றீட்டுவதற்கும் அதுவே காரணமாகிறது. அதனால் மக்களின் நாகரிகமும் வளர்ச்சியுறுகின்றது.

மதிப்புக்கருவியின் அவசியம்.

7. பண்டமாற்றுமுறையைச் சற்று உற்றுராயுங்கால் கொள்வோரும் கொடுப்போரும் ஆகிய இருதிறத்தாரின் பொருள்களையும் இருவருக்கும் ஒப்ப அமைய அளவிடுவது அவசியமென்பது பெறப்படும். உதாரணமாகத் தயிரையும் நெல்லையும் மாற்றிக்கொள்ளும் வழக்கத்தை எடுத்துக்கொள்வோம். இதில் அவற்றின் விலைமதிப்பைப்பற்றிக் கொடுப்போரும் கொள்வோரும் முன்னரே ஒரு முடிவுக்கு வர வேண்டும்; அவ்விலைமதிப்பு, காற்படி தயிருக்கு அரைப்படி நெல்லாகவேனும, அன்றி, வேறுவிதமாகவேனும் இருவருக்கும் பொருத்தமானதாக இருக்கலாம்.

8. விலைமதிப்பென்பது என்னை? அது பொறிகளால் அறியக்கூடிய பொருளன்று (not objective); மனோபாவத்தால் அறுதியிடப்படும் அளவுணர்ச்சியே (subjective valuation). அங்ஙனம் அறுதியிடுவதற்கு ஏதேனும் ஒரு பொருளின் மதிப்பை இலக்காக (objective standard) வைத்துப் பிறபொருள்களின் மதிப்பை அப்பொருளின் மதிப்புடன் ஒப்பிட்டுக் கொள்ளல்வேண்டும். உதாரணமாகப் பத்துக்கலம் நெல்லின் மதிப்பு ஒரு பசுவுக்குச் சரி; அல்லது இருபது குடம் எண்ணெய்க்குச் சரி என்று கணக்கிடல் வேண்டும். பொருள்களின் மதிப்பை இவ்வாறு அளந்து கணக்கிட நாம் எடுத்துக்கொள்ளும் பொருளை மதிப்புக் கருவி (standard of values) என்னலாம்,

மதிப்புக்கருவி.

9. மதிப்புக்கருவி எதுவாகவேனும் ஆகலாம்; கல்லாகவேனும், * மண்ணுகவேனும் இருக்கலாம். சாத்தன் தன்னிடமுள்ள ஐந்து பசுக்களுக்கு மாற்ருகக் கொற்றனிடமிருந்து ஐம்பது கலம் நெல்லைப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கிருன் என வைத்துக்கொள்ளுவோம். ஆனுல் அச்சமயத்தில் கொற்றனிடத்து நெல் இல்லாதிருப்பின் கொற்றனின் உறுதிமொழியை (promise) நம்பிச் சாத்தன் தனது ஐந்து பசுக்களையும் கொடுத்துவிடலாம்; அன்றி அவ்வைம்பது

* 'யாப்' (Yap) என்னும் தீவில் வசித்த மக்களுடைய செல்வத்தின் அளவு அவர்களிடத்திலுள்ள கற்களின் தொகையைப் பொறுத்திருந்ததாம். அதிகமான அல்லது பெரியகற்களையுடையவன் பெருஞ்செல்வனுக எண்ணப்பட்டான். அவருள் ஒருவனுக்கு மிகப்பெரிய கல்லொன்றிருந்தது; அதுவும் சமுத்திரத்தின் ஆழத்திற் கிடந்தது; எனினும் அவனே எல்லோரிலும் பெருஞ்செல்வனுகக் கருதப்பட்டான். அத்தீவில் கொடுக்கல் வாங்கல் முதலிய எல்லா வர்த்தகத்திலும் இக்கற்களே நாணயங்களாக வழங்கப்பட்டன. தூக்கமுடியாத கற்களை (ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ள நேரிடும்பொழுது) அவற்றை இருந்த இடத்திலேயே வைத்து அவை எவருக்குச் சொந்தமாக மாற்றப்படுமோ அவருடைய பெயரை அவற்றின்மேல் பொறிப்பர். இவ்வழக்கத்திற்கும் தற்காலத்தில் (தங்கத்தை அனுப்பாமலே) ஒரு பாங்கியிலுள்ள (Bank) தங்கத்தை வேருெரு பாங்கியின் கணக்குக்கு மாற்றிக் கொள்ளும் (ear-marking) வழக்கத்திற்கும் இயைபிருப்பதாக ஆசிரியர் கெய்ன்ஸ் (Keynes) கூறுகிருர் (A Treatise on Money Vol. ii. P. 292).

கலம் நெல்லுக்கு அறிகுறியாக (token) ஐம்பது கிளிஞ்சில்களையேனும், கூழாங்கற்களையேனும் பெற்றுக்கொள்ளலாம்; இரண்டு மாதங் கழித்துத் தன் வயலில் நின்ற நெற்கதிரைக் கொற்றன் அறுத்துச் சாத்தனுக்கு ஐம்பதுகலம் நெல்லைச் செலுத்தும்போது, சாத்தன் பெற்றிருந்த ஐம்பது கிளிஞ்சில் அல்லது கூழாங்கற்கள் அவற்றுற் குறிப்பிட்ட மதிப்பையுடையனவாகின்றன.*

10. இவ்வுதாரணத்திலிருந்து மதிப்பும் பயனுமற்ற எப்பொருளும் பண்டமாற்றுக்கேற்ற சாதனமாக அமைதல் கூடும் என்ற உண்மை புலனுகின்றது. கிரேக்க தேசத்திலுள்ள 'ஸ்பார்ட்டா' (Sparta) என்னும் நாட்டில் இரும்புத் துண்டுகளை இம்முறையில் வழங்கி வந்தனர். சீனர் தோல் துண்டுகளைப் பண்டமாற்றுப் பொருளாக வழங்கினர். நாம் காகிதத்தை இம்முறையில் உபயோகிக்கிறோம். எனவே எப்பொருளுக்கும் குறிப்பிட்ட ஒரு மதிப்பையிட்டு, அம் மதிப்புச் சிதையாமலும் குன்றுமலும் இருந்துவரச்செய்தால்

---

* ஹட்சன் பே கம்பெனி (Hudson Bay Company) யைச் சார்ந்த ஆங்கில வியாபாரிகள் 18, 19ம் நூற்றுண்டுகளில் வட அமெரிக்காவிலுள்ள மிலேச்சருடன் வியாபாரஞ்செய்யும்போது அவர்களிடமிருந்து தோல்களை (hides and furs) வாங்கிக் கொண்டு அவற்றின் மதிப்பைக் குறிக்கக் கழிகள் (sticks) கொடுப்பது வழக்கமாயிருந்தது. இக்கழிகளை அவ்வியாபாரிகளுடைய கடைக்குக் (store) கொண்டுபோனல் கழிகளின் தொகைக்குத் தக்கவாறு மற்றப்பொருள்களை (கண்ணடி, சர்க்கரை போல்வன) மாற்றிக்கொடுப்பர்.

அப்பொருள் பண்டமாற்றுப்பொருளாக அமையும். பொருள் வடிவமே அற்றுப்போயினும் பெயர்நிலையில் அப்பொருள் பண்டமாற்றுக்கருவியாக நிற்றலும் கூடும்.* ஆனால் பண்டைக் காலத்தவர் இந்நுட்பமான கருத்துக்களைத் தெளிவாக அறியாதிருந்தனர். அறிந்திருந்தாலும், நிலைபெற்ற அரசாங்கமேனும், நீதிஸ்தலங்களேனும், இப்போதுள்ளவாறு இல்லாமையினால் மேலே கூறியபடி அறிகுறியாய் வழங்கும் பொருள்களைப் பண்டமாற்றில் உபயோகியாமல் நிறைமதிப்புள்ள பொருள்களையே உபயோகித்து வந்தனர். இது நிற்க.

பொதுப்பொருளின் அவசியம்.

11. இதுகாறும் கூறியவற்றால் பண்டமாற்றில் பொருள்களின் மதிப்பை அளவிடல் அவசியம் எனக் காட்டப்

---

* பண்டமாற்றுக் கருவியாக ஆங்கிலேயர் முதலில் 20 அவுன்ஸ் நிறையுள்ள (ஒரு பவுண்டு, Lb. = Libra) வெள்ளியை உபயோகித்தனர்; அந்நிறையிற் செய்யப்பட்ட நாணயம் ஒரு 'பவுண்டு' (Pound) என வழங்கப்பட்டது. நாளடைவில் இந்நாணயத்திலுள்ள வெள்ளியினளவு சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு 5 அவுன்ஸ் நிறையுள்ளதாயிற்று. எனினும் இவ்வெள்ளி நாணயம் பவுண்டு (=20 அவுன்ஸ் நிறையுள்ள) என்ற பழைய பெயராலேயே வழங்கப்பட்டது. 1816ல் இந்நாணயம் அதிலடங்கிய வெள்ளி மதிப்புக்குச்சரியான சுமார் $\frac{1}{4}$ அவுன்ஸ் தங்க நிறைகொண்ட தங்க நாணயமாகச் செய்யப்பட்டது. பெயர் பழையபடியும் பவுண்டு தான்! தற்சமயம் 'பவுண்டு' என ஆங்கிலேயர் வழங்கும் நாணயம் (தங்கமல்ல) காற்காசுபெறாத காகிதமாயிருக்கிறது. எனினும் பெயர் பவுண்டு! (20 அவுன்ஸ் வெள்ளி நிறை).

பட்டது. மேலும் இருவர் பண்டமாற்றுச் செய்துகொள்வதென்றால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மற்றவரிடமுள்ள பண்டம் தேவையாயிருக்கவேண்டும். நெல்லை விற்போருக்கு உப்புத்தேவையில்லாவிடினும், உப்பை விற்போருக்கு நெல் தேவையில்லாவிடினும்—[ஆக ஏககாலத்தில் இவ்விருசந்தர்ப்பங்களும் ஒன்றுபடாவிடின் (absence of double coincidence)]—பண்டமாற்று நிகழாது. இக்குறையை நீக்கும் முறை யாதெனின், இருதிறத்தாருக்கும் எப்பொழுதும் பயன்றரத்தக்க பொதுப்பொருளொன்றைப் பண்டமாற்றுக் கருவியாக (medium of exchange) உபயோகித்தலாம். பற்பலவிடங்களில் பல்வேறு பொருள்கள் இம்முறையில் உபயோகிக்கப்பட்டன. சிலவிடங்களிற் புகையிலையும், சிலவிடங்களிற் போர்க்கருவிகளும், இன்னுஞ்சிலவிடங்களில் உப்பு, சர்க்கரை, தானியம் போன்ற உணவுப் பொருள்களும் உபயோகிக்கப்பட்டன. ஆனால் உலகத்தின் பெரும்பான்மையான பாகங்களிற் பசுவைப் பண்டமாற்றுப் பொதுப்பொருளாக வழங்கினர். *

12. பசு ஒரு சிறந்த பண்டமாற்றுப்பொருளே. அது தானாகவே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லக்

---

* ஆங்கிலப்பதமாகிய Capital (=‘முதல்’) caput (=தலை) என்ற லத்தீன் பதத்திலிருந்து வந்ததாகவும், அதற்குக் காரணம் பசு பண்டமாற்றுப் பொருளாக உபயோகிக்கப்பட்டதே யெனவும் மொழிநூல்வல்லார் கூறுவர். Pecuniary (=பண சம்பந்தமான) என்னும் ஆங்கிலச்சொல் Pecus (=பசு) என்ற லத்தீன் பதத்திலிருந்து தோன்றியது.

கூடியது; நெல், உப்பு, சர்க்கரை முதலியவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துய்ப்பதற்காகும் செலவும் சிரமமும் அதனிடத்து இல்லை. அதனைப் போஷிக்கச் செல்லுஞ் செலவுக்குமேல் அது பால் தரலாம்; சிலகாலம்வரை அதன் விலைமதிப்பும் உயர்ந்துகொண்டே போகலாம்; அது கிழப்பருவமெய்தி இறக்குங்காலத்தில், அதன் கன்றுகள் பெரியனவாகிப் பயன் அளிக்கலாம். ஆயினும் பசுவுக்குப் பசு மதிப்பில் வேறுபாடுண்டு. அதைக் காப்பாற்றுவதிலும் போஷிப்பதிலும் பல சிரமங்கள் உண்டு. ஆதலால் பசு சாலச்சிறந்த பண்டமாற்றுப்பொருளாக மாட்டாது.

பொதுப்பொருளின் இலக்கணம்.

13. பண்டமாற்றுக் குபயோகிக்கப்படும் பொதுப் பொருளானது எளிதில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சொற்பச் செலவில் கொண்டுபோகத் தக்கதாக (portability) இருக்கவேண்டும்; நாட்படவிருப்பினும் கெடாததும், அழியாததும், உறுதியுடையதுமாக (durability) இருக்கவேண்டும். மேலும் அது சேமித்து வைத்துக்கொள்ளத்தக்கதாகவும் (storability) நிலையான விலைமதிப்பை யுடையதாகவும் (fixity of value) இருத்தல் வேண்டும். உலோகங்கள் இவ்விலக்கணங்களை ஒருங்கே பெற்றிலங்கினமையால் நாளடைவில் பிறபொருள்கள் பண்டமாற்றில் வழங்காதொழிந்தன.

2

உலோகங்கள்
பண்டமாற்றுப் பொருளானமை
(Metals as Media of Exchange)

உலோகங்கள் பண்டமாற்றில் உபயோகிக்கப்பட்டது முதல் மக்கள் வாழ்க்கையில் பொருளாதாரத்துறையில் ஒரு புதிய மாறுதல் உண்டாயிற்று.

உலோகங்கள்
பண்டமாற்றுப்பொருளாக வழங்கிய காலம்.

2. வெண்கலமும் பொன்னும் ஆதியிற் கண்டுபிடிக்கப்பட்ட உலோகங்கள். கி.மு. 4000-ம் வருடத்திற்குமுன்னரே எகிப்தில் வெண்கலமும் சீனு, இந்தியா, பாபிலோன் தேசங்களிற் பொன்னும் பண்டமாற்றில் வழங்கலாயினவாம். இரும்பு கி. மு. 2000-ம் வருடத்திற்முன் கண்டுபிடிக்கப்பட்டது ; ஆனால் கிரேக்க தேசத்திற்றவிர வேறெவ்விடத்திலும் அது பண்டமாற்றில் உபயோகிக்கப்படவில்லையென்று தெரியவருகிறது. இட்டாலியில் செம்பும், மலேயாவில் தகரமும் பெரும்பாலும் பண்டமாற்றுப்பொருளாக உபயோகிக்கப்பட்டனவாம். †

---

† Helfferich, *Money*. Vol. 1. P. 12.

பொன் வெள்ளிகளின் இலக்கணம்.

3. இறுதியில் எல்லாத் தேசங்களிலும் பெரும்பாலும் வெள்ளியும் பொன்னும் ஆகிய இரண்டு உலோகங்களே பண்டமாற்றுப் பொருள்களாயின. ஏனெனில் அவை கிடைப்பதற்கரியனவாகவும், எல்லாராலும் விரும்பப்படுவனவாகவும் இருத்தலன்றிச் சிறிய உருவில் மிகவுயர்ந்த விலைமதிப்பையுடையனவாகவு மிருத்தலால் (high intrinsic value) அவற்றைச் சேமித்துவைத்தலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுசெல்வதும் எளிதாயினமையின்.

4. மேலும் அவை உணவுப் பொருள்களைப்போல இன்றியமையாத பயனளிப்பனவல்லவாயினும், அவற்றின் மினிரும் அழகும் அவற்றை விலையேறப்பெற்ற அணிகலன்களாக்கச் செய்கின்றன. எவ்வளவுகாலஞ் சென்றாலும் அவை அழகுகுன்றா, உருக்குலையா, * அழிவுபடா (indestructability).

5. மேலும் அவை எவ்வெவ்விடத்தி லகப்பட்டனவாயினும் அமைப்பில் ஒரே இயல்பு (homogenuity or uniformity of composition) உடையன. மேலும் அவை உருக்குவதற்கும், வார்ப்பதற்கும், முத்திரை யிடுவதற்கும் ஏற்றவையா யிருத்தலால் (mellability or plasticity) அவற்றை வெட்டவும் குறைக்கவும் (divisibility) அவ்வாறு வெட்டிக்குறைத்ததை ஒன்றுசேர்க்கவும் பொருத்தமானவை. வைரக்கற்கள் விலையேறப்பெற்றனவா

---

* 8000 வருடங்களாகச் செலாவணியிலிருந்தால் ஒரு (சாவரன்) தங்கநாணயம் முழுவதும் உருவழிந்துபோய்விடும் என ஒருவர் கணக்கிட்டுள்ளார்.

யினும் அவை இவ்விலக்கணத்தை யுடையனவல்ல; அவற்றை உருக்கவும், வார்க்கவும் இயலாது; ஒரு பெரிய வைரத்தினின்று சில சிறிய வைரங்கள் இழைத்தெடுக்க முடியுமாயினும் சிறிய வைரங்கள் பலவற்றைத் திரட்டிப் பெரிய வைரமொன்று செய்யல் இயலாது. எனவே வைரக்கற்கள் உலோகங்களைப்போல நாணயஞ்செய்வதற் குபயோகப்படா.

பண்டமாற்றில் உலோகங்களை நிறுத்து வழங்கல்.

6. இங்ஙனமாக எல்லா இலக்கணங்களும் ஒருங்கே நன்கமையப் பெற்றிலங்கினமையால், நாம் முற்கூறியபடி, உலோகங்கள் பண்டமாற்றுக்கேற்ற சிறந்த பொதுப்பொருள்கள் ஆயின. ஆயினும், பசு முதலியவற்றைப்போல* உலோகங்களை எண்ணிக்கொடுத்துப் பண்டமாற்றுச் செய்வது கூடாததா யிருந்தது. உலோகங்களைப் பண்டமாற்றுப் பொருளாக உபயோகித்தற்கு அவற்றின் நிறையை நிறுத்து, மதிப்பைக் கணக்கிடல் அவசியமாயிற்று. மேலும் அவை சிறிய உருவில் மிகவுயர்ந்த மதிப்பையுடையன வாகையால் அந்நிறையை மிக நுட்பமாகவும் அறுதியிடவேண்டுவதாயிற்று.† இதற்காகவே தராசு கண்டுபிடிக்கப்பட்டிருக்கலா மென்பது சிலர் அபிப்பிராயம்.

---

* "It has never been necessary to measure oxen; for Nature produced them in units."—*London Essays in Economics,* P. 290.

† "The high intrinsic value rendered them particularly important to ascertain with exactness the weight and composition of the separate pieces." (Helfferich, *Money,* Vol. I, P. 22)

படிக்கற்களாக வழங்கப்பட்டவை.

7. தராசு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் பண்டைக்காலத்தவர் எப்பொருளைப் படிக்கல்லாக (weights) உபயோகித்தனர் என்பதை ஆராய்வாம். பொன் வெள்ளிகளை நிறுக்க மிகச்சிறிய படிக்கற்கள் வேண்டும்; அவை எல்லாவிடத்திலும் சம நிறையுடையனவாகவும் இருத்தல் வேண்டும். இக்காலத்தவர் குறிப்பிட்ட நிறையளவுள்ள படிக்கற்களை இரும்பு முதலிய உலோகங்களினாற் செய்துகொள்ளுகின்றனர்; ஆனால் அக்காலத்தவர் இத்தகைய முறையைக் கைக்கொள்ளவில்லை. இயற்கையிலேயே எல்லா விடங்களிலும் சமநிறையுடைய சில தானியமணிகளையும், காணம், உளுந்து, குன்றி முதலிய பயறு வகைகளையுமே படிக்கற்களாக உபயோகித்து வந்தமை * பழைய நூல்களால் விளங்கும். இக்காலத்திலும் பொற்கொல்லர் குன்றி மணியைக் கீழெல்லை (unit) ஆக வைத்துப் பொன் வெள்ளி நிறையைக் கணக்கிட்டு வருதலையும் காண்க. இது நிற்க.

உலோகக்கட்டிகளின்மேல் முத்திரை பொறித்து வழங்கல்.

8. தராசும் படிக்கற்களும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் பொன்னையும் வெள்ளியையும் நிறுத்துக்கொடுத்துப்

---

* பாபிலோனியர், எகிப்தியர், கிரேத்தாத்தீவார் (Cretans) முதலானோருடைய உலோகநிறை பின்வருமாறு:—126 தானிய மணி எடை=1 சேக்கல் (Shekel); 50 சேக்கல்=1 மைனு (Mina.) ஒரு காணம் நிறையளவிற் செய்யப்பட்ட பொற்காசுகள் தமிழ்நாட்டிற் செலாவணியிலிருந்தன. பதிற்றுப்பத்துப் பாடிய புலவர்களுக்குப் பொற்காணம் பரிசிலாக வழங்கப்பட்டதென்று அந்நூலிற் பலவிடங்களிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

(by weight)§ பண்டமாற்றுச்செய்வது சுலபமான முறையாக அமைந்தது. ஆயினும் இம்முறை வர்த்தகம் மிக்க காலத்துச் சிரமமுடையதாக மாறியது. எப்படியெனின், ஒவ்வொரு தடவையும், பொருள்களை வாங்கும்போதும், விற்கும்போதும் இவ்வுலோகங்களின் நிறையையும் மாற்றையும் (fineness) சோதித்தறிவது அவசியம். அப்படிச்செய்ததனால் காலமும் உழைப்பும் வீணாயிற்று. இக்குறையை ஒழிக்குமாறு குறிப்பிட்ட நிறையளவுள்ள பொன், வெள்ளிக்கட்டிகளின்மேல் சில வர்த்தகர் தங்கள் முத்திரையை (seal) இட்டனரென்றும், இங்ஙனம் முத்திரையிடப்பட்ட கட்டிகளின் நிறையும் மாற்றும் ஐயுறுதற்கிடமில்லாதிருந்தமையால் அக்கட்டிகளை எண்ணிக்கொடுத்துப் (by tale) பண்டமாற்றுச் செய்யும் வழக்கம் எழுந்ததென்றும் சிலர் அநுமானிக்கின்றனர். *

9. உலோகத் துண்டுகளை எண்ணிக் கொடுத்தே பண்டமாற்றுச் செய்யும் முறையினால் அவற்றை நிறுக்கும் சிரமமும், மாற்றறிதலினுண்டாஞ் சிரமமும் நீங்கின. இவ்வாறு உலோகக்கட்டிகளின்மேல் முத்திரையிட்டு வழங்கி வந்ததே பின் நாணயத்தோற்றத்துக்கும் காரணமாயிற்று.

---

§ 'When units had been so fixed exchange was based upon the circulation of metals by weight.' *London Essays in Economics.*

* H. S. Jevons, *Money, Banking and Exchange in India,* P. 4.

3

நாணய வரலாறு

(The Evolution of Coins)

குறிப்பிட்ட நிறையும் மாற்றும் அடங்கியவென அத்தாட்சியிடப்பட்ட உலோகத்துண்டுகளே பொதுவாக நாணயங்கள் என வழங்கப்பெறுகின்றன.* இவ்வுலோகத்துண்டுகள் எக்காரணத்தால் எவ்வாறு அத்தாட்சியிடப்பட்டன வென்பதை இங்கு விளக்கிக்கூறுதும்.

நாணயத் தோற்றம்.

2. பண்டமாற்றுச் செய்யும் ஒவ்வொரு தடவையும் உலோகங்களைப் பெறுவார் அவற்றின் நிறையையும் மாற்றையுஞ் சோதித்தறியவேண்டுஞ் சிரமத்தை யொழிக்கவே சில வர்த்தகர்கள் பொன் வெள்ளிக் கட்டிகளின்மேல் தங்கள் முத்திரையை யிட்டனரென்று முற்கூறினோம். அவ்வாறு முத்திரையிடப்பட்ட கட்டிகளை எண்ணிக்கொண்டாலே போதுமானதாயிருந்ததை யறிந்த சிலர் அக்கட்டிகளைப் போன்ற

---

* "A coin is an ingot of which the weight and fineness are certified by the integrity of the designs impressed on the surface of the metal" (Jevons).

போலிக்கட்டிகளைச் செய்து பண்டமாற்றி லுபயோகித்துப் பொதுமக்களை மோசஞ்செய்தனர். வேறு சிலர் முத்திரையிடப்பட்ட கட்டிகளின் ஓரத்தில் ஒரு சிறிது பொன்னை முத்திரை யழியாது தேய்த்தெடுத்துப் பிறரை வஞ்சித்தனர். இதனால் முத்திரையிடப்பட்ட கட்டிகளின் நிறையையும் மாற்றையும் மக்கள் சந்தேகித்து அவற்றைக் கொள்ள மறுத்தனர். ஆகலின் சில தேசங்களில் அரசாங்கமும், சில தேசங்களில் வர்த்தகர்களும், உலோகங்களைச் சதுர வடிவமான சிறுசிறு துண்டுகளாக்கி, அவற்றின் இருபக்கங் களிலும் விளிம்புவரை முத்திரையிட் டனரென்றும், சதுர வடிவத்தில் முத்திரையிடுவது சங்கடமாகவிருந்ததால் இவ் வுலோகத் துண்டுகள் முடிவில் வட்டவடிவமாகச் செய்யப் பட்டு, விளிம்புகளிலும் வரையிடப்பட்டனவென்றுஞ் சிலர் அநுமானிக்கின்றனர்.*

3. இங்ஙனமாகச் செய்யப்பட்டு அரசாங்க முத்திரை யிடப்பட்ட உலோகத்துண்டுகளையே நாணயங்கள் (coins) என வழங்கினர். கி. மு. எட்டாம் நூற்றாண்டில் சின்ன ஆசியாவிலுள்ள (Asia Minor) "லிதியா" (Lydia) நாட்டில் முதன்முதலாக இத்தகைய நாணயங்கள் செய்யப்பட்டனவென்பது ஐரோப்பிய சரித்திர ஆசிரியர்களின் முடிபு. லிதியாநாட்டினர் நாணயஞ்செய்வதற்கு அச்சுக்களை உபயோகித்தனர். ஆனதால் நாணயங்களெல்லாம் நிறையிலும் மாற்றிலும், வடிவிலும் ஒரே இயல்புடையவாயின. இவ்வாற்றால் நாணயங்களை எண்ணிக்கொடுத்துப் பண்டமாற்றுச்செய்தல் இடையூறின்றி இனிது நிகழ்ந்தது. எவ்விதமான கொடுக்

* H. Stanley Jevons *op. cit.* P, 5.

கல் வாங்கலுக்கும் நாணயங்களே மிகுதியும் மேன்மேலும் வழங்கலாயின. *

நாணயத்தில் அரசாங்க முத்திரையிடல்.

4. ஆனால் ஒரு சில நாட்டில் வெவ்வேறு பாகங்களி லுள்ள வர்த்தகர்களும், நகர சங்கங்களும், பிரபுக்களும், சிறு பான்மை பொதுமக்களும், தனித்தனியான வெவ்வேறு விதமான நாணயங்களைச் செய்து வழங்கத்தொடங்கினர். அதனால் ஒரு நாட்டிற்குள்ளே பற்பல நிறையும் மாற்றும் அடங்கிய பல்வேறு நாணயங்கள் உலாவத்தலைப்பட்டன. அந்நாட்டின் ஒருபகுதியினர் வேறொரு பகுதியினருடன் வர்த்தகஞ்செய்வதென்றால் அப்பகுதியினருடைய நாணயங்களின் நிறையையும் மாற்றையுஞ் சோதித்தறிவது அவசியமாயிற்று. இத்தகைய நாணயங்களால் வர்த்தகத்துறையில் இடையூறுண்டாயிற்று. இவ்விடையூற்றைக் களையவும், தன் அதிகார வரம்பைப் பரப்பவும் எண்ணி, குடிகள் நாணயஞ் செய்யக் கூடாதென்றும், நாணயஞ் செய்தல் தனது சிறப்புரிமை (prerogative) எனவும் அரசாங்கம் சட்டமியற்ற நேர்ந்தது. இக்காரணத்தால் ஓரரசனின் ஆட்சிக்குட்பட்ட ஒரு தேச முழுவதிற்கும் ஒரேவித நாணயம் வழங்கலாயிற்று.

---

* "Minting on a uniform basis more than the guarantee of content and weight has widened the field of the metals as money" (Helfferich, *op. cit*, P. 23).

4

நாணயமதிப்பும் உலோகமதிப்பும்

(The Value of Money and the Money Metals)

நாணயம் அரசாங்க வரம்பிற்குட்பட்டது ஒரு அரிய நிகழ்ச்சியே. அக்காரணத்தினாற்றான் நாணயங்கள் நாடெங்கணும் எல்லா மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டுச் செலாவணியாகத் தொடங்கின.* மேலும் நாணயத்தை வெளியிடுவது அரசனின் தனியுரிமையாயிற்றாதலால் ஒவ்வொரு நாணயத்தின் மதிப்பையும் திட்டஞ்செய்வதற்கும் அவனே தகுதியுடையவனாயினான். அதனால் ஒரு நாணயத்தின் மதிப்பு அது செய்யப்பட்டுள்ள உலோகத்தின் விலை மதிப்பை யொட்டி யிராமல் அந்நாணயத்தின்மேல் அரசனிடும் மதிப்பையே சார்ந்துநிற்கும் என்ற கோட்பாடும் எழுந்தது. இக்கருத்தை விளக்க இரு உதாரணங்கள் தருவாம்.

---

* It secured for the coins that "widespread and general acceptability which its nature demands" (Helfferich).

அரசாங்கம் நாணயமதிப்பைத் திட்டஞ்செய்ததற்கு இரு உதாரணங்கள்.

2. கி. மு. ஆரும் நூற்ருண்டில் (594. B. C.) ஆதன்ஸ் நகரத்தில் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்ட சோலோன் (Solon) என்பான் அந்நாட்டு வெள்ளி நாணயங்களின் நிறையைக் கால்வாசி குறைத்தது மன்றிக் குடிகள் எல்லோரும் மதிப்புக்குறைந்த அப்புதியநாணயங்களை முழுநிறையுள்ள பழைய நாணயங்களின் மதிப்புப்படியே அங்கீகரிக்கவேண்டு மெனவும் ஆக்ஞாபித்தான். குடிகளும் அவ்வாறே செய்தனர்.

3. இந்திய சரித்திரத்திலும் இதற்கு ஒருதாரணமுண்டு. தொக்லக் (Tuglak) என்ற மகமதிய அரசன் (கி. பி. 1325–1351) அரையணு மதிப்புள்ள செப்புக்காசுகளைப் பதிப்பித்து அவற்றை வெள்ளிக்காசுகளாகிய ரூபாயின் மதிப்புக்குச் சமமாகக் குடிகள் வழங்கவேண்டுமெனக் கட்டளையிட்டான். குடிகளும் சிலகாலம் அவற்றை அவ்வாறே வழங்கிவந்தனர். ஆனல் செப்புக்காசுகளைப் பதிப்பித்து அவற்றை உயர்ந்த மதிப்புடன் வழங்கச்செய்வதலாலுண்டாம் இலாபத்தையறிந்த பலரும் அரசன் பதிப்பித்தாற்போலத் தத்தம் சொந்தச் செப்புக்காசுகளை வெளியிட்டனர். அதனுல் அவ்வரசனியற்றிய திட்டம் பிழைபட்டொழிந்தது.

4. நாம் இங்குக் கூறிய இரண்டு உதாரணங்களிலும் அரியதோர் உண்மை அறியக்கிடக்கின்றது. அது நாணயம் உலோகத்தால் ஆனதாயினும் அவ்வுலோகத்தின் வி

மதிப்புக்கும் நாணயத்தின் விலைமதிப்புக்கும் நேர்சம்பந்தம் இருக்கவேண்டும் என்ற நிமித்தம் இல்லை; நாணயமதிப்பை உலோகமதிப்பினின்றும் வேறாக இருக்கலாம் என்பதேயாம்.

நாணயமதிப்பை அரசாங்கம் திட்டஞ்செய்யாமை.

5. உலோகமதிப்பு அதன் உற்பத்திக்குந் தேவைக்குந் தக்கவாறு ஏற்றத்தாழ்ச்சி யுறலாம்; ஆனால் நாணயமதிப்போ அரசனுக்கிஷ்டப்படி நிலைபெறலாம். இவ்வுண்மையைப் பண்டைக்காலத்தவர் ஒருசிறிது அறிந்திருந்தும் அதனை அவர்கள் கோட்பாட்டிலும் வழக்கிலும் கொண்டொழுகாது விட்டனர். ஆதியிலிருந்தே அரசாங்கம் நாணயமதிப்பை உலோகமதிப்பினின்றும் பிரித்துத் தனிப்பட வைத்துவந்திருப்பின் உலோகங்களின் உற்பத்தியில் இயல்பாய் எழுந்த ஏற்றத்தாழ்வினால் அவற்றின் விலைமதிப்பிலேற்பட்ட மாறுதல்கள் நாணயத்தின் விலைமதிப்பை மாற்றியிரா. அங்ஙனஞ் செய்யாததனால் பலநூற்றாண்டுகளாக உலோகமதிப்பிலேற்பட்ட மாறுதலுக் கேற்றவாறெல்லாம் நாணயமதிப்பும் மாறிவந்தது.)

நாணயத்தின் புறமதிப்பும் அகமதிப்பும்.

6. நாணயமதிப்பென்பது குறிப்பிட்ட நிறையும் மாற்று மடங்கிய உலோகத்துண்டுகளுக்குக் காலணா, நான்கணா, ஒருரூபாய், ஒருபவுண்டு, பத்துடாலர் என்றிவ்வாறு அரசாங்கத்தாரிடும் விலையாம். எனவே நாணயமதிப்பு அரசாங்கத்தார் மதிப்பு (official valuation) எனவும், அம்

மதிப்பு நாணயங்களின் மேற்புறத்திற் பொறிக்கப்பட்டிருப் பதால் அது புறமதிப்பு (face value) எனவும் வழங்கப் பட்டது. ஆயினும் இவ்வரசாங்க மதிப்பைப் பொதுமக்கள் அங்கீகரிக்காது அந்நாணயங்களி லடங்கியிருந்த உலோக மதிப்புப்படியே அவற்றை விலைமதித்தனர். அதனால் பொதுமக்களும் வர்த்தகர்களும் நாணயத்திற்களித்த மதிப்பு உலோகமதிப்பு (bullion value) எனவும், வர்த்தக மதிப்பு (commercial valuation) எனவும், மேலும் இம்மதிப்பு அந்நாணயங்களி லடங்கிய உலோகத்தின் மதிப்பாகையால் இது சுயமதிப்பு (actual value) எனவும் அகமதிப்பு (intrinsic value) எனவும் வழங்கப்பட்டது.

7. தாம் அளித்த மதிப்பொன்றையே அரசாங்கம் நாணயமதிப்பாக நிலைபெறச் செய்யாததால் மக்கள் நாண யங்களின் மதிப்பை அகமதிப்பு புறமதிப்பு என இருவகைப் பட்டதாகக் கருதிவந்தனர். ஆதலால் அவர்கள் அகமதிப் பும் புறமதிப்பும் சமமாகவிருந்த நாணயங்களையும், அன்றிப் புறமதிப்பைக் காட்டிலும் அகமதிப்புக்கூடிய நாணயங்களை யுமே நல்ல நாணயங்கள் (good money) எனவும், அகமதிப் பைக்காட்டிலும் புறமதிப்பு அதிகமாக விருந்த நாணயங் களைக் கெட்ட நாணயங்கள் (bad money) எனவுங் கருதி வந்தனர். நல்ல நாணயங்கள் எனக் கருதப்பட்டவை முழு நிறை (full-valued) நாணயங்கள்; கெட்டவை எனக் கருதப்பட்டவையோ நிறைகுறைந்தவை (light coins).

8. அகமதிப்பு புறமதிப்பு என இருவித மதிப்புடை யனவாய் நாணயங்கள் விளங்கிவந்தமையினால் விளைந்த கேடுகள் பல, அவற்றைக் கீழே விளக்கிக் காட்டுவோம்.

நிறைகுறைந்த வெள்ளி நாணயங்களை செலாவணியிலிருத்தல்.

9. இங்கிலாந்துதேசத்தில் **1504**-ம்வருடத்தில் குறிப்பிட்ட நிறையளவில் 'ஷிலிங்' (Shilling)என்னும் ஒருவகை வெள்ளிநாணயம் வெளியிடப்பட்டது. இந்நாணயஞ் செய்த காலத்தில் அதிலடங்கிய வெள்ளிமதிப்பும் (bullion value) அதற்கு அரசாங்கத்தா ரிட்ட நாணயமதிப்பும் (value in the money of account)சமமாக விருந்தது. ஆனால் **16**-ஆம் நூற்றாண்டின் பின்னர் வெள்ளி உற்பத்தி மிகுதியினால் அதன்விலை குறைந்துவிடவே ஷிலிங் நாணயத்தி லடங்கிய உலோகமதிப்புக் குறைந்தும், நாணயமதிப்பு உயர்ந்தும் விளங்கின. இவ்வாறாக ஷிலிங் நாணயத்தின் அகமதிப்பைக்காட்டிலும் புறமதிப்புக் கூடியதால் அது கெட்டநாணயமாகக் கருதப்பட்டது. **1504**க்குப்பின் வெளியிடப்பட்ட ஷிலிங் நாணயங்கள் முழுமதிப்புடையனவாக விருந்தமையால் அவை நல்லநாணயங்களாகக் கருதப்பட்டன. இங்ஙனமாக முழுமதிப்புள்ள நல்ல நாணயங்களும், மதிப்புக்குன்றிய கெட்ட நாணயங்களும் ஏககாலத்திற் செலாவணியிலிருந்து வந்தன.

10. ஆனால் குடிகள் முழுமதிப்புள்ள நாணயங்களையே பெறவிரும்புவர். ஆதலின் நல்ல நாணயங்கள் தம் கைவசப்பட்டபோழ்து அவர்கள் அவற்றைச்சேமித்தும் புதைத்தும் வைக்க ஆரம்பித்தனர். அன்றி, அவற்றைப் பொற்கொல்லர் உலைக்கனுப்பி உலோகமாக மாற்றி விற்றனர். வேறு சிலர் அவற்றை அயல்நாடுகளுக் கனுப்பி உயர்ந்த விலையைப் பெற்

றனர். இவ்வாறாக நல்ல நாணயங்களெல்லாம் செலாவணிய யற்றன. கெட்ட நாணயங்கள்மட்டுமே செலாவணியி லிருந்துவந்தன.

கிரேஷாம் விதி.

11. இந்நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற எலிசபெத்து மகா ராணியின் மந்திரியான **ஸர் தாமஸ் கிரேஷாம்** என்பவர் நாணயத்தின் உலோகமதிப்புக்கும் அரசாங்கமதிப்புக்கும் மேற்கூறியவாறு வேறுபாடு எழுந்தால் ‘கெட்ட நாணயங் கள் நல்ல நாணயங்களை வெருட்டிவிடும்’ (bad money drives out good money) என விதிரூபமாக இவ்வுண் மையை விளக்கிக் காட்டினர். [ஆகலின் இற்றைக்கும் இதைக் ‘கிரெஷாம் விதி’ (Greshom’s Law) என வழங்கி வருகின்றனர்.] கெட்ட நாணயங்களே செலாவணியிலி ருந்தமையால் விளைந்த கேடுகளை யொழிக்குமாறு ஸர் தாமஸ் கிரெஷாம் அக்கெட்ட நாணயங்களைக் குடிகளிட மிருந்து திருப்பிப் பெற்றுக்கொண்டு அவற்றிற் கீடாகப் புதிய நல்ல வெள்ளி நாணயங்களை வெளியிட்டுக் கொடுத் தார். நாணயத்தின் நிறையை மாற்றிப் புதிதாகப் பதிப் பித்தலால் அரசாங்கத்துக்குச் செலவும் சிரமமும் உண்டா யிற்றென்பதை நாம் விளக்கிக்காட்ட வேண்டியதில்லை. உலோகமதிப்பையும் நாணயமதிப்பையும் வேறாக்காததால் விளைந்த கேட்டுக்கு இந்நிகழ்ச்சி ஒரு சிறந்த உதாரணம்.

தங்க நாணயங்கள் செலாவணியற்றல்.

12. ஸர் தாமஸ் கிரெஷாம் என்பவரால் வெளியிடப்பட்ட நல்ல வெள்ளி நாணயங்கள் சிறிது காலம் செலாவணியிலிருந்தன. ஆனால் வெள்ளி உற்பத்தி மேன்மேலும் மிகுதிப்பட்டதனால் அந்நாணயங்களின் அகமதிப்புக் குன்றியும் புறமதிப்புக் கூடியும் நின்றது. மேலும் இதுகாறும் அத்தேசத்திற் செலாவணியாகிவந்த தங்க நாணயங்களின் அகமதிப்போ வெள்ளி நாணயங்களின் அகமதிப்போடு ஒப்பிடும்போது உயர்ந்து காணப்பட்டமையால் எல்லோரும் தங்க நாணயங்களையே பெற்றுக்கொள்ள விரும்பி அவற்றைச் சேமித்தும் புதைத்தும் வைக்க ஆரம்பித்தனர். சிலர் அவற்றை உருக்கி உலோகமாக விற்றனர். வேறு சிலர் அவற்றைப் பிறநாடுகளுக்கு அனுப்பினர். இவ்வாற்றால் நல்ல நாணயங்களாகிய தங்க நாணயங்கள் செலாவணியற்றனவாகவும் கெட்ட நாணயங்களாகிய வெள்ளி நாணயங்கள் மட்டுமே செலாவணியிலிருந்துவரவு மாயிற்று.

13. இங்ஙனமாக உலோகமதிப்புக்கும் நாணயமதிப்புக்கும் உள்ள வேறுபாட்டால் கெட்டநாணயங்களும் நல்ல நாணயங்களும் ஏககாலத்திற் செலாவணியிலிருந்துவரும் பொழுது நல்லநாணயங்கள் செலாவணியற்றுப் போவனவாய்க் காணப்பட்டன. மீண்டும் மீண்டும் நாணயங்களைப் புதிப்பித்து அகமதிப்பும் புறமதிப்பும் சமமாக இருக்கச் செய்யல் அரிது. ஏனெனில் வெள்ளி தங்க உலோகங்களின் உற்பத்தியில் எப்பொழுதும் மாறுதல் ஏற்பட்டுக்கொண்டு வந்தது. இக்கேடுகளைப் போக்க ஆங்கிலேயர் இருமுறை

களைக் கையாடினர். அவற்றின் பயனாக உலகிற்கே ஒரு புதிய நாணயத்திட்டம் அமைக்கப்படலாயிற்று. அத்திட்டத்திற்குத் தங்கநாணயத்திட்டம் எனப் பெயர்.

14. குறிப்பிட்ட நிறையும் மாற்றுமடங்கிய உலோகத்துண்டுகளுக்குக் குறிப்பிட்ட விலைமதிப்பையிட்டு வழங்குவதே நாணயமென முன்னர் இலக்கணங் கூறினோம். இத்தகைய நாணயங்கள் ஒரு தேசத்தில் வழங்கப்பெறுமாயின் அவை யிவையிவையென வரையறுத்து, வெள்ளி தங்க நாணயங்கள் இரண்டும் செலாவணியிலிருப்பின் அவற்றின் மாற்றுவிகிதத்தைத் திட்டஞ்செய்து, ஒவ்வொரு நாணயத்தின் மொத்தச் செலாவணியின் அளவையும் சட்டப்படி நிர்ணயித்து அமைப்பதே நாணயத்திட்டம் என்னப்படும். இதுகாறும் ஏற்படுத்தப்பட்ட நாணயத்திட்டங்கள் வெள்ளிநாணயத்திட்டம் (silver standard), தங்கநாணயத்திட்டம் (gold standard), இரட்டை நாணயத்திட்டம் (bimetallic standard), தங்கமாற்றுத்திட்டம் (gold exchange standard) எனப் பலவகைப்படும். அவை ஒவ்வொன்றையும் மேல்வரும் அத்தியாயங்களில் விரித்துக் காட்டுவோம்.

5

தங்கநாணயத் திட்டம் *

(The Gold Standard)

(நாணயமதிப்பு அடிக்கடி மாறுபட்டதால் நாணயச் செலாவணியில் விளைந்த இடைஞ்சல்களுக்குக் காரணம் பூமிதேவியின் அகட்டினின்றும் தங்கமும் வெள்ளியும் ஆகிய இரண்டு உலோகங்களும் கண்டெடுக்கப்பட்டதே யெனவும், இவற்றுள் ஏதேனும் ஒரு உலோகம்மட்டுமே மக்கள் கையில் அகப்பட்டிருப்பின் நாணயத்திட்டங்களிற் பெருங்குழப்பங்கள் நேர்ந்திரா எனவும் ஓராசிரியர் கூறுகிறார். †).

---

* வெள்ளிநாணயத் திட்டம் இந்தக் கட்டுரையிலும் இனி வருங் கட்டுரைகளிலும் பேசப்படுமாதலால் முதலில் தங்கநாணயத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

† 'When precious metal was accepted as the best and the most enduring medium of exchange, it is unfortunate that the earth should have contained two metals suitable for the purpose. Had only gold or only silver been within reach of man, most of the troubles and difficulties of monetary systems from the earliest times down to the present day would have been avoided' (H. B. Turle, *An Outline of Indian Currency*, P. 2).

இரட்டைநாணய வழக்கத்தால் விளைந்த பிரதிகூலங்கள்.

2. தங்கநாணயங்களும் வெள்ளிநாணயங்களும் ஏக காலத்திற் செலாவணியிலிருக்கையில் அவற்றின் உலோக மதிப்பில் ஏற்பட்ட மாறுதல்களினால் நாணயத்திட்டங் களிற் குறைகள் எழுந்தமை உண்மையே. ஆயினும் இக் குறைகளுக்குக் காரணம் இவ்வுலோகங்களை நாணயஞ்செய் தற்கு உபயோகித்த லன்று எனவும், நாணயமதிப்பை உலோகமதிப்பினின்றும் வேறாக இறக்காததே யாம் என வும் நாம் முந்தின கட்டுரையில் தெளிவுற விளக்கினோம். ஏனெனில் வெள்ளி தங்கங்களில் ஏதேனும் ஒன்றை நாண யஞ்செய்தற் குபயோகித்த காலத்தும் நாணயச் செலாவணி யிற் பல இடைஞ்சல்கள் விளைந்துகொண்டுதான் இருந்தன. ஆயினும் இவ்விரண்டு உலோகங்களாலாய நாணயங்களையும் ஏககாலத்தில் வழங்கிவந்ததனால் இவ்விடைஞ்சல்கள் பல வாகப் பெருகின.

தங்கநாணயம் ஒன்றே வழங்கியதால் விளைந்த அநுகூலங்கள்.

3. சென்ற நூற்றாண்டில் முதலாவது இங்கிலாந்தும் பின்னர் இதர தேசங்களும் வெள்ளி தங்கம் ஆகிய இரண்டு உலோகங்களையும் நாணயஞ்செய்வதற் குபயோகியாது மதிப்புக்குறைந்த வெள்ளியை விலக்கி, மதிப்புநிறைந்த தங்கத்தையே நாணயஞ்செய்வதற்குரிய உலோகமாக ஆக் கின. அதன் பயனாக இருவகை நாணயங்களும் செலா வணியிலிருந்த காலத்து நிகழ்ந்த இடையூறுகள் நீங்கின. ஒரேவகை உலோகத்தாலாய நாணயம் ஒன்றே வழங்கப் பட்டதால் இத்திட்டத்திற்கு ஏகநாணயத் திட்டம்

(monometallism) எனவும், இந்நாணயம் தங்கமாக விருந்ததால் இதற்குத் தங்கநாணயத் திட்டம் (gold standard) எனவும் பெயர் வழங்கப்பட்டது. தங்கத்திட்டத்தை ஆங்கிலேயர் முதன்முதல் எக்காரணத்தால் தங்கள் தேசத்தில் அமைத்தனர் என்பதைக் கீழே விவரிப்பாம்.

4. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுமுதல் இங்கிலாந்தில் வெள்ளிநாணயங்களே பிரதான நாணயங்களாக வழங்கப்பட்டன. கி. பி. 16-ம் நூற்றாண்டில் தென் அமெரிக்க நாடுகளினின்றும் மிகுதியான வெள்ளி கண்டெடுக்கப்பெற்று அது ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாக்கப்பட்டதால் வெள்ளி விலை குறைந்து, வெள்ளிநாணயத்தின் அகமதிப்புக் குன்றியது. அதனால் நல்ல வெள்ளிநாணயங்களும் அகமதிப்புக்கூடி விளங்கிய தங்கநாணயங்களும் செலாவணியற்றன. எனவே நாணயத்தின் அகமதிப்பும் புறமதிப்பும் சமமாகும்படி அதன் நிறையைப் பன்முறையும் மாற்றிப் புதுநாணயங்களை வெளியிடுதலா லுண்டாஞ் சிரமத்தையும் செலவையும் அகற்றுமாறு ஆங்கிலேயர் 1663-ம் வருடத்தில் ஒரு சட்டமியற்றினர். அச்சட்டத்தின்படி குடிகள் வேண்டும்போதெல்லாம் வெள்ளியையும் தங்கத்தையும் நாணயசாலைக்குக் கொண்டுபோய்க் கொடுத்து அவற்றைச் செலவில்லாமல் அரசாங்கத்தார் நாணயமாகப் பதிப்பித்துத்தரப் பெற்றுக் கொள்ளலாம் என விளம்பரமிடப்பட்டது.

நாணயஞ்செய்துகொள்ளும் உரிமையைக் குடிகளுக்கு வழங்கல்.

5. இதுகாறும் குடிகளுக்கு வேண்டும் நாணயத்தின் அளவைத் (quantity of currency) தாமே திட்டஞ்

செய்து நாணயஞ் செய்தலைத் தமது சிறப்புரிமையாகக் கொண்டிருந்த ஆங்கில அரசாங்கத்தார் அவ்வுரிமையைக் குடிகளுக்கு வழங்கியது ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். இதனால் நாணயச் செலாவணியிற் பல புதிய மாறுதல்கள் விளைந்தன. நாணயத்தின் அளவைத் திட்டஞ்செய்தல் குடிகளின் உரிமையாயிற்றுதலால் உலோக உற்பத்தி மிக்க காலத்து நாணயச் செலாவணி அதிகரித்தது; குன்றிய காலத்து அது குறைந்தது.

6. மேலும் இச்சட்டத்தால் நாணயத்தின் அகமதிப்புக்கும் புறமதிப்புக்கும் உள்ள வேறுபாடு காரணமாகக் கிரெஷாம் விதிப்படி விளைந்த கேடுகளிற் சிலவும் நீங்கின. எவ்வாறெனின் தங்கம் வெள்ளி ஆகிய இவ்வுலோகங்களின் விலைமதிப்பு அவற்றாலாய நாணயங்களின் அகமதிப்பினுங் குறையுமாயின் அந்நாணயங்களைக் குடிகள் பொற்கொல்லர் உலைக்கனுப்பி அவற்றை உலோகமாக உருக்கி விற்றுவிடுவதால் அவை செலாவணியற்று மறைந்தன. ஆனால் 1663-ம் வருடச் சட்டப்படி செலவில்லாமல் (free coinage) எல்லாக் குடிகளுக்கும் நாணயஞ்செய்யுமுரிமை (open mint) வழங்கப்பட்டதால் உலோகங்களின் விலைமதிப்புக் குன்றியகாலத்து அவற்றை நாணயசாலைக்குக் கொண்டுபோய் அகமதிப்புக் கூடிவிளங்கும் நாணயங்களாகச் செய்துகொள்ளலாமாதலால் அகமதிப்புக்கூடி விளங்கும் நாணயங்களை அவர்கள் உலோகமாக உருக்கி விற்கவேண்டும் நிமித்தம் இல்லை. உலோகங்களைக் குறைந்தவிலைக்கு வாங்கிப் பழையநிறையுள்ள (ஆனால் அதிக விலைமதிப்புள்ள) நாணயங்களாக மாற்றிக்கொள்வதாற்

கிடைக்கும் இலாபமும் அகமதிப்புக்கூடி விளங்கும் நாணயங்களை வாங்கி உலோகமாக விற்பதி லடங்கிய இலாபமும் சமம் என்பதைக் கணக்கிட்டுக் கண்டுகொள்க.

வெள்ளிநாணயங்கள் செலாவணியற்றமை.

7. 1663-ம் வருடச் சட்டத்திலுள்ள ஒரு குறைபாடு காலப்போக்கில் விளங்கலாயிற்று. 16-ம் நூற்றூண்டில் வெள்ளி உற்பத்தி மிகுந்தாற் போல 19-ம் நூற்றூண்டில் தங்க உற்பத்தி மிகுந்தது. ஆஸ்திரேலியா, காலிபோர்னியா ஆகிய இடங்களிலுள்ள கனிகளினின்றும் மிகுதியான தங்கம் வெட்டி யெடுக்கப்பட்டு அது பலவிடங்களுக்கும் ஏற்றுமதி யாக்கப்படவே, தங்கவிலை குறைந்தது. அதன் விளைவாகத் தங்க நாணயங்களின் அகமதிப்புங் குறைந்தது. வெள்ளி விலைமதிப்பும் வெள்ளி நாணயங்களின் அகமதிப்போ உயர்ந்தன. கிரெஷாம் விதிப்படி அகமதிப்புக் கூடிய வெள்ளி நாணயங்கள் நல்ல நாணயங்களாகவும், அவ்வாறில்லாத தங்க நாணயங்கள் கெட்ட நாணயங்களாகவும் விளங்கினமையின் வெள்ளி நாணயங்கள் செலாவணி யற்றனவாகத் தங்க நாணயங்கள்மட்டுமே செலாவணியிலிருந்து வந்தன.

வெள்ளிநாணயங்களை விலக்கல்.

8. தங்க நாணயங்கள் மிகுதியாகத் தேசத்திற் செலாவணியிலிருப்பது சிறப்பெனநினைத்து ஆங்கிலேயர் 1816ல் வெள்ளிநாணயங்களை முழுமதிப்புடைய பிரதானநாணயங்களாக வழங்குவதை யொழித்து அவற்றைக் குறைந்த

செலாவணியுடைய (limited legal tender) * சில்லரை (subsidiary) நாணயங்க ளாக்கினர்; ஆதலின் அவற்றின் அளவைத் திட்டஞ்செய்வதும் அவற்றை வெளியிடுவதும் அரசாங்கத்தின் தனி உரிமையாக்கப்பட்டது.

தங்கத்தையே நாணயஞ்செய்தற்கான உலோகமாக்கல்.

9. தங்கம் ஒன்றே எல்லா விலையையும் அறுதியிடும் மதிப்புக்கருவியாகக் கொள்ளப்பட்டதால் தங்கநாணய மொன்றே எத்தொகைக்கும் சட்டப்படி செலாவணி யாந் தன்மையதான (unlimited legal tender) முக்கிய நாணயமாக (principal coin) ஏற்படுத்தப்பட்டது. ஆதலின் அது முழுமதிப்புடையதாக இருக்கவேண்டுமென்றும், அவ் வாறிருத்தற்கு அதன் அகமதிப்பும் புறமதிப்பும் சமமாக இருக்கவேண்டுமாதலால் குடிகள் வேண்டும்போதெல்லாம் எந்த அளவிற்குத் தங்கத்தைக் கொடுப்பினும் அதைச்செல வில்லாது அரசாங்கத்தார் நாணயமாகச் செய்து கொடுப்ப ரென்றும் சட்டமியற்றினர்.

நாணயத்துக்குத் தங்கத்தை மாற்றிக்கொடுத்தல்.

10. ஆயினும் தங்கத்தின் விலைமதிப்பு உயருங் காலத்துத் தங்கநாணயங்கள் உருக்கி உலோகமாக மாற்றப்

---

* ஒருவருக்குச் செல்லவேண்டிய கடனுக்கு முழுமதிப்பற்ற இந்நாணயங்களைக் கொடுத்தால் அவர் நஷ்டமடைவ ராதலால் அவற்றை அவர் ஒப்புக்கொள்ளச் சட்டப்படி கட்டுப்பட்டவராகார் என்பது கருத்து. இற்றைக்கும் இவ்வெள்ளிநாணயங்கள் 2 பவுண்டு வரைக்குமே சட்டப்படி செலாவணியாகத்தக்கன.

படு மாகையால் அதைத் தடுப்பதற்காகக் குறிப்பிட்ட நிறையும் மாற்று மடங்கிய தங்கத்தைக் குடிகள் கொடுத்தால் அதை எப்படி அரசாங்கத்தார் நாணயமாக மாற்றிக் கொடுக்க ஒப்புக்கொண்டார்களோ அப்படியே நாணயத்தைக் கொடுத்து உலோகத்தைக் கேட்பாருக்கு அவ்விலைப் படியே உலோகத்தைக் கொடுப்ப தென்றும் அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டனர்.

11. இங்ஙனமாக உலோகத்துக்கு நாணயமும், நாணயத்திற்கு உலோகமும் குறிப்பிட்ட விலையில் அரசாங்கத்தார் எப்பொழுதும் மாற்றிக் கொடுக்கும்படி சட்ட மியற்றப்பட்டதால் நாணயத்தின் அகமதிப்பிலும் புறமதிப்பிலும் ஏற்படும் வேறுபாட்டால் விளையுங்கேடுகள் ஒழிந்தன.

தங்கத்தின் விலையை நிலைநிறுத்தல்.

12. 1816-ல் ஆங்கில அரசாங்கத்தார் மேற்கூறியவாறு ஏற்படுத்திய விலைமதிப்பு ஒரு அவுன்ஸ் தங்கத்திற்கு **3** பவுண்டு, **17** ஷிலிங், **10½** பென்ஸ் என்பதாம். இவ்விலை மதிப்பு நிலைபேறுடையதாக விருப்பதற்காகவே இவ்விதப்படி எவ்வளவு தங்கத்தைக் கொடுத்து நாணயங் கேட்பினும் எவ்வளவு நாணயங்களைக் கொடுத்து உலோகங் கேட்பினும், அரசாங்கத்தார் விற்று வருவதாகச் சட்ட மியற்றப்பட்டது.

13. ஒரு அவுன்ஸ் நிறையுள்ள **22** மாற்றுத் தங்கத்திற்கு 3ப. 17ஷி. 10½பெ. என ஒரு விலையை ஆங்கிலேயர் நிர்ணயித்து, அவ்விலை நிலைத்துநிற்றற்கு வேண்டும் முறை

களை ஏற்படுத்தியது நாணய சரித்திரத்தில் மிக அரிய நிகழ்ச்சியாகக் கொண்டாடத்தக்கது. தங்கத்துக்கும் தேச நாணயத்துக்கும் மாறாத விலைமதிப்பை யிணைத்ததனாற்றான் தங்கவிலை ஸ்திரமாக இருந்துவந்தது. ஒரு அவுன்ஸ் 22 மாற்றுத் தங்கத்துக்கு 3ப. 17ஷி. 10½பெ. விகிதப்படி எப்பொழுதும் எந்த அளவிலும் அரசாங்கத்தார் குடிகளிடமிருந்து தங்கத்தைப் பெற்றுக்கொண்டு அதைச் செலவில்லாது நாணயமாகப் பதிப்பித்துக் கொடுத்தும் (open mint and free coinage) அதே விகிதப்படி தங்கத்தைக் குடிகள் வேண்டும்போதெல்லாம் நாணயத்திற் கீடாகக் கொடுத்தும் வருவார்களாயின் தங்கவிலை ஸ்திரமாக இருந்துவருவதில் ஐயமென்ன? * குறிப்பிட்ட நிறையும் மாற்றுமுள்ள தங்கத்துக்குத் தேசநாணயக் கணக்கின்படி (in the money of account) ஒரு மாறாத விலைமதிப்பை ஏற்படுத்துவதனாற்றான் தங்கவிலை ஸ்திரமாக நிலைநிறுத்தப் படுகிறது.

---

* 'While Britain continued to be a free buyer and a free seller of gold at a fixed price no other value of gold was possible. If gold tended to rise above (this) price it could be purchased in unlimited quantities at the Bank of England and a profit secured. On the other hand, if gold tended to fall below that price it would be sold to the Bank of England also at a profit'. (Sir Charles Morgan Webb, *The Rise and Fall of the Gold Standard*, Pages, 49, 50).

தங்கநாணயத் திட்டம்

14. **1816ல்** ஆங்கிலேயர் வெள்ளியை விலக்கித் (demonetisation of silver) தங்க மொன்றையே மதிப்புக் கருவியாகக் கொண்டமையால் இங்கிலாந்தில் தங்க நாணயத் திட்டம் அமைக்கப்பட்டது என்பர் ஒரு சிலர். இவ்வாறு கூறுவது தோற்றத்தால் உண்மையே யன்றித் தங்க நாணயத் திட்டத்தின் உட்கருத்தை விளக்குவதன்றும். தங்கநாணயத் திட்டம் குறிப்பிட்ட நிறையுள்ள தங்கத்தில் தேசநாணயத்தைச்செய்து வழங்குவதுமட்டுமன்று; அது குறிப்பிட்ட நிறையுள்ள தங்கத்துக்குத் தேசநாணயக் கணக்கின்படி மாறாத விலையை இறுத்து நிலைபெறுத்தலேயாம்.* ஆதலாற்றான் ஆங்கிலேயர் **1816ல்** இயற்றிய சட்டம் நாணய சரித்திரத்திற் பெருஞ் சிறப்புவாய்ந்ததாகக் கொண்டாடப்படுகிறது.

---

* மூன்று ஆங்கில ஆசிரியர்கள் கீழ்க்கண்டவாறு தங்கநாணயத் திட்டத்திற்குச் சொற்பொருள் விரித்துள்ளனர். இத்திட்டத்திற்கு இலக்கணங் கூறப்பட்ட பலவற்றுள் அவை சிறந்தனவாகையால் அவற்றை இங்குக் குறிப்பிடுகிறோம்.

'The money of account has a value equal to the value of a specified weight of gold' (Weston, ***Banking and Currency***).

'When a country adopts the gold standard it makes its currency worth a stated amount of gold' (Sir Arthur Salter, *Recovery*, P. 59).

'The great merit of the gold standard was its logic, not its gold......The currency revolution effected by Bri-

15. குறிப்பிட்ட நிறையும் மாற்று மடங்கிய தங்கத்துக்கு அளிக்கும் விலை நிலைபெற்றிருப்பதற்கு வேண்டும் முறைகள் நான்கு. அவை (1) செலவில்லாது தங்கநாணயங்களைப் பதிப்பித்துக் கொடுத்தலும் (free coinage), (2) அரசாங்க நாணயசாலைகளின் மூலமாக நாணயஞ் செய்து கொள்ளும் உரிமையை எல்லாக் குடிகளுக்கும் வழங்கலும் (open mint), (3) தங்க ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்துக்குத் தடையின்மையும் (free market for gold), (4) குறிப்பிட்ட அளவு தங்கத்தைக் குறிப்பிட்ட விலைக்கு எந்த அளவுக்கும் வாங்கலும் விற்றலும் (unlimited purchase and sale of gold at a fixed price) ஆம். இங்குக் காட்டிய முதல்மூன்றுமுறைகளும் நான்காவதனுள் அடங்குமாதலால் அதுவே முக்கியமானதாம். ஏனெனில் குடிகள் வேண்டும்போதெல்லாஞ் செலவில்லாது நாணயஞ் செய்து கொடுக்க முடியாவிடினும், தங்க வர்த்தகத்துக்குத் தடையிருப்பினும், தங்கவிலை ஸ்திரமாக நிற்காது; எனினும் குறிப்பிட்ட விலையில் அரசாங்கத்தார் அல்லது தலைமைப் பாங்கி (Central Bank) தங்கத்தை எந்த அளவிற்கும்

---

tain was much more fundamental than a mere transfer from silver to gold...The transfer was from a weight of silver to a value of gold...It was the spectacular nature of the transformation from silver to gold which caught the eye. The real nature of the transformation, from an illogical standard of weight to a scientific standard of value was appreciated only by the expert. (Sir Charles Morgan—Webb, *op. cit.* pp. 14—15).

வாங்கியும் விற்றும் வந்தால் தங்கவிலை நிலைபெறுமாதலால் அதுவே தங்கநாணயத் திட்டத்திற்கு அடிப்படையான நியமமாகும்.

தங்கத்திட்டம்.

16. கடந்த ஐரோப்பிய யுத்தத்திற்குப்பின் மேனாடுகள் பலவற்றுள் தங்கநாணயச் செலாவணி நீங்கியது. (காரணங்கள் இனிவருங் கட்டுரைகளிற் கூறப்படும்.) ஆயினும் அந்நாடுகளிலுள்ள அரசாங்கமேனும் தலைமைப் பாங்கியேனும் குறிப்பிட்ட விலைக்குத் தங்கத்தை வாங்கியும் விற்றும் வந்தன வாகையால் அவை தங்கநாணயத் திட்டத்தைக் கைக்கொண்டிருந்தனவாகவே கருதப்பட்டன. ஏனெனில் அவ்வாற்றால் அந்நாடுகள் தங்க விலையை நிலைபெறச்செய்துவந்தன.

17. தற்காலத்திலுள்ள சில பொருளாதார நிபுணர் தங்கநாணயச் செலாவணியில்லாது தங்கவிலை நிலைபெறுமாறு செய்யுந் திட்டத்தைத் 'தங்கத்திட்டம்' (gold bullion standard) என்றழைக்கவேண்டும் என்பர். தங்கநாணயத் திட்டமும் தங்கத் திட்டமும் தம்முள் வேறுபட்டன எனக்கூறுவது சொல்வழக்குக்குச் சரியாயிருப்பினும் இவ்வாறு வேறுபடுத்திக் கூறுவது பொருளில் முரண்பட்டதாகும் என ஆசிரியர் கேசல் (Professor Cassel) மிக நுட்பமாக எடுத்துக்காட்டுகிறார். இரண்டு திட்டங்களிலும் தங்கம் ஒன்றே மதிப்புக்கருவியாகக் கொள்ளப்படுவதால் தங்கத்திட்டம் வேறுபட்டதெனக் கூறுவது தவறென்பதும் அவர் அபிப்பிராயம்.

தங்கத்திட்டத்தைக் கொள்ளலும் நீக்கலும்.

18. நாம் முந்தின பகுதிகளில் முறையே விவரித்தவற்றால் ஒரு தேசம் தங்கத்திட்டத்தைக் கொள்ளல் (on the gold standard) ஆவது அத்தேச நாணயத்தின் விலையும் தங்கவிலையும் ஒன்றாக இருக்குமாறு செய்வதேயாம்; தங்கத்திட்டத்தை நீக்கலாவது (off the gold standard) தேசநாணயத்தினாற் குறிப்பிட்ட அளவுள்ள தங்கத்தை அவ்விலைக்குப் பெறமுடியாதபடிசெய்வதாம். ஒருஅவுன்ஸ் **22** மாற்றுத் தங்கம் **3** ப. **17** ஷி. **10½** பெ. என ஏற்படுத்திய விலை நிலைபெற்றிருக்கும்வரை இங்கிலாந்து தங்க நாணயத் திட்டத்தைக் கைக்கொண்டதாகும். **3** ப. **17** ஷி. **10½** பெ. விகிதப்படி அரசாங்கத்தார், அன்றி, இங்கிலாந்து பாங்கி தங்கத்தை விற்கமாட்டோம் என்னும்போது இங்கிலாந்து தங்கத்திட்டத்தை அகற்றியதாகும். ஓரரசாங்கத்தார் தங்கத்திட்டத்தை எப்பொழுது அகற்றுவர்? அவ்வாறு செய்வதனால் விளையும் பயன்கள் யாவை? என்பன போன்ற வினாக்களுக்குரிய விடைகளை மேல்வரும் கட்டுரைகளில் விளக்கிக் காட்டுவோம்.

19. நாம் இதுகாறும் கூறியவற்றால் உலோகமதிப்பை நிலைபெறச் செய்தது நாணயம் எனப் பெறப்படுகிறது. நாணயத்தைக்கொண்டு உலோகமதிப்பைத் திட்டஞ்செய்ததால் நாணயமதிப்புக்கும் உலோகமதிப்புக்கும் ஏற்பட்ட வேறுபாடுகளால் நாணயச் செலாவணிக்கு விளைந்த கேடுகள் நீங்கின. ஆதலால் தங்கத்தைமட்டும் நாணயஞ்செய்வதற்கு உபயோகித்ததால் அக்கேடுகள் ஒழிந்தனவெனக் கூறுவது தவறு.

6

தாள் நாணயம்

(Paper Money)

சீனர்களால் கி. மு. 2-ம் நூற்றாண்டில் முதன்முதல் தாள் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் தாள் நாணயங்கள்போன்றவற்றை உபயோகிக்கும் முறை எண்ணிறந்த நூற்றாண்டுகளாக எல்லாத் தேசங்களிலும் இருந்து வந்ததென்று தெரிகிறது.

பண்டைக்காலத்தில் வழங்கிய தாள்நாணயமுறை.

2. முதற் கட்டுரையில் ஒரு பண்டத்தைக் கொடுத்து அதே மதிப்புடைய வேறொரு பண்டத்தைப் பதிலாகப் பெறுவதற்கு இருவரும் சம்மதித்துக்கொண்டால் மதிப்பற்ற எப்பொருளையேனும் (கல், கிளிஞ்சில், தோல்போல்வன) குறியாகப் பெற்றுக்கொள்ளும் வழக்கமிருந்ததாக விவரித்தோம். பசு பண்டமாற்றுப் பொதுப்பொருளாக இருந்த காலத்தில் ஒருவன் தான் பெற்றுக்கொண்ட பொருள்களின் பண அளவைக் குறிப்பிடுவதற்காகத் தோலிற் பசுவின் படத்தைப் பதித்து, தான்கொடுக்கவேண்டியது எத்தனைபணமோ அத்தனை தோல்துண்டுகளைக் கொடுப்பது வழக்கமாக இருந்

தது. அநாகரிக நிலைமையிலுள்ள ஆதிமக்களுக்கும் தற்காலத்திலிருப்பவரைப்போல நாணய அறிவு ஏற்பட்டிருந்திருப்பது வியப்பன்றோ? நமது தாள்நாணயமும் அவர்கள் தோல்நாணயமும் இரண்டும் ஒருவகையினவே.

தாள்நாணயம் வெளியிட்ட பாங்கிகள்.

3. தற்காலத்தில் தாள்நாணயத்தைப் புதிய முறையில் உபயோகித்தவர்கள் உண்டியற்கடைக்காரர்கள் ஆவர்; அவர்கள் கையாண்ட முறை தாள்நாணயமுறைக்கே ஓர் உதாரணமாகும். அவர்கள் தங்களிடம் பாதுகாப்புக்காக ஒப்புவிக்கப்பட்ட தங்கம், வெள்ளி உலோகங்களுக்காகவும் அவற்றாலிழைத்த ஆபரணங்களுக்காகவும் தாளில் பற்றுச்சீட்டுக் கொடுப்பது வழக்கமாயிருந்தது. அந்தச் சீட்டுக்கள் (receipts) அவற்றிற் குறிப்பிட்ட தொகையளவான பொன் அல்லது வெள்ளிமதிப்புடையனவாகையால், அவற்றை நாணயத்தைப்போல மக்கள் அங்கீகரித்தனர். சீட்டைக் கொடுப்பவனிடம் நம்பிக்கையும், சீட்டைக் கொடுத்தால் உண்டியற்கடைக்காரன் நாணயங் கொடுப்பான் என்ற நம்பிக்கையும் இருக்குமளவும் சீட்டுக்கள் நாணயம்போலச் செலாவணியிலிருந்துவந்தன.

பாங்கர்களின் தாள்நாணயம் செலாவணியானதேன் ?

4. தம்மிடத்தில் ஒப்புவித்த பணத்துக்கு ஆதரவாகக் கொடுக்கப்படும் பற்றுச்சீட்டு மக்களால் அங்கீகரிக்கப்படுவதைக் கண்ட உண்டியற்கடைக்காரர்கள் [இனி இவர்களைப் பாங்கர்கள்—bankers—என்று வழங்குவோம்.] தங்களிட

முள்ள சொந்த முதலை ஆதாரமாகக்கொண்டு தங்கள் சொந்தத்திற் பிராமிசரி நோட்டுக்களை' (notes—இவ் வாங்கிலப் பதத்தையே இனி வழங்குவோம்) வெளியிட்டனர். இந்த நோட்டுக்களை எவரேனுங் கொண்டுவந்து கொடுத்து நாணயங் கேட்டபொழுது பாங்கர்கள் அவற்றை மாற்றிக்கொடுப்பார்கள். மாற்றிக்கொடுத்தல் (convertibility) இருந்தவரைக்கும் அல்லது பாங்கர்கள் மாற்றிக் கொடுப்பர் என்ற 'நம்பிக்கை' (confidence) இருந்தவரைக்கும் நோட்டுக்கள் நாணயம்போலச் செலாவணியாயின. ஸ்காட்லாந்திலும் இங்கிலாந்திலும் நோட்டுக்கள் வெளியிட்டுப் பாங்கித்தொழில் செய்துவந்த வர்த்தகர் பலர் இருந்தனர். அவர்கள் தங்களிடத்திற் கடன் வாங்கவருவோருக்கு இந்நோட்டுக்களைக் கொடுத்து அத்தொகைக்கு வட்டியும் (interest) பெற்றுவந்தனர். ஒரு முதலுமில்லாமலே தமது 'மதிப்புடைமை' (credit) யையே ஆதாரமாகவைத்து இவ்வாறு நோட்டுக்களை வெளியிட்டனர் சிலர். இந்நோட்டுக்கள் கொடுக்கல் வாங்கலில் நாணயத்தைப்போலவே அங்கீகரிக்கப் பட்டனவாகையால் அவை நாணயமாகவே கருதப்பட்டன.

அரசாங்கத் தாள்நாணயம்

5. இப்பாங்கர்களிடமிருந்து அரசாங்கத்தார் தாள் நாணயமுறையைக் கைக்கொண்டு ஸ்வதன பாங்கர்கள் (private bankers) நோட்டு நாணயங்களை வெளியிடக்கூடாதென்று சட்டமியற்றினர். பலவகையான உலோக நாணயங்களை ஒழித்துத் தேசமெங்கும் ஒரேவித உலோக நாணயத்தை ஏற்படுத்தியதுபோலவே பாங்கர்களால் வெளியிடப்

பட்ட பற்பலவிதமான நோட்டுக்களை யெல்லாம் அரசாங்கத்தார் நீக்கி ஒரேவித நோட்டுநாணயத்தை (note currency) ஏற்படுத்தினர். பாங்கர்கள் செய்தவாறே நோட்டுக்களை உலோகநாணயங்களுக்கு மாற்றிக் கொடுத்தாற்றான் நோட்டுக்கள் குடிகளால் அங்கீகரிக்கப்பட்டுச் செலாவணியிலிருந்துவருமென அரசாங்கத்தார் நினைத்தபடியினால் அவர்கள் குடிகள் வேண்டும்போதெல்லாம் தாம் வெளியிட்ட நோட்டுக்களை உலோகநாணயங்களுக்கு மாற்றிக்கொடுத்து வந்தனர். மாற்றிக்கொடாதிருந்தும் அரசாங்கத்தார் தம் நோட்டுநாணயங்களைக் குடிகள் வழங்கிவருமாறு செய்திருந்திருக்கலாம்; ஏனெனில் பாங்கிநோட்டைக்காட்டிலும் அரசாங்கநோட்டுக்குக் கண்ணியமும் பொதுஜன அங்கீகரிப்பும் (general acceptability) அதிகமாக விருந்தன.

நோட்டுநாணயங்கள் செலாவணியற்றமை.

6. அரசாங்க நோட்டுக்களைக் குடிகள் அச்சமின்றி உபயோகித்தாராதலின் (அவற்றை எப்பொழுதும் உலோக நாணயங்களுக்கு மாற்றிக்கொள்ளலாம் என்னும் நம்பிக்கையிருந்ததுபற்றி) சிலசில சமயங்களில் அரசாங்கத்தார் இந்நோட்டுக்களைத் தம்மிஷ்டப்பட்ட அளவுக்கெல்லாம் அச்சிட்டு வழங்கலாயினர். ஆதலின் இந்நோட்டுக்கள் அரசாங்கத்தாரலிடப்பட்ட தம் புறமதிப்பை யிழந்து செலாவணியற்றன. கீழ்க்காட்டியவை அதற்குச் சிறந்த உதாரணங்களாம்.

7. கி. பி. 1720-ம்வருடத்தில் பிரான்சுதேசத்துப் பொக்கிஷ மந்திரியாக அமர்ந்த ஜான் லா (John Law)

என்னும் ஸ்காட்லாந்துதேசத்தான் அரசாங்கக் கடனைத் தீர்ப்பதற்காகவும் பிரான்சின் வெளிநாட்டு வர்த்தக அபி விருத்திக்காகவும் 150 கோடி லிவ்ரா (50 கோடி ரூபாய்) மதிப்புப்பெறுமான தாள்நாணயங்களை வெளியிட்டான். வெளிநாட்டு வர்த்தகத்திற் பெருத்த ஊதியங்கிடைக்கு மென்று எதிர்பார்த்திருந்த ஜனங்கள் முதலில் ஜான் லா வெளியிட்ட தாள்நாணயங்களை வாங்கினர். பின்னர் அவ் வர்த்தகத்தில் ஊதியங்கிடைக்காததைக் கண்டு அவர்கள் அத்தாள்நாணயங்களைத் திருப்பிக்கொடுத்து உலோக நாணயங்களைப்பெற முயன்றனர். எல்லா ஜனங்களும் இவ்வாறு செய்யவே மாற்றிக்கொடுக்கக்கூடிய அளவில் உலோக நாணயம் இல்லாதபடியினால் ஜான் லாவுடைய தாள்நாணயமுறை பிழைபட்டொழிந்தது.

8. 1789-ஆம் வருடத்தில் பிரான்சு தேசத்தி லேற் பட்ட அரசியற் குழப்பத்தால் (The French Revolution) விளைந்த போர்ச் செலவைத் தாங்குவதற்காகத் தாள் நாணயங்கள் வெளியிடப்பட்டன. பிரபுக்களுக்கும் கோவில் களுக்கும் உரியனவாய்ப் பறிமுதல்செய்யப்பட்ட நிலங்க ளின் மதிப்பை ஆதாரமாகக்கொண்டு அஜிஞு (Assignats) என்னும் பெயருடன் ஒருவகைத் தாள்நாணயங்கள் அச் சிடப்பட்டன. 1791-ஆம் வருடத்திலேயே இந்நாணயங் களின் மதிப்பு 100க்கு 82 விகிதத்திற் குறைந்துவிட்டது*

* அதாவது 100 பிராங்கு (francs) நோட்டுக்களைக்கொண்டு பொருள்களை வாங்கச் சென்றால் கடைக்காரர்கள் அவற்றிற்கு 82 பிராங்குமதிப்புள்ள பொருள்களையே கொடுப்பார்கள் என் பதாம்.

க்டைசியில் 1700 பிராங்கு அஜீணு நோட்டுகளுக்கு ஒரு பிராங்கு மதிப்புள்ள பொருள்கள்தான் வாங்கமுடிந்தது. பாரீஸ் நகரத்தில் ஒரு 'கப்' காப்பிக்கு 500 பிராங் (சுமார் 300 ரூபாய்) நோட்டுக்கள் கொடுக்க நேர்ந்ததாம்!

9. அமெரிக்காவில் 1861ல் நிகழ்ந்த உள்நாட்டுப் போர்ச்செலவைத் தீர்ப்பதற்காக 'கிரீன்பாக்ஸ்' (Greenbacks) எனப்பட்ட ஒருவகைத் தாள்நாணயங்கள் வெளியிடப்பட்டன. அவை மிக ஏராளமான அளவில் வெளியிடப்பட்டமையால் அவற்றின் மதிப்பும் குறைந்தது. முடிவில் அவற்றை அங்கீகரித்தவர் எவரும் இலர். அமெரிக்காவிலுள்ள மயிர்வினைஞர்கள் அவற்றைக் கொண்டு தம் கடைகளைச் சித்திரித்து வைத்தனராம்! சில சில்லரைக்கடைக்காரர்கள் அவற்றைப் பொட்டலங் கட்டுவதற்கும் உபயோகித்தனர்!

10. இவ்வாறே கடந்த ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின் ஜெர்மனியில் மார்க் என்ற தாள்நாணயம் மிகுதியான அளவில் வெளியிடப்பட்டதுபற்றி அதன் மதிப்புக் குறைந்தது. ஒரு லக்ஷங்கோடி மார்க் தாள்நாணயங்களைக் கொடுத்தாற்றான் சுமார் 12 அணு மதிப்புடைய ஒரு தங்க மார்க் (gold mark) நாணயத்துக்குப் பெறக்கூடிய பொருள்களைப் பெறமுடிந்தது. அதாவது ஒருபடி பால் வாங்க வேண்டுமானால் முக்கால் லக்ஷங்கோடி மார்க் நோட்டுகள் கொடுக்கவேண்டியிருந்தது. யுத்தத்திற்குப்பின் ருஷியாவில் வெளியிடப்பட்ட 'ரூபிள்' (rouble) என்ற தாள்நாணயங்களும் தாள் மார்க்குநாணயங்களைப்போலவே மதிப்பி

மூந்தமையின் அவை குப்பைத் தொட்டிகளிற் போடப் பட்டனவாம்! இது நிற்க.

நோட்டுமதிப்பை நிலைபெறுத்தல்.

11. உலோக உற்பத்தியின் மிகுதியினால் உலோக நாணயங்களின் அகமதிப்புக் குறைவதுபோல மிதமிஞ்சிய அளவில் தாள்நாணயங்களை வெளியிடுவதனாலேயே அவற்றின் மதிப்புக் குறையுமாதலால் தாள்நாணய வெளியீட்டை ஒரு வரம்புக் குட்படுத்தி அவற்றின் மதிப்பை நிலைபெறச் செய்யலாம் என 1848ல் ஆங்கிலேயர் ஒரு முடிவுக்கு வந்தனர். 1816ல் அவர்கள் தங்கத்துக்கு ஒரு நிலையான விலை மதிப்பை ஏற்படுத்தினாற்போலவே 1848ல் தாள்நாணயங்களுக்கும் ஒரு நிலையான விலைமதிப்பை யிறுத்தனர். அதன் விவரம் பின்வருமாறு:—

1844-ம் வருடத்துப் பாங்கிச்சட்டம்

12. இக்கட்டுரையின் நான்காம்பகுதியில் நாம் குறிப்பிட்டபடி இங்கிலாந்து தேசத்தில் தம் சொந்த முதலை ஆதாரமாகக் கொண்டு நோட்டுநாணயம் வெளியிட்டுப் பெருத்த ஊதியம் பெற்றுவந்த பல ஸ்வதன பாங்கிகள் இருந்தன. ஆனால் 1836-ல் எழுந்த ஒரு பொருளாதார நெருக்கடியில் அப்பாங்கிகளிற் பல உடைந்துபோனமையின் அவற்றிற் பணத்தைச் சேமித்துவைத்திருந்த பலர் பெருநஷ்ட மடைந்தனர். இக்கேட்டுக்குக் காரணம் பாங்கிகள் தாம் விரும்பியவாறெல்லாம் நோட்டுநாணயங்கள் வெளியிட அரசாங்கம் அநுமதித்ததுதான் என வாதித்தனர் ஒரு சிலர். அவர்களின் கொள்கை மேற்கொண்டது.

13. அக்கொள்கைக் கிணங்கப் 'பீல்' (Sir Robert Peel) என்னும் பிரதம மந்திரி 1844-ம் வருடத்தில் பாங்கிச் சட்ட மொன்றைப் பிறப்பித்தார். இச்சட்டத்தின் பயனாக பாங்கி நியமங்களிலும் பொருளாதார அபிவிருத்தியிலும் முதலில் இங்கிலாந்திலும், பின்னர் இதர தேசங்களிலும் பல நன்மைகள் விளைந்தன.

14. இப்பாங்கிச் சட்டத்தின் விதிகள், (1) புதிதாகத் தோன்றும் பாங்கிகள் நோட்டுநாணயங்களை வெளியிடக் கூடாது; (2) பழைய பாங்கிகள் தாம் இதுகாறும் வெளியிட்ட அளவுக்குமேல் நோட்டுநாணயங்களை வெளியிடக் கூடாது; மேலும் அவை உடைந்துபோகுங் காலத்தும் (bankruptcy) ஒன்றோடொன்று கலந்து இணைக்கப்படுங் காலத்தும் (amalgamation) நோட்டுநாணயங்களை வெளியிடும் உரிமையை இழந்துவிடவேண்டியது; (3) நோட்டு நாணயங்களை வெளியிடுவது இங்கிலாந்து பாங்கி (Bank of England) ஒன்றின் சிறப்புரிமையாகவே இருக்கவேண்டும்; அப்பாங்கியும் அச்சமயத்தில் அரசாங்கக் கடன்தொகையாக (national debt) நின்ற 140 லக்ஷம் பவுண்டு அளவுக்கே அந்நோட்டுக்களை வெளியிடலாம்; * அன்றி அதற்கு மேற்

---

* 140 லக்ஷம்பவுண்டு நோட்டுநாணயத்துக்கு அரசாங்கமும் அதற்கு மேற்பட்டு வெளியிடப்படும் நோட்டுக்களுக்கு இங்கிலாந்து பாங்கியும் உத்தரவாதம்செய்யக் கடமைப்பட்டவையாகலின் 140 லக்ஷம் பவுண்டுக்குமேல் வெளியிடும் நோட்டு நாணயங்களுக் கெல்லாம் இங்கிலாந்து பாங்கி கையிருப்பில் தங்கத்தை ஈடாக வைத்திருக்கவேண்டும்.

பட்டு வெளியிட விரும்பினால் அது வெளியிடும் ஒவ்வொரு ஐந்துபவுண்டு (£ 5) நோட்டுக்கும் ஐந்துபவுண்டு மதிப்புள்ள தங்கத்தைக் கையிருப்பில் ஈடாக (cover, backing, reserve) வைத்துவரவேண்டும் என்பனவாம்.

பாங்கிச் சட்டத்தின் நோக்கம்.

15. தாள்நாணய வெளியீட்டை வரம்புக்குட்படுத்தினாலன்றி அவற்றின் மதிப்பு நிலைபெறுதென்னுங் கருத்துடையராய் அரசாங்கத்தார் நாம் மேற்காட்டிய விதிகளை 1844-ம் வருடச் சட்டத்துள் சேர்த்தனர். தாள்நாணய வெளியீடு ஒரே பாங்கியின் ஆட்சிக்குட்பட்டால் அதை வரையறுப்பது எளிதாகலின் புதிதாய்த் தோன்றும் பாங்கிகளுக்கு நோட்டு வெளியிடும் உரிமை மறுத்து, முன்னரே அவ்வுரிமையைப் பெற்றிருந்த பழைய பாங்கிகளின் நோட்டு வெளியீட்டுக்கு வரையறையும் செய்யப்பட்டது. நோட்டு நாணயங்களை வெளியிடுவதைச் சிறப்புரிமையாக இங்கிலாந்துபாங்கி ஒன்றிற்கே வழங்கினும், அது 140 லக்ஷம் பவுண்டு தாள்நாணயங்களுக்குமேல் (ஈடில்லாமல்) வெளியிடக்கூடாதென்று வரையறை செய்தது மிகவும் பாராட்டத்தக்கது. இவ்வாற்றால் ஒரு தேச முழுவதற்கும் செலாவணியாகத்தக்க நோட்டுநாணயங்களின் அளவு இச்சட்டத்தால் திட்டஞ் செய்யப்பட்டது.

ஈடில்லாது வெளியிடப்பெறும் நோட்டுக்களின் அளவைத் திட்டஞ்செய்தல்.

16. நோட்டுநாணயங்களின் மொத்த அளவையேனும் அன்றி ஈடில்லாது வெளியிடப்பெறும் (fiduciary

or uncovered issue) நோட்டுக்களின் அளவையேனும் வரையறை செய்துவிடுவதாலேயே நோட்டுநாணயத்தின் மதிப்பை நிலைபெறச் செய்யலாமன்றோ? ஏனெனில் குறிப்பிட்ட அளவுக்குமேல் நோட்டுநாணயத்தை வெளியிடாதிருந்தால் அந்நோட்டுக்களுக்கு அரசாங்கத்தாரிட்ட விலை நிலைத்துநிற்கும். இதுதான் ஆங்கிலேயர் கண்டு தெளிந்த மூலவுண்மை. குறிப்பிட்ட ஒரு நாணயவிலையால் (3 ப. 17 ஷி. 10½ பென்ஸ்) குறிப்பிட்ட ஒரு அளவும் மாற்றும் (ஒரு அவுன்ஸ் 22 மாற்று) அடங்கிய தங்கத்துக்கு நிலையான விலையை நிர்ணயித்தாற்போல ஆங்கிலேயர் ஈடில்லாது வெளியிடப்படும் அளவைத் திட்டஞ்செய்து நோட்டு நாணயங்களின் மதிப்பை ஸ்திரப்படுத்தினர்.

ஈடாக வைக்கப்பெற்ற தங்கத்தின் நோக்கம்.

17. ஆயினும் 140 லக்ஷம் பவுண்டுக்கு மேற்பட்ட அளவில் வெளியிடப்பட்ட நோட்டுக்களுக்கு நூற்றுக்கு நூறுமடங்கு தங்கத்தை இங்கிலாந்து பாங்கி இருப்பாக வைத்துவரவேண்டுமென்று அரசாங்கத்தார் சட்டமியற்றிய காரணமென்னை? ஈடாக வைக்கிற தங்கத்தை நாணயமாக உபயோகிக்கலாமே? ஐந்துபவுண்டு தங்கத்தைக் கொண்டு இங்கிலாந்து பாங்கியிற் புதைத்துவிட்டு அதற்குப் பிரதியாக 5 பவுண்டு நோட்டொன்றைச் சிருஷ்டித்து அதை வழங்குவானேன் எனக் கேட்கலாம்?

18. பீலும் அவரைச் சார்ந்தவர்களும் ஈடில்லாது வெளியிடப்படும் நோட்டுக்களின் அளவைத் திட்டஞ்செய்வதாலேயே நோட்டுக்களின் மதிப்பை நிலைபெறச் செய்ய

லாம் என நாம் மேற்கூறிய மூலவுண்மையைத் தெள்ளிதில் அறியாதிருந்தனர். அவர்கள் கோட்பாடு யாதெனின் தாள்நாணய மதிப்பு ஸ்திரமாக நிற்கவேண்டுமானால் அதை எப்பொழுதும் தங்க நாணயத்துக்கு அரசாங்கத்தார் மாற்றிக் கொடுக்கவேண்டும் என்பதே. **1816**-ம் வருடச் சட்டத்தின்படி தங்கநாணயத்தின் மதிப்பை நிலைபெறுத்தனராகையால் அத்தங்க நாணயத்துடன் இத்தாள்நாணயத்தை இணைத்துவிடுவதே தாள்நாணயத்தின் விலைமதிப்பை நிலைநிறுத்தும் முறையெனக் கருதினர்.

19. தாள்நாணயத்தின் மதிப்பு தங்கநாணயத்தின் மதிப்பைப்போல எப்பொழுதும் ஸ்திரமாக இருக்கவேண்டுமானால் தாள்நாணயத்தைத் தங்கநாணயத்திற்கும், தங்க நாணயத்தைத் தாள்நாணயத்திற்கும் (உலோகத்துக்கு நாணயமும், நாணயத்துக்குஉலோகமும்கொடுத்துவருவதுபோல) எப்பொழுதும் மாற்றிக்கொடுக்கவேண்டும். எனவே தாள் நாணயத்துக்குப் பதிலாகத் தங்கம் வேண்டுவோருக்கெல்லாம் தங்கம் கொடுக்கவேண்டுமானால் எவ்வளவு பவுண்டு மதிப்புள்ள நோட்டுக்கள் வெளியிடப்படுமோ அவ்வளவு பவுண்டுமதிப்புள்ள தங்கம் எப்பொழுதும் இங்கிலாந்து பாங்கியில் இருப்பாக வைக்கப்பட வேண்டுமல்லவா? இங்கிலாந்து பாங்கியில் இவ்வாறு இருப்பாக வைக்கப்பட்ட தங்கத்தின் ஆதரவினாலேயே தாள்நாணயத்தின் மதிப்பு ஸ்திரமாக இருந்துவருமென்பது அக்காலத்தவர் கொள்கை. அதனாற்றான் ஒவ்வொரு ஐந்துபவுண்டுநோட்டுக்கும் ஐந்து பவுண்டு மதிப்புள்ள தங்கம் ஈடாக வைக்கவேண்டுமென்ற சட்டமியற்றப்பெற்றது.

20. 1844-ல் ஆங்கிலேயர் ஈடில்லாது வெளியிடப்படும் தாள்நாணயத்தின் அளவைத் திட்டஞ்செய்ததே அரிய நாணய நியமமாகும்; ஆனால் தங்கமதிப்பின் ஆதாரவினால் தாள்நாணயமதிப்பை நிலைபெறச்செய்கிறோம் என அவர்கள் கொண்ட கோட்பாடு குறைபாடுடையதாகும். தாள்நாணயத்தைத் தங்கநாணயத்திற்கு மாற்றிக்கொடுக்கக் கேட்போருக்காகவே தங்கம் ஈடாக வைக்கப்பட்டதென்றும், அப்படியிருந்தாற்றான் குடிகள் தாள்நாணயங்களை அச்சமின்றிக் கையாளுவர் என்றும் அவர்கள் எண்ணியது மடமையே.* ஆயினும் இக்கொள்கையே நாணயவுலகில்

---

* எல்லாஜனங்களும் ஏககாலத்தில் தாள்நாணயத்தைத் தங்கத்துக்கு மாற்றிக்கொடுக்கக் கேட்டால் 140 லக்ஷம் பவுண்டு அளவுவரை ஈடில்லாது வெளியிடப்பட்ட நோட்டுக்களை மாற்றத் தங்கத்துக் கெங்கே போவது? ஏனெனில் அதற்கு மேற்பட்ட அளவிலுள்ள நோட்டுக்களுக்குமட்டுமே தங்கம் ஈடாகவைக்கப் பட்டிருக்கின்றதல்லவா? பீலும் அவரைச் சார்ந்தவர்களும் இதற்குக் கூறிய நியாயம் ஏககாலத்தில் எல்லாக் குடிகளும் தாள்நாணயத்துக்குத் தங்கம் கேட்கமாட்டார்கள் என்பதாம். நோட்டுக்களுக்கு ஈடாகத் தங்கத்தை இருப்பு வைப்பது (reserve) அவசியம் என வாதிக்கும் இக்காலத்தவர் நியாயமும் இதுவே. அது முழுதுந் தவறு என்பதை நாம் வலிந்து நிரூபிக்கவேண்டியதில்லை. ஆயினும் இவ்வுண்மையைக் கடந்த இரண்டாண்டுகளுக்கிடையிற்றான் பொருளாதாரநூலாசிரியர்களும் அரசியல்வல்லார்களும் தாமே தெள்ளிதில் அறிந்து ஒப்புக்கொள்ளுகின்றனர்! இவ்வுண்மையைப் பல ஆண்டுகளாக எடுத்துக்காட்டிவந்த ஆசிரியர் கேனன் (Professor Cannan) அவர்கள் கூற்றுப் பாராட்டற்குரியதாகையால் அதைக் கீழே தருகிறோம். (மறுபக்கம் பார்க்க.)

இற்றைக்கும் பல நிபுணர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது! ஏனெனில் உலகத்திலுள்ள எல்லாத் தலைமைப் பாங்கிகளும் இங்கிலாந்து பாங்கியின் வழக்கத்தைத் தழுவித் தத்தம் நோட்டுவெளியீட்டுக்கெல்லாம் தங்கத்தை இருப்பாக வைத்துவருகின்றன. இவ்வழக்கம் நீங்குமாயின் நாணயத்திட்டங்களி லெழுந்துள்ள குழப்பங்களில் ஒருசில அகலுமென்பதற் கையமில்லை. இது நிற்க.

21. முடிவில் 1844-ம் வருடத்தில் ஆங்கிலேயர் இயற்றிய பாங்கிச்சட்டத்தால் (Bank Charter Act) விளைந்த பெரும் பயனை நாம் மீண்டும் விளக்கிக் கூறுவது மிகையாகாது. இந்தச் சட்டத்தினுற்றான் அவர்கள் தாள்நாணயத்தின் அளவை வரையறுத்து அதைத் தங்கநாணயத்தின் மதிப்புக்குச் சமமாக இணைத்துத் தாள்நாணயச் செலாவணியில் விளைந்த கேடுகளைப் போக்கினர். எல்லாத் தேசங்களும் இத்தகைய திட்டத்தைக் கைக்கொண்டதனுல் கடந்த ஐரோப்பிய யுத்தகாலம்வரை தாள்நாணயங்கள் தங்கநாணயங்களைப்போலவே நிலையான விலைமதிப்பைப் பெற்றுநின்றன.

'The notes are no more connected with the hoard in the Bank of England ..than with the ore in the bottom of the deepest mine in Transvaal. ***The belief in cover is a gross superstition.*** Whether it can be exorcised by reasoning seems doubtful and it has so far successfully resisted ridicule. The cover which is not to be touched by the profane hand is absolutely useless for the purpose which it is supposed to fulfill' (*Modern Currency,* P.70.).

22. இவ்வாறு 1816-ம் வருடத்திலும் 1844-ம்வருடத்திலும் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட சட்டங்களையொட்டிப் பல ஐரோப்பிய நாடுகளில் நாணயத்திட்டங்கள் சீர்திருத்தியமைக்கப்படலாயின. இங்கிலாந்தின் செல்வப்பெருக்குக்குக் காரணம் தங்கநாணயத்திட்டம் என ஜெர்மானியர் எண்ணினராகையால் 1871-ல் அவர்கள் தங்கள் தேசத்தில் தங்கநாணயத்திட்டத்தை ஏற்படுத்தினர். 1873-ல் பிரஞ்சுக்காரரும் அவ்வாறே செய்தனர். ஆயினும், பிரஞ்சுக்காரர் தங்கநாணயத்திட்டத்தைக் கைக்கொண்டதற்குக் காரணம் அவர்களுடைய இரட்டைநாணயத்திட்டம் பிழைபட்டதேயாம். ஆதலின் மேல்வருங் கட்டுரையில் இரட்டைநாணயத்திட்டத்தைப்பற்றிக் கூறுவாம்.

7

இரட்டை நாணயத் திட்டம்

(Bimetallism)

பல நூற்றாண்டுகளாக எல்லாத்தேயத்தினரும் வெள்ளி தங்க நாணயங்களை ஏககாலத்தில் வழங்கிவந்தனரென்று முன்னரே கூறியுள்ளோம். இவ்விருவகை நாணயங்களையும் வழங்கிவந்தகாலத்து மக்கள் அவை ஒவ்வொன்றினுமடங்கிய உலோகமதிப்புப்படி அவற்றை ஒன்றற்கொன்று மாற்றிக்கொண்டனர். உதாரணம்:—பதினேழாம்நூற்றாண்டில் ஒரு அவுன்ஸ் நிறையுள்ள தங்கமும் $15\frac{1}{2}$ அவுன்ஸ் நிறையுள்ள வெள்ளியும் ஒத்த விலைமதிப்புடையனவாக இருந்தமையால் வெள்ளி தங்க நாணயங்களின் மாற்று விகிதம் (ratio of exchange) $1 : 15\frac{1}{2}$ எனக் கணக்கிட்டனர். அரசாங்கத்தாரும் நாணயங்களின்மதிப்பை அவற்றிலடங்கிய உலோகமதிப்பினின்றும் வேறாக்காது, வெள்ளி தங்க நாணயங்களின் மாற்றுவிகிதத்தை $1 : 15\frac{1}{2}$ எனச் சட்டம் இயற்றித் திட்டஞ்செய்தனர். இங்ஙனமாக வெள்ளிநாணயங்களையும் தங்கநாணயங்களையும் குறிப்பிட்ட மாற்று

விகிதத்திற் செலாவணியிலிருக்கச்செய்வதே இரட்டைநாணயத்திட்டம் (bimetallism) என்னப்படும். *

2. இரட்டைநாணயச் செலாவணியில் விளைந்த குறைகள் முன்னரே விளக்கப்பட்டுள்ளன. உலோகங்களின் உற்பத்தியிலும் தேவையிலும் (supply and demand) இயல்பாய் எழுந்த வேறுபாடுகள் அவற்றாலாய நாணய மதிப்பையும் அடிக்கடி வேறுபடுத்தின வாகையால் வெள்ளி விலை உயர்ந்தகாலத்து வெள்ளிநாணயங்களும் தங்கவிலை உயர்ந்தகாலத்துத் தங்கநாணயங்களும் செலாவணியற்றன வெனவும், இக்குறையை நீக்குமாறே ஆங்கிலேயர் ஏகநாணயத்திட்டத்தை (single standard or monometallism) ஏற்படுத்தினரென்றும் முந்தின கட்டுரையிற் காட்டினோம்.

இரட்டைநாணயத்திட்டத்தைக் கைக்கொண்ட தேசங்கள்.

3. பிரஞ்சுக்காரரோ 1801-ம் வருடத்திலிருந்து 1873-ம் வருடம்வரை இரட்டைநாணயத்திட்டத்தையே கைக்கொண்டுவந்தனர். அவர்களைப் பின்பற்றி இத்தாலி,

---

* இத்திட்டத்தைக் குறிப்பிடும் வேறு ஆங்கிலச் சொற்றொடர்களாவன:—Bimetallic standard, double, joint or dual standard. தங்கநாணயத்திட்டத்தைத் தங்கத்திட்டம் எனச் சுருக்கமாக வழங்குவதுபோல இரட்டைநாணயத்திட்டத்தை இரட்டைத்திட்டம் என ஆங்கிலவழக்கையொட்டி இந்நூலிற் வழங்குவோம்,

ஸ்விட்ஜர்லந்து, கிரீஸ், ஹாலண்டு, பெல்ஜியம் ஆகிய இவ்வைந்து தேசங்களிலுள்ளவர்களும் இரட்டைத்திட்டத்தைக் கைக்கொண்டனர். இந்தத்தேசங்களிற் பேசப்பட்ட முக்கியபாஷை லத்தீன் ஆகையால் இவை லத்தீன் ஐக்கிய நாடுகள் (Latin Union) என வழங்கப்பட்டன.

இரட்டைநாணயத்திட்டம் நிலைபெற்றதற்குக் காரணங்கள்

4. இரட்டைத்திட்டப்படி லத்தீன் ஐக்கியநாடுகள் எல்லாம் வெள்ளிநாணயங்களுக்கும் தங்கநாணயங்களுக்கும் **1 : 15½** எனக் குறிப்பிட்ட நிலையான மாற்றுவிகிதத்தை யிறுத்து, அவ்விரண்டு நாணயங்களையுஞ் செய்துகொள்ளும் உரிமையை எல்லாக் குடிகளுக்கும் வழங்கி (open mint), அவ்விரண்டையும் எத்தொகைக்கும் சட்டப்படி செலாவணியாகத்தக்க (unlimited legal tender) முழுமதிப்புடைய பிரதானநாணயங்களாகவும் ஆக்கினமையால் கிரெஷாம் விதிப்படி அகமதிப்புக்கும் புறமதிப்புக்கும் உள்ள வேறுபாடு காரணமாகக் குடிகள் நாணயங்களை உருக்கி உலோகமாக விற்குங் கேடுகள் ஒழிந்தன.

5. வெள்ளியையுந் தங்கத்தையும் இந்நாடுகளிலுள்ள அரசாங்கங்கள் குறிப்பிட்ட மாற்றுவிகிதத்தில் எந்த அளவிலும் நாணயஞ்செய்வதற்காக வாங்கியும் விற்றும் வந்தமையின் அவ்வுலோகங்களின் விலைமதிப்பு நிலைபெற்றுவந்ததனாலும், அதனால் அந்நாணயங்களின் அகமதிப்புக்கும் புறமதிப்புக்கும் வேறுபாடு காணப்படாதிருந்ததனாலும், அவ்

வாறு காணப்படினும் இருவகை நாணயங்களும் சட்டப்படி செலாவணியாவனவாகையாற் குடிகள் மதிப்புக்குறைந்த நாணயங்களையும் நல்லநாணயங்களைப்போலவே வழங்குவாராதலினாலும் இரட்டைத்திட்டம் சித்திக்கும் என்பதைக் கண்டுகொள்க. எனவே தங்கத்திட்டத்தினால் விளைந்த அநுகூலங்கள் எல்லாம் இரட்டைத்திட்டத்தினாலும் கைகூடப்பெற்றன. ஆயினும் இரட்டைத்திட்டம் நிலைபெற்றதற்கு முக்கியகாரணம் ஒன்று கீழே காட்டப்படுவதாகும்.

6. லத்தீன் ஐக்கியநாடுகள் இரட்டைத்திட்டத்தைத் தொடங்கியகாலத்தில் வெள்ளி தங்க உலோகங்களின் உற்பத்தியில் அதிக ஏற்றத்தாழ்வு இல்லாதிருந்ததனால் இருவகை நாணயங்களும் செலாவணியிலிருந்துவந்தன. மேலும் சிறிது ஏற்றத்தாழ்வு ஏற்பட்டபொழுது இங்கிலாந்து பாங்கி தங்கத்தை எப்பொழுதுங் குறிப்பிட்ட மாறாத விலைப்படி (ஒருஅவுன்ஸ் 3ப. 17ஷி. 10½பெ.) வாங்கியும் விற்றும் வந்ததனாலும், அவ்வாறே இந்திய அரசாங்கத்தார் வெள்ளியைக் குறிப்பிட்ட மாறாத விலைப்படி (ஒருதோலா ஒருரூபாய்) வாங்கியும் விற்றும் வந்தனராதலானும் வெள்ளி தங்கங்களின் விலை நிலைத்துநின்றது. ஆனால் 1850க்குப் பின் இரட்டைத்திட்டக் கோட்பாடுகளுக்கு முற்றும் முரணான சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அவற்றைக் கீழே காட்டுவம்.

1850–1872 தங்கநாணயங்கள்மட்டுமே செலாவணியிலிருத்தல்.

7. 1843-ம் வருடம்முதல் ஆஸ்திரேலியா காலிபோர்னியாவிலுள்ள கனிகளினின்று தங்க உற்பத்தி வருடந்

தோறும் முந்தியவருஷத்தைக்காட்டிலும் பத்துமடங்காக உயர்ந்தது. வெள்ளி உற்பத்தியோ ஒருவருடத்திற்கு 50 லக்ஷம் பவுண் மதிப்பிலிருந்து 70 லக்ஷம் பவுண்மதிப்பு வரைதான் உயர்ந்ததாகையால் 1850-ல் ஒருஅவுன்ஸ் 5ஷி. ஆக விருந்த வெள்ளிவிலை 1859-ல் 5ஷி. $2\frac{1}{2}$பெ. ஆகக் கூடியது.

8. லத்தீன் ஐக்கிய நாடுகளுக்கு வெள்ளிவிலை உயர்ந்தது காற்றி லுதிர்ந்த கனிபோலாயிற்று. இப்பொழுது தங்க விலை உயர்ந்திருப்பதனால் அதை இந்தியர் விற்பதுபோல அச்சமயத்தில் வெள்ளிவிலை உயர்ந்திருந்ததனால் பிரஞ்சுக் காரர் அதை விற்றனர். ஆயினும் வெள்ளிவிலையுடன் ஒப் பிடும்போது தங்கவிலை குறைந்திருந்தமையின் அவர்கள் தங்கத்தைப் பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்து, நாணய சாலைக்குக் கொண்டுபோய் நாணயங்களாகச் செய்துதரப் பெற்று அவற்றை வழங்கினர். இங்ஙனமாக வெள்ளிநாண யங்கள் செலாவணியற்றனவாக, தங்கநாணயங்கள்மட்டுமே செலாவணியிலிருந்துவந்தன. இருவகை நாணயங்களும் செலாவணியிலிருந்துவருமாறு அரசாங்கத்தார் திட்டம் அமைத்திருக்க, அச்சமயத்தில் மதிப்புக்குறைந்து விளங்கிய தங்கநாணய மொன்றே செலாவணியாகிவந்தது.

1873 ல் வெள்ளிநாணயங்கள்மட்டுமே செலாவணியிலிருத்தல்.

9. ஆனால் 1873-ம் வருடத்தில் நாம் மேற்கூறியவற் றிற்கு மாறான நிகழ்ச்சி காணப்பட்டது. அவ்வருடத்தில் ஜெர்மானியர் ஆங்கிலேயரைப் பின்பற்றித் தங்கள்

தேசத்திலும் தங்கநாணயத்திட்டத்தை அமைத்தனர். ஆதலின் இதுகாறும் தங்கள் தேசத்திற் செலாவணியாகிவந்த வெள்ளிநாணயங்களை விலக்கி அவற்றைப் பிரான்சு தேசத்திற்கனுப்பிக் குறிப்பிட்ட விகிதப்படி (1:15½) தங்கத்துக்கு மாற்றித் தங்கத்தைத் தம்தேசத்திற்குக் கொண்டுபோக முயன்றனர். அதே வருடத்தில் அமெரிக்காவும் தங்கத்திட்டத்தை அமைக்க விரும்பி வெள்ளியைப் பிரான்சுக்கனுப்பியது.

10. இங்ஙனமாக ஜெர்மனியிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் பெரும்பிரவாகமாக வெள்ளி பிரான்சுதேசத்துக்குட்புகுந்தது. அதனால் 1872-ல் ஒரு அவுன்ஸ் 5¼ ஷி. ஆகவிருந்த வெள்ளிவிலை 1879-ல் 4 ஷி. 3¼ பென்ஸ் ஆகக் குறைந்தது. விலைகுறைந்த வெள்ளியைப் பிரஞ்சுக்காரர் பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்து அதனால் தமக்கு வேண்டும் நாணயங்களைச் செய்துகொண்டு இந்நாணயங்களால் குறிப்பிட்ட மாற்றுவிகிதப்படி (1 : 15½) அரசாங்க நாணயசாலைகளினின்றுந் தங்கத்தை வாங்கி அதைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து இலாபம்பெறலாயினர். 1872லும் 1873லும் 18கோடிபிராங்கு வெள்ளிநாணயங்கள் வெளியிடப்பட்டன; தங்கநாணயங்களோ முழுதுஞ் செலாவணியற்றன. இவ்வாறாக 1872லும் 1873லும் பிரான்சு தேசத்திலும் இதர லத்தீன் ஐக்கியநாடுகளிலும் தங்கநாணயங்கள் நீங்கினமையால் வெள்ளிநாணயங்கள்மட்டுமே செலாவணியாயின.*

---

* 1850க்குப்பின்னும் 1872லும் நடந்த இருநிகழ்ச்சிகளாலும் பெறப்படும் உண்மை யாதெனின் இரட்டைநாணயத்திட்

11. தங்கநாணயம் செலாவணியற்றமைக்குப் பிரஞ்சுக்காரர் பெரிதும் வருந்தித் தாங்களும் வெள்ளியை விலக்கித் தங்கநாணயத்திட்டத்தைக் கைக்கொள்வதெனத் தீர்மானித்தனர்! அந்தோ! அவர்கள் அவ்வாறு செய்ததனால் வெள்ளியின்விலை மீண்டுங்குறைந்தது. பிரஞ்சுக்காரரைப் பின்பற்றி இதர லத்தீன் ஐக்கியநாடுகளின் அரசாங்கங்களும் வெள்ளியை விலக்கித் தங்கநாணயச்செலாவணியைப்பெருக்கினமையின் தங்கவிலையும் உயர்ந்தது. வெள்ளிவிலை வீழ்ந்ததால் இந்தியாவுக்குப் பெருநஷ்டமும் (அடுத்த கட்டுரையைப் பார்க்க.) தங்கவிலை உயர்ந்ததால் தங்கநாணயத்திட்டத்தைக் கைக்கொண்டிருந்த தேசங்களுக்குப் பொருளாதார நெருக்கடியும் எழுந்தன. பூமிதேவியின் அகட்டினின்றும் தங்கம் அல்லது வெள்ளி ஆகிய இவற்றுள் ஒன்று மட்டுமே கண்டெடுக்கப்பட்டிருக்குமாயின் இக்கேடுகள் விளைந்திருக்குமோ? இது நிற்க.

மூடநாணயத்திட்டம்

12. வெள்ளிவிலை குறைந்ததுபற்றிக் குடிகள் வெள்ளி நாணயங்களைமட்டுமே செய்துவந்தாராதலின் வெள்ளியை

டத்துக் கோட்பாட்டின்படி வெள்ளி தங்க நாணயங்கள் இரண்டும் செலாவணியிலிருக்கச் சட்டமமைப்பினும் குறிப்பிட்ட ஒருசமயத்தில் விலைமதிப்புக்குறைந்துள்ள உலோகத்தாலாய நாணயம் ஒன்றுமட்டுமே வழங்கிவருமென்பதாம். ஆதலின் அதை இரட்டைநாணயத்திட்டமென வழங்குவது இழுக்கு; உண்மையில் அது ஏகநாணயத்திட்டமே யாகும் என்பர் சிலர். 'At any moment the standard of value is doubtless one metal or the other and not both' (Jevons). வேறுசிலர் அதை 'ஒன்றுவிட்டொன்று நிலைபெறுந்திட்டம்' (alternative standard) என்னலாம் என்பர்.

விலக்கித் தங்கத்திட்டத்தைக் கைக்கொள்வதென லத்தீன் ஐக்கிய நாடுகளின் அரசாங்கத்தார் தீர்மானித்தனரென முற்கூறினேம். ஆயினும் தங்கநாணயம் ஒன்றைமட்டுமே வழங்குவதற்கு வேண்டுமளவில் அவர்களிடம் தங்கமின்மையால் வெள்ளிநாணயங்களையும் பிரதானநாணயங்களாகக் குடிகள் வழங்கலாமென்ற ஒருசட்டத்தை யியற்றினர். வெள்ளிநாணயம் பிரதானநாணயமாக்கப்பட்டபோதிலும் அந்நாணயஞ்செய்துகொள்ளு முரிமை குடிகளுக்கு வழங்கப்பட்டால் அது ஏராளமான அளவிற் செய்யப்படுமாகையால் (வெள்ளிவிலை குறைந்திருப்பதால்) அரசாங்கத்தார் அவ்வுரிமையைக் குடிகளுக்கு மறுத்து அதைத் தம் சிறப்புரிமையாகக்கொண்டனர். வெள்ளிநாணயம் அரசாங்கத்தாரால் மட்டும் அவர்களிஷ்டப்பட்ட அளவுக்குமட்டுமே வெளியிடப்படும் நாணயமாயிற்று. தங்கநாணயங்களுக்குமட்டுமே நாணயஞ்செய்யுமுரிமை குடிகளுக்கு வழங்கப்பட்டது.

13. இவ்வாறு 1873-ல் லத்தீன் ஐக்கிய நாடுகள் மிகவும் விகற்பமான ஒரு நாணயத்திட்டத்தை அமைத்தன. வெள்ளி தங்கநாணயங்கள் இரண்டும் சட்டப்படி செலாவணியாகத்தக்க பிரதான நாணயங்களாக்கப்பட்டபோதிலும் தங்கநாணயங்களுக்குமட்டுமே நாணயஞ்செய்யுமுரிமை குடிகளுக்கு வழங்கப்பட்டது. வெள்ளிக்கும் அவ்வுரிமை அளிக்கப்படுமாயின் அதன்விலை குறைந்திருப்பதனுல் வெள்ளிநாணயங்கள் ஏராளமான அளவிற் செய்யப்படுமாதலால் வெள்ளிநாணயஞ்செய்யு முரிமை குடிகளுக்கு மறுக்கப்பட்டது, இதுகாறும் பிரான்சின் நாணயத்திட்டம்

வெள்ளி தங்க நாணயங்கள் ஆகிய இருகால்களால் இயங்கிவந்திருக்க இப்பொழுது அதன் வெள்ளிக்கால் முடமாய்ப்போனதுபோல் இருந்தமையின் இத்திட்டத்துக்குப் பரிகாசமாக முடநாணயத்திட்டம் ‡ (limping standard) என ஒருபெயரைப் பிரஞ்சுக்காரர் இட்டனர்.

நாணயத்திட்டப்போர்.

14. ஆங்கிலேயரும் ஜெர்மானியரும் அமெரிக்கரும் தங்கநாணயத்திட்டத்தை அமைத்தபோதிலும் லத்தீன் ஐக்கிய தேசத்தினர் அவர்களைப் பின்பற்ருது வெள்ளி தங்கம் (முடநாணயத்திட்டப்படி) ஆகிய இருவகை நாணயங்களையும் பிரதானநாணயங்களாகப் பழையபடியும் உபயோகித்து வந்ததுமன்றி (சுமார் ஒருநூற்ருண்டாக இரட்டைத்திட்டம் நிலைபெற்றுத்தோற்றியதால்) எல்லாத் தேசங்களும் வெள்ளியையுந் தங்கத்தையும் நாணயஞ்செய்வதற் குபயோ

---

‡ இரண்டுநாணயங்களையும் பிரதானநாணயங்கள் எனவும் சட்டப்படி செலாவணியாகத்தக்கனவெனவுங் கொண்டபின் அவற்றைப் பதிப்பித்தற்கு அவற்றுள் ஒருநாணயத்துக்கு ஒருமுறையும் அடுத்தநாணயத்துக்கு வேருருமுறையும் ஏற்படுத்திக் கொள்வதில் என்ன கிரமமும் ஒழுங்கும் இருக்கின்றன? ஆதலின் இதைத் திட்டமற்ற திட்டம் (arbitrary standard) என்னவேண்டும் எனப் பரிகாசமாக ஆசிரியர் ராபட்சன் கூறுகிருர். 'While the arrangement can be reasonably described as a limping system it was not a standard at all. It set up for the time being an arbitrary standard' (Prof. Robertson, *Money*, P. 127).

கிப்பின் உலகநாணயத்திட்டங்களில் எவ்விதக்குழப்பமும் எழாதென்றனர். இரட்டைத்திட்டம் இயங்கத்தக்கதன்றென வாதித்தனர் தங்கநாணயத்தேசத்தினர். இங்ஙனமாக ஐரோப்பாக்கண்ட முழுவதிலும் நாணயத்திட்டத்தைப்பற்றிப் பெரும்போர் (battle of the standards) எழுந்தது! இருதிறத்தாரும் எழுதி வெளியிட்ட புத்தகங்களும் துண்டுப்பத்திரிகைகளும் கணக்கிலடங்கா!

15. இங்ஙனமாக 1873-ம் வருடத்திலிருந்து 1900-ம் வருடம்வரை உலகில் நாணயத்திட்டப்போர் நிகழ்ந்துகொண்டிருக்கும்போழ்து இந்தியாவில் புதியதோர் நாணயத்திட்டம் பிறக்கலாயிற்று. அது வளர்ந்து நிலைபெற்றபின்னரே அதற்கு ஒருபெயர் இடப்பட்டது. அதன்பெருமை யாதெனின் விலைமதிப்புக்குறைந்த வெள்ளியைப் பிரதான நாணயமாகவும் சட்டப்படி செலாவணியாகத்தக்கதாகவும் ஆக்கலாம் என்பதும் அந்நாணயத்தைப் பிறநாட்டுவர்த்தகக் கடனுக்கும் முழுமதிப்புள்ள தங்கநாணயத்தைப்போலவே வழங்கச் செய்யலாம் என்பதுமாம்! கேவலம் நாகரிகம் முதிர்ந்த மேனுடுகளெல்லாம் நிறைமதிப்புள்ள உலோகத்தாலேயே நாணயஞ் செய்யப்படவேண்டும் எனக் கருதிக்கொண்டிருக்க இருள்நிறைந்த இந்தியா அக்கோட்பாட்டின் அறியாமையை வெளிப்படுத்துமாறு ஒரு புதிய திட்டத்தை ஏற்படுத்தியது வியப்பன்றோ? அது மேல்வருங் கட்டுரையில் விவரிக்கப்படும்.

8

தங்கமாற்றுத்திட்டம்

(The Gold Exchange Standard)

இந்தியாவின் நாணய சரித்திரம் மிகப் பழமை வாய்ந்தது. இருக்குவேத காலத்திலேயே சிறுபான்மை வெள்ளிநாணயங்களும் பெரும்பான்மை தங்கநாணயங்களும் வழங்கிவந்தனவாகச் சரித்திர ஆசிரியர் கூறுகின்றனர். ஆயினும் பண்டைக்காலந்தொடங்கிப் பல்லாயிரவாண்டுகளாக இந்நாட்டை யாண்ட பேரரசர்களும் சிற்றரசர்களும் தங்கள்தங்கள் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் வழங்குவதற்காக ஒவ்வொருவரும் தனிப்பட்ட நாணயங்களை வெளியிட்டுவந்தமையால் ஏககாலத்தில் மிகப்பல நாணயங்கள் செலாவணியிலிருந்தன.* மேலும் ஆங்கிலேயர் இத்தேயத்தைக் கைப்பற்றினபின்னும் தொடக்கத்தில் சென்னை, பம்பாய், வங்காளம் ஆகிய மூன்று மாகாணங்களிலும் வழங்குவதற்காக ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனிப்பட்ட வெள்ளிநாணயங்களையும் தங்கநாணயங்களையும் வெளியிட்டனர். இவ்வாறாக ஏககாலத்தில் எண்ணிறந்த நாணயங்கள்

---

* இதுகாறும் கணக்கிடப்பட்டவை 172 வகையான தங்க நாணயங்களும் 343 வகையான வெள்ளி நாணயங்களும் ஆம். செப்புக்காசுகளோ எண்ணிறந்தன. இவை ஒவ்வொன்றின் சரித்திரத்தையும் இங்கு ஆராய்வது அவசியமன்று.

தேசத்தில் உலாவிவந்தமையால் வர்த்தகத்துறையிற் பல இடையூறுகள் நிகழ்ந்தன. இவற்றை நீக்குமாறு 1835-ம் வருடத்தில் கிழக்கிந்திய வர்த்தகக்குழுவின் நிர்வாக சபையார் (Board of the Directors of the East India Company) ஒரு சீர்திருத்தத்தையாரம்பித்தனர்.

வெள்ளிநாணயத்திட்டம்.

2. அச்சீர்திருத்தம் வெள்ளிநாணயமாகிய ரூபாய் ஒன்றைமட்டுமே தேசமுழுவதற்கும் சட்டப்படி செலாவணியாகக்கூடிய முதன்மை நாணயமாக்கியதுதான் (The silver Rupee was made universal legal tender money). எல்லா மாகாண நாணயசாலைகளினின்றும் வெளியிடப் பெறும் ஒரு தோலா எடையுள்ள ஒவ்வொரு ரூபாயும் 165 தானியமணி சுத்த வெள்ளியும் 15 தானியமணி செம்பும் சேர்ந்ததாக இருக்கவேண்டுமென்றும், இவ்விகிதப்படி வெள்ளியை நாணயசாலைகளுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து நாணயங்கேட்பாருக்கு ரூபாயும், ரூபாயைக் கொடுத்து வெள்ளியைக் கேட்பாருக்கு வெள்ளியும் கொடுக்கப்படுமெனவும் விளம்பரமிடப்பட்டது. இம்முறையை வெள்ளிநாணயத்திட்டம் (Silver Standard) என்பர். இங்கிலாந்தில் தங்கநாணயத்திட்டமும் இதர மேனுடுகளில் இரட்டைநாணயத்திட்டமும் நடைபெற்றுக்கொண்டிருக்க இந்தியாவில்மட்டும் ஆங்கிலேயர் வெள்ளித்திட்டத்தை நாட்டியது வியப்பன்றோ?

வெள்ளிக்கு வந்த விபத்து.

3. வெள்ளித்திட்டம் நிறுவிய சிறிதுகாலத்திற்குள் அத்திட்டம் சீர்குலையுமாறு சில சம்பவங்கள் நிகழ்ந்தன.

1840-க்குப்பின் தங்கஉற்பத்தி மிகுந்ததாலும் வெள்ளி உற்பத்தி குன்றியதாலும் தங்கவிலை குறைந்தும் வெள்ளி விலை அதிகரித்தும் வந்தது. எனவே நாணயஞ் செய்வதற்கு வேண்டும் வெள்ளி கிடைப்பது அரிதாயிற்று. 1854-க்கும் 1864-க்கு மிடையில் உலகத்தில் உற்பத்தியாக்கப் பட்ட எல்லா வெள்ளியையும் (அதிகவிலை கொடுத்து) இந்தியர் வாங்கி நாணயங்களாக்கியும் அவர்கள் வர்த்தக வளர்ச்சிக்குத்தக்கவாறு போதியவளவு நாணயங்களின் மையால் வட்டிவிகிதங்களும் அகவிலையும் உயர்ந்தன. பொருள் வளர்ச்சி மட்டுப்பட்டது. வெள்ளித்திட்டத்தை ஏற்படுத்தியதனுல் விளைந்த விளைவுகள் இவை.

4. ஆனுல் 1871-க்குப்பின் இதற்கு முழுதும் மாருன வேறொரு சம்பவம் நிகழ்ந்தது. நாம் முந்தின கட்டுரையிற் காட்டியபடி 1871-க்குப்பின் வெள்ளி உற்பத்தி மிகுதியினுலும் இரட்டைநாணயத்தேசங்கள் வெள்ளி நாணயங்களை விலக்கியதனுலும் வெள்ளிவிலை குறைந்து அது பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாக்கப்பட்டது. விலை குறைந்த இவ்வெள்ளியைப் பிறநாடுகளிலிருந்தும் வாங்கி வேண்டுமளவுக்கெல்லாம் நாணயங்களாகச்செய்து நாணயக் குறைவை இந்தியர் போக்கினர். 1871-க்கும் 1891க்கு மிடையில் 11½ கோடி ரூபாய்கள் பதிப்பிக்கப்பெற்றன. நாணயத்தேவை நீங்கிற்று! ஆனுல் வெள்ளியின் மதிப்புக் குறைந்துவிட்டபடியினுல் ரூபாயின் அகமதிப்பும் மாற்று விகிதமும் (rate of exchange with foreign currencies) குறைந்தன. 1871-ல் ரூபாய்க்கு 24 பெ. ஆக இருந்த ரூபாய்—பவுண்டு மாற்றுவிகிதமானது (Rupee-pound exchange) 1892-ல் 15 பெ. ஆகக் குறைந்துநின்றது.

வெள்ளிமதிப்புக் குறைந்ததால் விளைந்த விளைவுகள்.

5. வெள்ளிமதிப்பும் நாணயமாற்றுமதிப்பும் குறைந்ததால் விளைந்த கேடுகள் பல. அதனால் இந்திய அரசாங்கத்தார் இங்கிலாந்துக்குச் செலுத்தவேண்டிய கடன்வகையிற் பெரிதும் நஷ்டமடைந்தனர். 1871-க்குமுன் ஒருரூபாயைக் கொடுத்தால் 24 பெ. கடனைத் தீர்க்கலாம்; ஆனால் 1892ல் அந்த ரூபாயைக்கொண்டு 15 பெ. கடன்தான் தீர்க்கமுடிந்தது. இவ்விகிதப்படி இங்கிலாந்துக்கனுப்பவேண்டிய மொத்தக்கடன் தொகை 1·32 கோடி பவுண்டுக்கும் சுமார் 87 லக்ஷம் ரூபாய் நஷ்டமாயிற்று. இங்ஙனமாகவே இங்கிலாந்திலிருக்கும் தங்கள் குடும்பங்களுக்குப் பணம் அனுப்பும் 'ஸிவில் ஸர்விஸ்' (I. C. S.) உத்தியோகஸ்தர்களும் ரூபாய்-பவுண்டு மாற்று விகிதக் குறைவினாற் பெரும் நஷ்டமடைவதாக முறையிட்டனர். மேலும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாக்கப்பட்ட பொருள்களுக்கு நாம் அதிகவிலை கொடுக்கநேர்ந்தது. எப்படியெனில் 1871ல் 24 பெ. மதிப்புள்ள ஒரு பொருளுக்கு ஒரு ரூபாய் செலுத்தினாற் போதுமானதாயிருந்தது; ஆனால் 1892ல் அதே மதிப்புள்ள பொருளுக்கு ரூ.1. 6அ. கொடுக்கவேண்டியதாயிற்று.* ஆனால் நமது

* 16 அணா வெள்ளிமதிப்புடையதாக ரூபாய் இருக்கும்போது அதன் மாற்றுமதிப்பு 24 பெ. 1892-ல் ரூபாயிலடங்கிய வெள்ளிமதிப்பு அணா 10 ஆக இருந்ததனால் 6 அணா வெள்ளி அதிகங்கொடுத்தாலன்றி முன் 24 பெ. ஆக விற்ற அதே பொருளை வாங்கமுடியாது.

ஏற்றுமதிப் பொருள்களுக்கோ இலாபங்கிடைத்தது; எப்படியெனில் முன் 24 பெ. வீதம் கொடுத்துவாங்கவேண்டிய நமது தேயிலை, பருத்தி முதலியவற்றிற்கு ஆங்கிலேயர் இப்பொழுது 15 பெ. விகிதம் கொடுத்தாற் போதுமானது; ஆனதுபற்றி அவை அதிக அளவில் வாங்கப்பட்டன; அவற்றின் வர்த்தகமும் ஓங்கிற்று. எனினும் வெள்ளிவிலை ஸ்திரமாக இல்லாததினால் நாணயமாற்று விகிதம் அடிக்கடி மாறுபட்டது; வர்த்தகமும் ஸ்திரமாக நடைபெறாதிருந்தது.

ஹேர்சல் விசாரணைச்சபை.

6. மேற்கூறிய குறைகளை யொழிப்பதற்கு இரு முறைகளிருந்தன. அவற்றுட் சிறந்தது நிலைபேறற்ற வெள்ளியை விலக்கி நிலைபெற்ற தங்கநாணயத்திட்டத்தைக் கைக்கொள்வது. ஆனால் இந்தியாவும் தங்கத்திட்டத்தை ஏற்படுத்தினால் தங்கவிலை உயர்ந்து இங்கிலாந்தில் நாணயக் குறைவு விளையுமாதலால் ஆங்கிலேயர் அத்திட்டத்தை இத் தேசத்திற்கு வழங்க மறுத்தனர். இனிச் செய்யற்பாலது இரட்டைநாணயத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளுவதுதான். ஆனால் இத்திட்டத்தைப்பற்றி ஐரோப்பிய நாணயமகாநாடுகள் எவ்வித முடிபுக்கும் வந்தில. எனவே மேலேசெய்யத் தக்க வேறுமுறைகளை ஆராயுமாறு ஆங்கில அரசாங்கத்தார் ஹெர்சல் பிரபு (Lord Herschell) தலைமையின்கீழ் ஏழு பேரடங்கிய ஒரு விசாரணைச்சபையை நியமித்தனர். இச் சபையார் ஒரே ஒரு இந்தியரையும் இருபத்தாறு ஆங்கிலேயர்களையும் விசாரித்துத் தம் அறிக்கையை 1893 ஜூன்

26-ல் வெளியிட்டனர். இவ்வறிக்கையையொட்டி 1893-ல் இந்திய அரசாங்கத்தார் ஒரு புதிய நாணயத்திட்டத்தை நம்தேசத்தில் நிறுவினர்.

வெள்ளியையும் ரூபாயையும் வேறுக்கல்.

7. இப்புதிய நாணயத்திட்டத்தின்படி 1835-முதல் 1892-வரை வழங்கிவந்த வெள்ளித்திட்டம் விலக்கப்பட்டது. ஏனெனில் வெள்ளியின்விலை நாளுக்குநாள் குறைந்துகொண்டே போனபடியினுல் ரூபாயை ஸ்திரமான மதிப்புள்ள நாணயமாக நிற்கச்செய்வது கூடாதகாரியமாகத் தோற்றிற்று. எனவே வெள்ளிக்கு ரூபாயும் ரூபாய்க்கு வெள்ளியும் அரசாங்க நாணயசாலைகள்மூலமாய் வேண்டும்போதெல்லாம் பெற்றுக்கொள்ளும்படி பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமை அகற்றப்பட்டது. வெள்ளியை நாணயமாக்குவதும், அந்நாணயத்திலடங்க வேண்டிய வெள்ளியின் அளவைக் குறிப்பிடுவதும் அரசாங்கத்தாரின் தனியுரிமை யாக்கப்பட்டது.*

8. அரசாங்க நாணயசாலைகளுக்கு வெள்ளியைக் கொண்டுபோய் ஒருதோலா எடைக்கு ஒருரூபாயாக நாணயமாக்கிக்கொள்ளும் உரிமை குடிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததனுல் வெள்ளித்திட்டம் இயங்கிய காலமெல்லாம் வெள்ளிமதிப்பும் ரூபாய்மதிப்பும் (அகமதிப்பும் புறமதிப்பும்) சமமாக விருந்துவந்தன. அஃதாவது

---

* ஆதலின் இதை யதேச்சைத்திட்டம் (arbitrary standard) என வழங்கலாம்.

ஒருரூபாய் 16அணு வெள்ளியடங்கிய முழுமதிப்புள்ள நாணயமாக (full-valued money) விளங்கிற்று.* வெள்ளித்திட்டம் அகற்றப்பட்டகாலை (குடிகளின் நாணயஞ்செய்யுமுரிமை நீக்கப்பெற்றதென்பதும் அதுவே) வெள்ளி மதிப்பும் ரூபாய்மதிப்பும் வேறாகிவிட்டன. இதுகாறும் முழுமதிப்புள்ள நாணயமாகவிருந்த நமது ரூபாய் 1893ல் குறைமதிப்புள்ள குறிநாணயமாக (token) மாற்றப் பட்டது. அவ்வருடத்திலிருந்து ரூபாய்நாணயம் முன்போலவே ஒரு தோலா எடையுள்ள வெள்ளியாற்றான் (165 மணி சுத்தவெள்ளியும் 15 மணி செம்புங்கலந்து) செய்யப்படுகின்றது. ஆனால் அந்நாணயமதிப்புக்கும் (16அணு) அதிலடங்கியுள்ள வெள்ளிமதிப்புக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாதொழிந்தது.† ஒருதோலா வெள்ளியின் மதிப்பு எவ்வளவு குறைந்தாலும், அந்நிறையுள்ள ரூபாய் முன்போலவே எப்பொழுதும் மாறாத 16அணு மதிப்புடைய நாணயமாக விளங்கிவருகிறது.

குறிநாணயத்தை முழுமதிப்புடைய நாணயமாக வழங்கல்.

9. என்னை? சுயமதிப்புக்குன்றிய ஒரு நாணயம் எங்ஙனம் முழுமதிப்புடைய நாணயமாதல் கூடும்? அர

---

* உலோகமதிப்பும் நாணயமதிப்பும் ஒன்றுபோல இருந்து வருவது பொதுமக்களுக்கு நாணயஞ்செய்யுமுரிமையை வழங்கியிருத்தலால். வெள்ளி, தங்க நாணயத்திட்டங்களின் முக்கிய இலக்கணம் இதுவே யென்பது முந்தின கட்டுரைகளிலும் விளக்கப்பட்டுள்ளது.

† வெள்ளி உலோகமாகவும் ரூபாய்நாணயமாகவும் (கணக்கிடும் பணம்=money of account) மாறிற்று எனவுங் கூறலாம்.

சாங்கம் அதனை வெளியிடலாமா? அரசாங்கம் வெளியிடினும் அதைக் குடிகள் ஏற்றுக்கொள்வார்களா? அது செலாவணியிலுமிருந்துவருமா? ஆம். மதிப்புக்குன்றிய நாணயத்தை முழுமதிப்புடைய நாணயமாக்குவதும், * அந்நாணயத்தைக் குடிகள் ஒப்புக்கொள்ளச் செய்தலும், அரசாங்கத்தாற் கூடும். இதுவே ஹெர்சல் சபையார் கண்டறிந்து கொண்ட அரிய நாணய நியமம். நாணயம் அரசனாணையின் படி வழங்கப்படுவதொன்றன்றோ? முதன்முதல் இவ்வபூர்வ முறையை ஒரு பெரிய தேச முழுவதிலும் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தது இந்தியாதான்.† இம்முறையைத் தழுவினதால் வெள்ளித்திட்டத்தினால் விளைந்த கேடுகள் ஒழிந்து ரூபாய் நிலையானமதிப்புள்ள நாணயமாக விளங்கலாயிற்று. மேலும் பத்தணாமதிப்புடைய வெள்ளியைக்கொண்டு பதினாறணா மதிப்புடைய நாணயத்தைச் செய்து வழங்கிவந்ததால் மிகுந்த இலாபமுங் கிடைத்தது.

ரூபாய்—பவுண்டு மாற்றுவிகிதத்தைநிறுவல்.

10. உள்நாட்டுச் செலாவணிக்கு மதிப்புக்குன்றிய ரூபாயை முழுமதிப்புள்ள நாணயம்போல வழங்கிவிடலாம்;

---

* வெள்ளியை ரூபாயாகச் செய்யும் உரிமை முழுவதும் அரசாங்கத்தின் அதீனத்திலிருப்பதால்.

† மேல்நாடுகள் பலவற்றில் வெள்ளிநாணயங்கள் வழங்கப்பட்டுவந்தனவாயினும், அவை குறைந்த தொகைக்குமட்டுமே செலாவணியாந்தன்மையவாயிருந்தன. முடநாணயத்திட்டத்தைக் (limping standard) கைக்கொண்டிருந்த லத்தீன் ஐக்கியநாடுகளில் அவை முழுமதிப்புள்ள நாணயங்களாகப் பாவிக்கப்பட்டன. ஹாலந்திலும் ஜாவாவிலும் (Java) மட்டுமே குறிநாணயங்கள் முழுமதிப்புள்ள நாணயங்களைப்போலச் செலாவணியிலிருந்தன.

ஆனால் வெளிநாட்டு வர்த்தகக்கடனைத் தீர்ப்பதற்கு அது உபயோகிக்கப்படும்போது அதன் சுயமதிப்புப்படியன்றோ அதைப் பிறநாட்டார் ஏற்றுக்கொள்வர். பத்தணவெள்ளி யடங்கிய ரூபாயை அவ்விகிதத்திற்றான் அங்கீகரிப்பார்களேயன்றிப் பதினறணு வெள்ளியடங்கியுள்ளதாக ஏற்றுக்கொள்ளார். எனவே ரூபாயின் உள்நாட்டுச் செலாவணி மதிப்பைமட்டும் நிறுவியது போதாது; அதை வெளிநாட்டு நாணயங்களுக்கு மாற்றும்போதுண்டாம் மாற்று மதிப்பையும் (value in relation to foreign currencies) இறுத்தல்வேண்டும். இங்ஙனஞ் செய்தாலன்றி இந்திய அரசாங்கத்தார் இங்கிலாந்துக்குக் கொடுக்கவேண்டிய கடன்தொகையைச் செலுத்தும்போது நாணயமாற்றினலுண்டான நஷ்டம் நீங்காது. இதற்கும் ஹெர்சல் விசாரணைச் சபையார் ஒரு உபாயத்தைக் கற்பித்தனர். அஃது ரூபாய்க்கும் ஆங்கிலேயரின் தங்கநாணயமாகிய பவுண்டுக்கும் (£) ரூபாய்க்குப் பதினறு பென்ஸ் ஆக ஒரு நிலையான மாற்றுவிகிதத்தை (a fixed rate of exchange) நிறுவவேண்டும் என்பதே.

11. என்னை ? வெள்ளிவிலை நாளுக்குநாள் இறங்கிக்கொண்டிருக்க ஒரு வெள்ளிநாணயத்தின் மாற்றுமதிப்பை எங்ஙனம் ஸ்திரமாக இறுத்தல்கூடும் ?; அதுவும் 1893-ல் ஒருரூபாயிலடங்கிய வெள்ளியின் மதிப்பு சுமார் 15 பெ. ஆகக் குறைந்து நிற்கையில் அதைப் பதினறு பென்ஸ் ஆக எப்படி உயர்த்தக்கூடும்? நாணயத்தின் உள்நாட்டுச் செலாவணி மதிப்பை ஸ்திரப்படுத்துவதுபோலவே அதன் வெளிநாட்டு மாற்றுமதிப்பையும் ஸ்திரப்படுத்திவிடலாம்

என ஹெர்சல் சபையார் கூறினர். அங்ஙனம் ரூபாயின் மாற்றுமதிப்பை நிலைபெறுத்தற்குப் பின்வரும் உபாயங்களை யும் எடுத்துக்காட்டினர்.

ரூபாய்மதிப்பை 16 பென்ஸுக்கு உயர்த்தல்.

12. ஹெர்சல் சபையார் கூறிய முதல் உபாயம் யாதெனின் நாணயசாலைகளை நான்கு வருடங்களுக்கு மூடி விடவேண்டும் என்பதேயாம்! அங்ஙனஞ்செய்யும்போது ரூபாய்ச்செலாவணி குறையுமாதலால் ரூபாய்மதிப்பு உய ரும் அல்லவா? இவ்வாற்றால் 1893ல் 15 பெ. ஆக நின்ற ரூபாய்மதிப்பு 1898-ல் 16 பென்ஸுக்கு உயர்ந்தது! வெள்ளியின் விலைமதிப்பு நாளுக்குநாள் குறைந்துகொண்டு வந்தபோதிலும் வெள்ளியாற் செய்யப்பட்ட ரூபாயின் விலைமதிப்போ 15 பென்ஸிலிருந்து 16 பென்ஸுக்கு உயர்த்தப்பட்டது!

ரூபாய் வெளியீட்டின் அளவைத் திட்டஞ்செய்தல்.

13. ரூபாயின் மாற்றுமதிப்பைப் பதினறு பென் ஸாக நிலைபெறச்செய்ய ஹெர்சல் சபையார் முடிவுசெய்தன ராதலின் அதற்கு அவர்கள் கூறிய இரண்டாவது உபாயம் ரூபாயின் மதிப்பு 16 பென்ஸுக்கு உயர்ந்தபின் அரசாங் கத்தார் வெள்ளிநாணயங்களை வெளியிடலாம் என்பதாம். நாம் முற்கூறியபடி வெள்ளி நாணயங்களைச் செய்யும் உரிமை குடிகளுக்கு மறுக்கப்பட்டதாலும் அரசாங்கத்தார்மட்டுமே அவ்வுரிமையை ஏற்றுக்கொண்டனராகையாலும் ரூபாய்ச் செலாவணியின் அளவை வரையறுத்து ரூபாய்மதிப்பு எப்

பொழுதும் 16 பெ. ஆகவே இருந்துவரச்செய்தல் எளிது. தாள்நாணய வெளியீட்டை வரம்புக்குட்படுத்தி அதன் மதிப்பை நிலைபெறச் செய்தவாறே ரூபாய் வெளியீட்டையும் வரம்புக்குட்படுத்தி * அதன் மதிப்பையும் நிலைபெறச் செய்யலாம் என்பது ஹெர்சல் சபையார் கண்டறிந்த இரண்டாவது உண்மையாகும்.

14. ஹெர்சல் சபையார் கூறிய இரு உபாயங்களினுலும் ரூபாய்மதிப்பு 16 பென்ஸ் ஆக நிலைநிறுத்தப்பட்டது. ஆயினும் அயல்நாட்டார் நமது ரூபாய்களை அவ்விகிதப்படி ஏற்றுக்கொள்ளாரன்றோ? விலைமதிப்பற்ற தாளினுல் நாணயஞ்செய்து ஆயிரம்ரூபாய், நூறுபவுண்டு என உள்நாட்டில் வழங்கிக்கொள்ளலாமாயினும் அந்நாணயங்களை அயல்நாட்டார் அங்கீகரியாதவாறே ரூபாயின் மதிப்பு 16 பென்ஸுக்குச் சமமாக உயர்த்தப்பட்டபோதிலும் அதை அத்தகைய மதிப்புடையதாக அயல்நாட்டார் ஏற்றுக்கொள்ளார். ரூபாயிலடங்கிய வெள்ளிமதிப்புப்படியே அதனை ஏற்றுக்கொள்வர். ஆதலின் அயல்நாட்டுக் கடன்களைச் செலுத்துவதற்காகவும் ரூபாய் 16 பென்ஸ் மதிப்புடையதாகச்செய்யல்வேண்டும். அவ்வாறு செய்தாற்ருன் நாணய மாற்று ஸ்திரமாக நிலைபெறும்.

ரூபாய்க்கு மாற்ருகத் தங்கத்தை யளித்தல்.

15. நமது ரூபாயை எப்பொழுதும் ஆங்கிலேயரின் நாணயமாகிய சாவரனுக்கு ரூபாய்க்குப் பதினுறு பென்ஸ்

---

* 'The currency is kept at parity with gold not by a free market for gold but by a judicious management of the currency' (Weston).

விகிதத்தில் அரசாங்கத்தார் மாற்றிக்கொடுப்பராயின் ரூபாயின் மாற்றுமதிப்பு எப்பொழுதும் 16 பெ. ஆகவே நிலைபெற்றுவிளங்குமல்லவா? தாள்நாணயத்தைத் தங்க நாணயத்துக்கு மாற்றிக்கொடுத்துவந்தால் தாள்நாணய மதிப்பு தங்கநாணயமதிப்புக்குச் சமமாகவிருந்துவருவது போலவே விலைமதிப்புக்குன்றிய ரூபாயைச் சாவரனுக்குக் குறிப்பிட்ட விகிதத்தில் மாற்றிக்கொடுத்தால் ரூபாயின் மாற்று மதிப்பு எப்பொழுதும் அவ்விகிதப்படி ஸ்திரமாக இருந்துவருவதில் ஐயமென்ன? ஸர் ஹென்றி பவுலர் (Sir Henry Fowler) என்பவர் தலைமையின்கீழ் 1898-ல் நியமிக்கப்பட்ட புதிய விசாரணை ஸபையார் இவ்வுண்மையைக் கண்டறிந்து ரூபாயின் மாற்றுமதிப்பைப் பதினாறுபென்ஸாக நிலைநிறுத்தவேண்டுமென்று பின்வரும்உபாயத்தைக் கற்பித்தனர்.

ரூபாய்க்கு மாற்றாகத் தங்கத்தைக் கொடுத்தல்.

16. பத்தணா வெள்ளிமதிப்படங்கிய ரூபாயை ஆங்கிலேயரின் பவுண்டு நாணயமாகிய தங்கநாணயத்துக்குப் பதினாறுபென்ஸ்விகிதப்படி மாற்றிக்கொடுப்பதானால் அரசாங்கத்துக்கு நஷ்டமேற்படுமல்லவா? ஆதலால் ரூபாய் நாணயத்தைப் பதிப்பித்தலாற் கிடைக்கும் இலாபத்தை (ஒரு தோலா வெள்ளியை ஒருரூபாய் நாணயமாகச் செய்வதில் அரசாங்கத்துக்கு ஆறணா இலாபம் ஏற்படுவதை) அரசாங்கத்துக்கு வருமானமாகச் சேர்க்காமல் அதைத் தங்கமாக மாற்றி இருப்பாக (reserve) வைத்துக் கொண்டு அந்தத் தங்கத்தை வெளிநாட்டுக் கடன்களைத்

தீர்க்க ரூபாயைக் கொடுத்துத் தங்கம் கேட்பாருக்குக் கொடுப்பின் அரசாங்கத்துக்கு யாதொரு நஷ்டமும் ஏற்படாதெனப் பவுலர்ஸபையார் கூறினர். இத்தீர்மானத்தை ஒப்புக்கொண்டு 1900-ம் வருடத்தில் இந்திய அரசாங்கத்தார் ரூபாய் நாணயப் பதிப்பிலேற்பட்ட இலாபத்தைத் தங்கமாக மாற்றி இருப்பாக வைத்தனர்.*

17. வெளிநாட்டுக் கடன்களைத் தீர்க்கவேண்டுவார் ரூபாயைக் கொடுத்துத் தங்கம் கேட்கும்போது இருப்பாக வைக்கப்பட்ட தங்கத்திலிருந்து ரூபாயைத் தங்கமாகக் குறிப்பிட்ட மாற்றுவிகிதத்தில் அரசாங்கத்தார் மாற்றிக் கொடுக்கின்றனராகையால் இதைத் தங்கமாற்றுத் திட்டம் (gold exchange standard) என வழங்கினர். வெளிநாட்டுக் கடன்களைத் தீர்க்கத் தங்கம் வேண்டுவாருக்கு மட்டுமே ரூபாய்க்கு மாற்றாகத் தங்கம் கொடுக்கப்படுகிறது. உள்நாட்டுச் செலாவணிக்கு ரூபாய் நாணயம் ஒன்றுமட்டுமே வழங்கப்படுவதனாலும் ரூபாயைக் கொடுத்துத் தங்கம் கேட்போருக்கெல்லாம் (16 பெ. விகிதப்படி) அரசாங்கத்தார் தங்கம் கொடுக்கமுடியாததாலும் ரூபாய்க்கு மாற்றாகத் தங்கம் கொடுப்பது உள்நாட்டுச்செலாவணிக்கு அன்றாம்.

* போதிய அளவு தங்கம் இவ்வாறு சேர்க்கப்பட்டபின் வெள்ளி நாணயமாகிய ரூபாய்நாணயத்தை யொழித்துத் தங்க நாணயத்திட்டத்தை இந்தியாவிலும் அமைக்கவேண்டும் எனப் பவுலர் ஸபையார் அபிப்பிராயப்பட்டதனால் அவர்கள் கூறியபடி இவ்விதமாக இருப்பாக வைக்கப்பட்ட தங்கத்தைத் தங்க நாணயத் திட்ட இருப்பு (gold standard reserve) என வழங்கினர்.

தங்கத்தை ரூபாயாக மாற்றிக்கொடுத்தல்.

18. வெளிநாட்டுக் கடன்களைத் தீர்ப்பதற்கு நமது ரூபாய் உபயோகப்படாததுபற்றி அதைக் குறிப்பிட்ட விகிதத்தில் அரசாங்கத்தார் தங்கமாக மாற்றிக் கொடுக்கிறார்கள். அவ்வாறே பிறநாட்டார் நமது தேசத்தினருக்குச் செலுத்தவேண்டிய கடன்களுக்குத் தங்கத்தை அனுப்பினால் அது நமக்கு நாணயஞ்செய்வதற் குபயோகப்படாதாகையால் அத்தங்கத்தை அரசாங்கத்தார் வாங்கிக் கொண்டு 16 பெ. விகிதப்படி நமக்கு ரூபாய்களாக மாற்றிக் கொடுக்கின்றனர்.

19. இங்ஙனமாக வெளிநாட்டுக்கடன்களைத் தீர்க்க வேண்டுவோருக்கு ரூபாய்க்கு மாற்றாகத் தங்கமும், வெளிநாட்டார் நம் நாட்டாருக்குச் செலுத்தும் தங்கத்துக்கு மாற்றாக ரூபாயும் குறிப்பிட்ட மாறாத விகிதத்தில் எப்பொழுதும் எந்த அளவிலும் அரசாங்கத்தார் கொடுத்து வந்ததனால் ரூபாயின் மாற்றுமதிப்பு 16 பெ. ஆக நிலை பெற்றுவந்தது. குறிப்பிட்ட விகிதப்படி ரூபாய் மதிப்பை அரசாங்கத்தார் நிலைநிறுத்திவந்தகாலமெல்லாம் இந்தியா தங்கமாற்றுத்திட்டத்தைக் கைக்கொண்டுவந்ததாகவும் அங்ஙனம் செய்யாதகாலத்துத் தங்கமாற்றுத்திட்டத்தை நீக்கியதாகவுங் கொள்க.

பொழிப்புரை.

20. நாம் இதுகாறும் விவரித்துக்கூறிய தங்கமாற்றுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் (1) மதிப்புக்குறைந்த

குறிநாணயத்தை முழுமதிப்புடைய பிரதானநாணயமாக உள்நாட்டில் வழங்கச்செய்தலும் (2) அந்நாணயத்துக்கும் தங்கத்துக்கும் குறிப்பிட்ட ஒரு மாற்றுவிகிதத்தை நிலைபெறுத்தலும் ஆம்.

21. குறிநாணயத்தை முழுமதிப்புடைய நாணயம் போல வழங்கவேண்டுமாயின் அதன் வெளியீட்டை அரசாங்கத்தார் வரையறுக்கவேண்டும்; ஆதலின் தங்க மாற்றுத் திட்டத்தின் முக்கிய அம்சம் அரசாங்கத்தார் நாணய வெளியீட்டைத் தம் வசமாக்கிக் கொள்ளலாம். மேலும் வெளிநாட்டுக் கடன்களைத் தீர்ப்பதற்கு ரூபாய்க்கு மாற்றாகத்தங்கமும், வெளிநாட்டினின்றுவரும் தங்கத்துக்கு மாற்றாக ரூபாயும் குறிப்பிட்ட விகிதத்தில் எப்பொழுதும் கொடுத்து வருவதும் அவசியமாதலால் நாணயமாற்றுப் பொறுப்பும் அரசாங்கத்தார் (அன்றித்தலைமைப்பாங்கியின்) வசமாகிவிடுகிறது. இங்ஙனமாக நாணயமாற்றுப்பொறுப்பை நிர்வகிப்பதற்காகக் குறிநாணயத்துக்கு மாற்றாகக் கொடுக்கப்படவேண்டியதங்கத்தை இருப்பாகவைத்துக்கொள்ளவேண்டுவது (gold reserve) அவசியம். அவ்வாறு செய்துகொள்வதனால் குறிநாணயத்தைக்கொண்டு தங்கநாணயச்செலாவணியால் எழும் பயன்களைப் பெறமுடிகின்றது.*

---

* 'The gold exchange standard arises out of the discovery that so long as gold is available for payments of international indebtedness at an approximately constant rate in terms of the national currency it is a matter of comparative indifference whether it actually forms the national currency' (Keynes, *Indian Currency and Finance*, P. 30).

தங்கமாற்றுத்திட்டத்தின் சிறப்பு.

22. மேனுடுகளெல்லாம் நாணயத்திட்டப்போரில் கலந்துகொண்டு தங்கத்தை அல்லது தங்கத்தையும் வெள்ளியையும் சேர்த்து நாணயமாக உபயோகிக்கவேண்டுமென முயன்றுகொண்டிருக்கையில் இந்தியா மதிப்புக் குறைந்த தனது பழைய வெள்ளி நாணயத்தைக்கொண்டே உள்நாட்டு நாணயச்செலாவணியையும் வெளிநாட்டு நாணயமாற்றையும் திட்டஞ்செய்துகொண்டது பெருஞ்சிறப்பன்றோ? இத்திட்டத்தின்படி உள்நாட்டுச் செலாவணி மதிப்புக் குறைந்த உலோகத்தால் இயங்கிவருதலால் நாணயஞ் செய்வதில் மிகுந்த இலாபம் ஏற்படுகிறது. வெள்ளிக்குப்பதிலாகத் தாள் நாணயங்களையே நாம் உபயோகிப்பின் இதனினும் அதிக இலாபம் உண்டு.* நாணயமாற்று விகிதமும் நிலைபெற்று நிற்கும் (stability of exchanges). இக்காரணங்களினல் பிலிப்பைன்ஸ் தீவுகள் மெக்ஸிகோ, பனமா முதலிய நாடுகளில் இத்திட்டம் 1903ல் அமைக்கப்பட்டது ஐரோப்பிய மஹா யுத்தத்திற்குப்பின் இத்திட்டம் பல ஐரோப்பிய நாடுகளிலும் கைக்கொள்ளப்பட்டது.

---

* 'The rupee, being a token coin, is virtually a note printed on silver. The custom and convenience of the people justify this so far as concerns payment in small sums. But in itself it is extravagant' (Keynes).

9

* யுத்தத்திற்குமுன் வழங்கிய நாணயத்திட்டம்
(The Pre-War Monetary System)

1816-ல் ஆங்கிலேயரும், 1873-ல் ஜெர்மானியரும், 1893-ல் லத்தீன் ஐக்கியநாட்டினரும் தங்கத்திட்டத்தை ஏற்றுக்கொண்டதனாலும், 1893-க்குப்பின் இந்தியா பிலிப்பைன்ஸ் தீவுகள், மெக்ஸிகோ முதலிய நாடுகள் தங்கமாற்றுத் திட்டத்தை நிறுவித் தத்தம் தேசநாணயங்களைத் தங்க நாணயங்களுடன் இணைத்துவிட்டதனாலும் உலகமெங்கணும் ஏறக்குறைய ஒரேவகை நாணயத்திட்டம் அமைக்கப்படலாயிற்று. தங்கத்திட்டத்தைக் கையாண்டிருந்த தேசங்களில் தங்கநாணயச் செலாவணியும் தாள்நாணய வெளியீட்டுக்குச் சட்டப்படி வைக்கவேண்டிய தங்க இருப்பும் குறைவற இருந்துவந்தன. தங்கமாற்றுத் திட்டத்தைக் கையாண்ட தேசங்களின் நாணயம் குறிப்பிட்ட மாற்றுவிகிதத்தில் (உதாரணம்:—ஒரு ரூபாய்=16 பென்ஸ்) எப்பொழுதும்

---

* இந்நூலில் 'யுத்தம்' என்பது 1914-க்கும் 1918-க்கும் இடையில் நிகழ்ந்த ஐரோப்பிய மஹாயுத்தத்தைக் குறித்துநிற்கும். இப்பதம் ஆங்கில வழக்கைத் தழுவி இக்கருத்துடன் வழங்கப்படுகிறது.

தங்கத்துக்கு மாற்றிக்கொள்ளப்பட்டும் வந்தது. தங்கவிலையும் ஸ்திரமாக நிலைபெற்றிருந்தது. (உதாரணம்:—ஒரு அவுன்ஸ் 22 மாற்றுத்தங்கம் 3 ப. 17 ஷி. $10\frac{1}{2}$ பெ.) தங்கவிலை ஸ்திரமாக இருந்ததால் செய்பொருள்கள் விளைபொருள்களின் விலையில் அதிக ஏற்றத்தாழ்வும் இல்லாதிருந்தது. இங்ஙனமாகக் கடந்த ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்த 1914ம் வருடம்வரை உலகநாணயத்திட்டங்களில் அமைதி ஏற்பட்டிருந்தது. இதற்குக் காரணம் தங்கத்திட்டமே எனவும் ஆதலின் அதுவே பெருஞ்சிறப்பு வாய்ந்ததெனவும் மக்கள் கொள்ளலாயினர். இக்கோட்பாட்டை இங்கு ஆராய்ச்சி செய்வாம்.

தேவைக்குத்தக்க தங்கவுற்பத்தி.

2. தங்கத்திட்டம் நிலைபெறவேண்டுமானால் செலாவணிக்கு வேண்டுமளவு தங்கநாணயங்களைச் செய்வதற்கும் தாள்நாணய வெளியீட்டுக்கு இருப்பாக வைப்பதற்கும் தங்கம் எப்பொழுதும் கிடைத்துக்கொண்டிருக்கவேண்டும். சென்ற நூற்றாண்டில் வருடந்தோறும் நூற்றுக்கு மூன்று விகிதம் (3%) பொருள்களின்உற்பத்தி அதிகரித்துவந்ததென ஆசிரியர் கேசல் கூறுகிறார்; அப்படியாயின் அப்பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் முன்னிருந்ததைவிட நூற்றுக்கு மூன்றுவிகிதம் நாணயங்கள் அதிகப்பட்டிருக்கவேண்டும். அதிர்ஷ்ட வசத்தினால் பிரஸ்தாபகாலத்தில் (1816–1914) நாணயஞ் செய்வதற்குவேண்டும் தங்கம் தேவைக்குத் தக்கவாறு கிடைத்துவந்தது. 1846-ல் தங்கவுற்பத்தி குறைந்து நாணயத்தேவை மிகுந்தகாலத்தில் ஆஸ்திரேலியா

விற் புதிய தங்கக் கனிகள் கண்டுபிடிக்கப்பட்டு மிகுதியான தங்கம் வெட்டியெடுக்கப்பட்டது. அவ்வாறே 1893-ல் தங்க வுற்பத்தி குறைவுபட்டிருக்கும்பொழுதும் தென் ஆப்பிரிக்காவிற் புதிய தங்கக்கனிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்ஙனமாகக் கடந்த நூற்றாண்டில் ஏறக்குறையத் தேவைக்குத் தக்கவாறு தங்கம் கிடைத்துவந்ததால் நாணயக்குறைவு ஏற்படாதிருந்தது.†

3. சென்ற நூற்றாண்டில் பொருள் உற்பத்தி நூற்றுக்கு மூன்று விகிதமும் தங்கவுற்பத்தி நூற்றுக்கு 2·8 விகிதமும் உயர்ந்து வந்ததால் நாணயக்குறைவு ஏற்படாதிருந்ததென்பது ஆசிரியர் கேசலின் கோட்பாடு. (*Interim Report* of the Gold Delegation of the Financial Committee of the League of Nations). இக் கோட்பாட்டை வேறு பல ஆசிரியர்களும் ஆதரிக்கின்றனர். ஆயினும் கொடுக்கல் வாங்கல், உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகங்கள் முதலியன வருடந்தோறும் பெருகிக்கொண்டு வந்தமையால் பொருள் உற்பத்திக்குத் தக்க அளவில்மட்டும் கிடைத்த தங்கத்தைக்கொண்டு பொருள் மாற்றுக்குத் தேவையான அளவில் எழுந்த நாணயக்

---

† இயற்கை விளைவாயுள்ள தங்கமானது மனிதரின் தேவைக்குத்தக்க அளவு (மிகுதிப்படாமலும், குறைவுபடாமலும்) எப்பொழுதும் கிடைத்துவருமென்பது என்ன நிச்சயம். அங்ஙனம் எதிர்பார்ப்பதும் மடமையன்றோ? தற்கால நிபுணர்களின் ஆராய்ச்சிப்படி 1940-க்குப்பின் தங்கவுற்பத்தி குறைந்துகொண்டுபோகுமாம்! அக்காலத்தில் எல்லாத்தேசத்தினரும் இப்போதுள்ளவாறு தங்கத் திட்டத்தை ஆதரித்தல் கூடுமா?

குறைவைப் போக்கியிருக்கமுடியாது. பிரஸ்தாபகாலத்தில் ஒவ்வொரு தேசத்திலும் தாள்நாணயங்களும் பாங்கிச்செக்குகளும் (cheques) உலோகநாணயங்களுக்குப் பதிலாக வழங்கப்பட்டன. வெளிநாட்டு வர்த்தகப் பற்றுவரவுக் கணக்கும் உண்டியற்சீட்டுக்களாற் (bills of exchange) தீர்க்கப்பட்டுவந்தமையால் அதிகப்பற்றாக நின்ற மிகச்சிறிய தொகைக்குமட்டுமே தங்கம் நாணயமாக வழங்கப்பட்டது. எனவே தேவைக்குத்தக்கவாறு நாணயஞ்செய்வதற்குத் தங்கம் கிடைத்துவந்தபோதிலும் உண்மையில் தாள்நாணயங்களை வழங்கியதனாலேயே நாணயக்குறைவு நீங்கிற்றெனக் கொள்ளல்வேண்டும்.

தங்கத்திட்டத்தை ஆட்சிக்குட்படுத்தியது.

4. ஆயினும் தங்கத்திட்டம் பிழைபட்டொழிந்திருக்கலாம். தங்கத்திட்டத்தில் எவ்விதத் தனிச்சிறப்பும் அமைந்திலது; அத்திட்டம் தானே இயங்கும் ஆற்றல் வாய்ந்ததும் அன்று. எல்லாத்தேயத்தினரும், விசேடமாக ஆங்கிலேயரும், அத்திட்டம் பிழைபடாது காத்துவந்ததனாற்றான் உலக நாணயத்திட்டங்களில் அமைதியும்,விலைநிலையில் ஏற்றத்தாழ்வின்மையும், நாணயமாற்றில் நிலைவரமும் ஏற்பட்டிருந்தன. சென்ற நூற்றாண்டு முழுவதும் தங்கத்திட்டம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது; தங்கத்திட்டத்தை ஆங்கிலேயர் எவ்வாறு தம்மாட்சிக்குட்படுத்திவந்தனரெனக் கீழே கூறுவாம்.

5. கடந்த நூற்றாண்டில் இங்கிலாந்து ஒப்புயர்வில்லாச் செல்வப்படைத்துவிளங்கியது. இச்செல்வப்பெருக்குக்

குக் காரணம் இயந்திரக்கருவிகள், அவற்ருற் செய்யப்பட்ட துணி, இரும்பு, கண்ணுடி முதலிய அரிய செய்பொருள்கள் போன்றவற்றை இங்கிலாந்து பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்து, விற்று, இலாபம்பெற்றதேயாம். இப்பொருள்களை வாங்கிய மற்றைத் தேயங்கள் இங்கிலாந்துக்குத் தங்கத்தை அனுப்பிக் கணக்குத் தீர்த்தன. ஆதலால் வருடந்தோறும் தங்கம் பெருவெள்ளமாக இங்கிலாந்தினுட்புகுந்தது.* மற்றத் தேசங்கள் தங்கநாணயங்களை வழங்கவேனும், தத்தம் தாள் நாணய வெளியீட்டுக்குத் தங்கத்தை இருப்பாக வைக்க வேனும் முடியாது உழன்றன. இங்ஙனமாக, தங்க வியாபகத்தில் (distribution of gold) எழுந்த கேட்டினுல் தங்கத் திட்டம் நீங்கும் நிலையில் இருந்தது. ஆனுல் அது நீங்கா வண்ணம் ஆங்கிலேயர் ஓர் உபாயத்தைக் கையாண்டனர். அஃது தங்கத்தைக் கடனுகக் கொடுத்து வழங்கலாம்.

தடையற்ற கொடுக்கல்வாங்கல்.

6. தம் தேசத்துக்குட் புகுந்த தங்கத்தை ஆங்கிலேயர் பிறநாடுகளுக்குக் கடனுகக் கொடுத்துதவுவார்களாயின் அத்தேசங்களும் தங்கத்திட்டத்தைக் கையாண்டுவரல் கூடும். ஆனுல் அத்தேசங்கள் இவ்வாறு வாங்குங் கடன்களை எப்படித் திருப்பிச்செலுத்தும்? தங்கமாகச் செலுத்த

---

* 1816-ம் வருடத்தில் இங்கிலாந்துபாங்கியின் தங்க இருப்பு (gold reserve) 70 லக்ஷம் பவுண்டுதான்; ஆனுல் ஆறு வருடங்களுக்குள் (1822-ல்) அது 100 லக்ஷம் பவுண்டாக உயர்ந்தது. அன்றியும் அவ்வாறு வருடங்களுக்குள் 170 லக்ஷம் பவுண்டுமதிப்புள்ள சாவரன் நாணயங்களும் வெளியிடப்பட்டன.

முடியாவென்பது திண்ணம். ஆனால் பொருள்களாகச் செலுத்தலாம். பொருள்களாகச் செலுத்தினால் அவற்றை இங்கிலாந்து அங்கீகரிக்கவேண்டும். அவற்றிற்கு எவ்வித வரித்தடையும் இடலாகாது.

வரித்தடையற்ற வர்த்தகம்.

7. கடந்த நூற்றாண்டில் பெரும்பாலும் ஆங்கிலேயரும் மிகச்சிறுபான்மை, பிரஞ்சுக்காரர், ஜெர்மானியர் முதலியோரும் நாம் மேற்கூறியவாறு கடன் கொடுத்துதவும் முதலாளிகளாக விளங்கினர். கானடா, அமெரிக்கா முதலான மேல்நாடுகளும் இந்தியா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா முதலிய எல்லாக் கீழ்நாடுகளும் கடன்பட்ட தேசங்களாகவும் விளங்கின. முதலுடைய தேசங்கள் செய்பொருள்களைச்செய்து அவற்றைக் கடன்பட்ட தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்தும், கடன்பட்ட தேசங்கள் விளைபொருள்களை விளைவித்து அவற்றை முதலுடைய தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்தும் வந்தன. அன்றியும் கடன்பட்ட தேசங்களின் பொருளாதார நிலையை அபிவிருத்திசெய்யுமாறு ரெயில்வே நீர்ப்பாய்ச்சல் முதலியவற்றுக்குரிய ஸ்தாபனங்களை அமைப்பதிலும், பாங்கித்தொழில் முதலிய சேவைகளை ஆற்றுவதிலும் முதலுடைய தேசங்கள் பெரிதும் உதவிபுரிந்தன. இத்தகையவர்த்தகம் இருதிறத்தாருக்கும் இலாபமாகவிருந்தது. ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு எத்தேசத்திலாகிலும் வரித்தடையும் இடப்படவில்லை. தடையற்ற கொடுக்கல் வாங்கல் இருக்குங்காலை வரித்தடையற்ற வர்த்தகத்திட்டம் (Free Trade) இருப்பது இயல்பு.

ஆங்கிலேயரின் ஸ்டேர்லிங் உண்டியல்கள்.

8. இங்ஙனமாக நடந்துவந்த கொடுக்கல் வாங்கலும் பொருள்மாற்றும் உண்டியற் சீட்டுக்களின் ஆதரவின்மேல் நடைபெற்றன. உண்டியற் சீட்டுக்கள் உபயோகிக்கப்பட்டதனல் தங்கத்தை அங்குமிங்கும் அனுப்பிக் கணக்குத் தீர்க்குஞ் சிரமம் நீங்கியது. இவ்வுண்டியற்சீட்டுக்களுக்குப் பணங்கொடுத்தவர்கள் லண்டன் நகரத்திலுள்ள ஆங்கிலேயப் பாங்கர்கள். எல்லாத் தேசத்தவர்களின் பற்றுவரவுகளையும் தம் தேசநாணயமாகிய பவுண்டுஸ்டெர்லிங்கிற் கணக்கிட்டு அவற்றைத் தீர்த்தபின் எஞ்சிநின்றதொகைக்கு மட்டுமே பாங்கர்கள் தங்கத்தை அனுப்பிவந்தனர்.*

தங்கமே முடிவான மதிப்புக்கருவி.

9. ஆயினும் சென்றநூற்றுண்டில் ஸ்டெர்லிங் உலக நாணயமாக வழங்கப்பெற்றபோதிலும் தங்கமே ஸ்டெர்லிங்குக்கு ஆதாரமாகவும் துணைக்காரணமாகவும் இருந்ததென நாம் வற்புறுத்தவேண்டும். உள்நாட்டுச் செலாவணியிலும் வெளிநாட்டுச் செலாவணியிலும் ஒரு அவுன்ஸ் தங்கம் எப்பொழுதும் 3 பவுண்டுஸ்டெர்லிங் 17 ஷிலிங் 10½

'நாணயமாற்று' என்ற நூலில் இக்கருத்துக்கள் விரிவாய் விளக்கப்பட்டுள்ளன.

* "The Sterling Standard combined with Free Trade had gone far to eliminate gold as the dominating factor in international commerce" (Sir Charles Morgan-Webb, *Ibid*, P. 67.)

பென்ஸ் என்ற மாருத விகிதத்திலே நிலைநிறுத்தப்பட்டு வந்தது. இங்ஙனம் தம் பவுண்டுஸ்டெர்லிங் கணக்குப்படி இறுக்கப்பெற்ற தங்கத்தின் விலை ஏருமலும் குறையாமலும் நிலைபெற்றுவருவதற்காகவே ஆங்கிலேயர் வரியற்ற வர்த்தகத்திட்டத்தையும் தடையற்ற கொடுக்கல்வாங்கலையும் கையாண்டனர். தங்கம் ஸ்டெர்லிங் நாணயத்திற்குத் திசையறி கருவியாகத் தொண்டுபுரிந்தது. ஒரு மரக்கலமானது நடுக்கடலில் வழி விலகாது செல்வதற்காக வைக்கப்பட்டிருக்கும் மிதப்பைப்போல (buoy) ஸ்டெர்லிங் நாணயச் செலாவணியின் அளவைக் காட்டத் தங்கம் வழிகாட்டியாய் விளங்கிற்று. † இக்கருத்தைப் பின்வருமாறு விளக்கிக்காட்டலாம்.

ஒரு உதாரணம்.

10. ஒரு தேசத்தில் (உதாரணமாகக் கானடாவில்) வருடந்தோறும் (1931, 1932, 1933 ஆகிய மூன்று வருடங்களிலும்) பத்துக்கோடி பவுண்டு வர்த்தக இறக்குமதியில் அதிகப்பற்றுக (debit balance) விளங்கிவருமாகில் அவ்வர்த்தகக் கடனைத்தீர்க்க அவ்வளவு மதிப்புள்ள தங்கம் அத்தேசத்தைவிட்டு வெளிப்போம் என்பது தேற்றம். தங்கநாணயத்திட்டம் இருக்கிற தேசங்களில் தங்கத்தை இவ்வாறு வெளிப்போக விடார்கள். ஏனெனில் வெளிப்போகும் தங்கமானது தலைமைப்பாங்கியிலிருந்து வர்த்தகர்

† "Gold had been reduced to its true position, as the servant and not the master in the world of trade and industry" (Sir Charles Morgan-Webb).

களால் தாள்நாணயங்களுக்கு மாற்றி வாங்கியனுப்பப்படும் தங்கமேயன்றிப் புதையல்களிலிருந்தாவது பொதுமக்களி-லிருந்தாவது விற்கப்படுவதல்ல. தலைமைப்பாங்கியில் தங்கம் குறைந்தால் தாள்நாணயத்துக்கு ஈடாக வைத்துள்ள தங்கத்தின் அளவும் குறையும்; அப்பொழுது தாள்நாணயத்தின் அளவைச் சட்டப்படி குறைக்கவேண்டும். நாணயத்தின் அளவு குறைந்தால் பணமுடை ஏற்படும்; பாங்கி வட்டி உயரும்; விளைபொருள்கள் செய்பொருள்களின் விலைகள் எல்லாம் குறையும்.

11. கானடாவிலிருந்து வெளிப்போந்த தங்கமானது இங்கிலாந்தினுட் சென்றதென வைத்துக்கொள்வோம். அப்பொழுது என்ன நிகழும்? பொருளாதாரநிலையில் முன்னேற்றமடைந்த தேசங்களில் தங்கமானது சிறுபான்மை ஆபரணங்களாக உபயோகப்படுகிறதே யன்றிப் பெரும்பான்மை தாள்நாணய வெளியீட்டுக்கு ஆதாரமாகவே உபயோகிக்கப்படுகிறது. எனவே கானடாவிலிருந்து வந்த தங்கம் தலைமைப்பாங்கியிற் போய்ச்சேரும். தங்கம் அதிகப்படுவதனால் தாள்நாணயமும் பாங்கிக்கடன்களும் (bank credits) அதிகமாக வெளியிடப்படும். நாணயம் அதிகப்பட்டால் பாங்கி டிபாசிட்டுகள் அதிகப்படும். அவற்றிற்கு முன்போல உயர்ந்த வட்டி கொடுத்துக்கொண்டுவந்தால் பாங்கியின் இலாபங் குறையுமாதலால் வட்டி விகிதம் குறைக்கப்படும். மேலும் நாணயம் அதிகப்பட்டிருப்பதனால் விலைநிலை உயரும். இங்கிலாந்துபாங்கியில் வட்டி குறைக்கப்பட்டதனால் அதிற் பணத்தை வட்டிக்குவிட்டு

வைத்திருக்கும் சுதேச பாங்கிகளும் அயல்நாட்டுப் பாங்கிகளும் அப்பணத்தை எடுத்து உயர்ந்த வட்டி கொடுக்கப்படும் கானடாதேசத் தலைமைப்பாங்கிக்கு அனுப்பும். மேலும் இங்கிலாந்தில் விளைபொருள்கள் செய்பொருள்களின் விலை உயர்ந்தும் கானடாவிற் குறைந்தும் இருப்பதால் ஆங்கிலேயர் கானடாவிலிருந்தே அதிகமான பொருள்களை இறக்குமதிசெய்வர். ஆங்கிலேயரின் ஏற்றுமதிகள் குறையும். எனவே இங்கிலாந்தைவிட்டுத் தங்கம் மீண்டும் வெளிப்போகத்தொடங்கும்.

12. கடந்த நூற்றாண்டில் இத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாத் தேசங்களிலும் நிகழ்ந்தமையால் இவை தங்கத் திட்டத்தில் அமைந்த சிறப்புக்கள் எனவும், மேட்டிலிருந்து பள்ளத்துக்குத் தண்ணீர் பாய்ந்தோடுவதுபோலத் தங்கமானது விலைநிலை குறைந்தும் பாங்கிகளின் வட்டி விகிதம் உயர்ந்தும் இருக்கும்தேசங்களுக்கு இயல்பாகவே போய்விடும் எனவும், ஆதலால் தங்கத்திட்டம் தானாகவே இயங்கும் ஆற்றல்வாய்ந்தது எனவும் (automatic standard) அதைக் கொண்டாடலாயினர். ஆயினும் ஐரோப்பிய மகாயுத்தகாலம்வரை தங்கத்திட்டம் இவ்வளவு ஒழுங்காகவும் சிறப்பாகவும் நிகழ்ந்ததற்குக் காரணம் நாம் முன்னே விவரித்தபடி ஆங்கிலேயர் தங்கள் ஸ்டெர்லிங் நாணயத்தால் தங்கவிலையை ஸ்திரப்படுத்தி எல்லாத்தேச நாணயச்செலாவணியையும் தம் ஆட்சிக்குட்படுத்திவந்ததேயாம். தங்கத் திட்டம் பாவையைப்போல் நடனம் புரிந்தது; ஆயினும் திரைக்குப் பின்னிருந்து அதை ஆட்டிவைத்தது ஸ்டெர்லிங் என்பதைப் பலரும் அறியாதிருந்தனர். எனவே

உலக வர்த்தகத்தில் ஸ்டெர்லிங் கணக்கிடும் பணமாகவும் ஸ்டெர்லிங்உண்டியல்கள் நாணயங்களாகவும் வழங்கப்பெற்றமையால் உண்மையில் உலகத்தில் தங்கநாணயம் அன்று, ஸ்டெர்லிங்உண்டியல் நாணயமே வழங்கப்பெற்றதென்றும்; ஆதலின் தங்கத்திட்டம் எனக் கூறுவது தவறு, ஸ்டெர்லிங்திட்டம் (Sterling Standard) எனக் கூறுவதே பொருத்தம் எனவும் பொருளாதாரநிபுணர் எடுத்துக் காட்டுவர்.*

---

*"The Gold Standard of the text books never existed in the real world; there never was one which was purely automatic operating with an inexhorable law. It was managed by London, so managed that the fact of its management was hardly realized" (Cole, *Money*, P. 107).

10

தங்கத்திட்டம் நீங்கியவாறு.

(The Breakdown of the Gold Standard)

ஐரோப்பிய மஹாயுத்தத்திற்குமுன் தங்கத்திட்டம் என்னும் பெயருடன் வழங்கிய ஸ்டெர்லிங் திட்டம் மிகவும் மெல்லிய திட்டம். எல்லாத் தேயத்தினரும் கொடுக்கல் வாங்கலிலும் வர்த்தகத்திலும் பிரியா நட்புப்பூண்டனராய் ஒழுகிவந்தனராதலால் அத்திட்டம் இயங்கிவந்தது. ஆனால் யுத்தம் ஆரம்பித்தவுடனே எல்லாத்தேயத்தினரும் அதைக் குரங்கின்கைப் பூமாலையாகக் குலைத்தனர். ஆகவே அத்திட்டம் பிழைபட்டொழிந்தது.

தங்கநாணயங்கள் செலாவணியிழந்தமை.

2. வீட்டில் நெருப்புப்பற்றிவிட்டாற் பெண்கள் முதலில் அணிகலன்களுள்ள பெட்டிகளை எடுத்துப் பத்திரப்படுத்தமுயலுவதுபோல 1914-ம் வருடம் ஆகஸ்டுமீ 4உயன்று மஹாயுத்தம் தொடங்கவும் ஒவ்வொருதேசத்திலும் அரசாங்கத்தார் தத்தம் தேசத்திலுள்ள தங்கத்தைப் பாதுகாக்க விரைந்தனர். தங்கநாணயங்களைக் குடிகள் ஒருவரும் வழங்கக்கூடாதெனவும் அவற்றைத் தலைமைப்பாங்கியிற்

12

கொடுத்துவிட்டுத் தாள்நாணயங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் சட்டங்கள் பிறந்தன. தேசபக்தி ததும்பிய பொதுமக்களிற் பெரும்பாலார் தத்தம் நகைகளையும் பொற்கலன்களையும் தலைமைப்பாங்கியில் தாமே கொண்டு போய்க் கொடுத்தனர். சிற்றோடைகளிலும் பெருநதிகளிலும் செல்லும் நீர் பெருவெள்ளமாகக் கடலிற் போய்க் கலக்குமாறு ஒவ்வொரு தேசத்திலுமுள்ள தங்கமும் தங்கநாணயங்களும் அவ்வத்தேயத்துத் தலைமைப்பாங்கியிற்போய்ப் புதைந்தன.* தங்கநாணயங்கள் செலாவணியிழந்தன. அவையும் போர்முனைக்குச்சென்று உயிர் துறந்தனபோலும் என ஓர் ஆசிரியர் பரிகாசமாகக் கூறுகிறார். தங்கநாணயங்கள் செலாவணியை இழந்தமையால் தங்கத்

---

*"Wars have sometimes served to disperse gold, as when Alexander scattered the temple hoards of Persia... But on this occasion war concentrated gold in the vaults of the Central Banks; and these banks have not released it...The touch of the metal has been taken away from men's greedy palms...Gold is out of sight—gone back again into the soil". (J. M. Keynes, ***A Treatise on Money,*** Vol. ii, P. 291).

யுத்தம் ஆரம்பித்த ஐந்து மாதத்திற்குள் ஜெர்மனியின் தலைமைப்பாங்கியில் 6.3 கோடி மார்க்குகள் மதிப்புள்ள தங்கம் அதிகப்பட்டது. 1917-ல் அப்பாங்கியின் மொத்தத் தங்க இருப்பு 25.33 கோடி மார்க்கு; யுத்தக்கருவி தளவாடங்களைப் பிறநாடுகளிலிருந்து வாங்குவதற்குச் செலவிட்டதுபோக 1918-ல் 22.62 கோடி மார்க்குத் தங்கம் இருப்பாக எஞ்சிநின்றது; இத்தொகை யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன்னிருந்ததைவிட இருமடங்கு அதிகமாம்.

திட்டம் பிழைபட்டிலது; தங்கத்தைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யவும், கடனுகக் கொடுத்துதவவும் கூடா தென அரசாங்கத்தார் தடுத்ததினுலேயே தங்க விலை உயர்ந்து தேச நாணயத்துக்கும் தங்கத்துக்கும் நிறுவப் பட்ட விலைமதிப்பு மாறித் தங்கத்திட்டம் நீங்கிற்று என்க.

தங்க இறக்குமதிக்குத் தடை.

3. போர்ச்செலவுகளுக்குத் தங்கம் அவசியமாக இருந்ததனுல் யுத்தத்திற்கலந்துகொண்ட தேசங்கள் தங்கத் தைத் தலைமைப்பாங்கியிற் சேர்த்துத் தங்க ஏற்றுமதியைத் தடுத்தன. ஆனுல் யுத்தத்திற் கலந்துகொள்ளாது நடு நின்ற தேசங்களிலோ (விசேடமாக ஸ்விட்ஜர்லாந் திலும் ஸ்வீடனிலும்) தங்கம் உட்புகாதபடி தங்கஇறக்கு மதிக்குத் தடையிடப்பட்டது! என்னை? எக்காலத்தும் எவராலும் எந்த அளவிலும் விரும்பத்தக்க தங்கத்தை இத்தேயத்தார் ஏன் வேண்டாமென்று விலக்கினர்? (gold exclusion) யுத்தத்திற் கலந்துகொண்ட தேசங்களால் நடு நிலைத் தேசங்களுக்கு அனுப்பப்பட்ட தங்கம் வானத்தி லிருந்து பெய்யும் மழையைப்போலக் கைம்மாறின்றி வந்த தல்ல. அனுப்பப்பட்ட ஒவ்வொரு அவுன்ஸ் தங்கமும் போர்க்கருவிகள், ஆடை, உணவுப்பொருள்கள் ஆகிய இவற் றைக் கொள்வதற்காகவே அனுப்பப்பட்டது. ஆனுல் பல நடுநிலைத் தேசங்கள் இப்பொருள்களைச் செய்தனுப்பமுடி யாமற்போனதால் எல்லாப் பொருள்களின் விலையும் உயர ஆரம்பித்தன; ஏழைக்குடிகள் பெரிதும் துன்புற்றனர்; ஆதலாற்றான் ஸ்வீடன் முதலிய தேசங்கள் தங்க இறக்குமதி

யைத் தடுத்தன. ஸ்வீடனில் 1916-ல் தங்கநாணயங்களைப் பதிக்கவொண்ணுதெனச் சட்டமும் இயற்றப்பட்டது.* நாணயஞ்செய்வதற்கும் நோட்டு வெளியீட்டுக்கு இருப்பாக வைப்பதற்கும் தங்கம் விலக்கப்பட்டபடியால் ஸ்வீடன், நார்வே, டென்மார்க்கு, ஸ்பெயின், ஸ்விட்ஜர்லாந்து ஆகிய இந்நடுநிலைத்தேசங்களிலும் தங்கத்திட்டம் நீங்கியது.

தாள்நாணயப் பெருக்கம்.

4. யுத்தத்திற் கலந்த தேசங்களும் நடுநிலைத் தேசங்களும் தங்கநாணயச் செலாவணியை ஒழித்துத் தாள் நாணயச் செலாவணியை நிறுவின. இதனுற் கேடு ஒன்றும் இல்லை. தாள்நாணயத்தைவெளியிடுவதால் அரசாங்கத்தாருக்கு இலாபம்; அதை வழங்குவது குடிகளுக்குச்

---

* தேசநாணயம் மாருத விலைமதிப்பை (fixed purchasing power) உடையதாயிருத்தல் அவசியமாதலால் அதன் செலாவணி வரம்புக்குட்பட்டிருத்தல்வேண்டும். ஆனுல் நாணயஞ்செய்யுமுரிமை முன்போல எல்லாக்குடிகளுக்கும் வழங்கப்பட்டால் (open mint) மிகுதியான தங்கம் இறக்குமதியாகும்பொழுது அவர்கள் மிகுதியான நாணயங்களைச் செய்வார்களாதலால் தங்கஇறக்குமதி தடுக்கப்பட்டு நாணயஞ்செய்யுமுரிமை நீக்கப்பட்டதென்க. (1893 ல் வெள்ளிவிலை வீழ்ந்ததால் இந்தியஅரசாங்கத்தார் நாணயசாலைகளை மூடின காரணமும் இதுவே.) இதனுல் ஸ்வீடனில் தாள்நாணயமே வழங்கப்பட்டது; மேலும் இத்தாள்நாணயம் தங்கநாணயத்தைவிட, ஸ்திரமான விலைமதிப்பையும் உயர்ந்த மாற்று மதிப்பையும் (exchange) உடையதாக விளங்கிற்று. "The exclusion of gold implies, in principle, the transition to a free standard which will be regulated irrespective of any metal" (Cassel, *Money and Foreign Exchange After 1914*, P. 84).

சௌகர்யம். ஆனால் தங்கத்திட்டம் நிலைபெற்றிருந்தால் தலைமைப்பாங்கியிலுள்ள தங்கத்தின் மொத்த அளவுக்குத் தக்கவாறு தாள்நாணய வெளியீடு வரம்புக்குட்பட்டிருக்கும். ஆனால் நடுக்கடலில் திசையறிகருவியை யிழந்த மாலுமியைப்போலத் தங்கத்திட்டத்தைநீக்கிய இத்தேசங்கள் தாள்நாணயமாகிய கப்பலைச் சேதமின்றி நடத்தத் தெரியாது திகைத்துநின்றன. எப்படியெனில் போர்ச் செலவுக்காக மிகுதியான பணம் அரசாங்கத்தாருக்குத் தேவையாயிருந்ததனால் அவர்கள் விருப்பப்படியெல்லாம் தலைமைப்பாங்கிகள் தாள்நாணயங்களைவெளியிட்டுவழங்கின. உதாரணமாக இங்கிலாந்துபாங்கி ஈடில்லாது வெளியிடக் கூடிய தாள்நாணயத்தின் அளவை (fiduciary issue) உயர்த்திற்று. யுத்தத்திற்குமுன் பிரான்சுதேசத்துத் தலைமைப் பாங்கியின் மொத்தத் தாள்நாணய வெளியீடு (maximum issue) 6.8 கோடி பிராங்குகள்க வரையறுக்கப்பட்டிருந்தது; ஆனால் யுத்தம்ஆரம்பித்தபின் அப்பாங்கி அதை 12 கோடிக்கு உயர்த்திற்று. மேலும் ஒவ்வொரு தேசத்திலும் அரசாங்கத்தார் தமது சொந்தத் தாள்நாணயங்களையும் (Government Currency Notes or Treasury Notes) வேண்டுமளவுக்கெல்லாம் வெளியிட்டுக்கொள்ளவும் சட்டம் இயற்றினர். ஆங்கில அரசாங்கத்தாரால் இவ்வாறு வெளியிடப்பட்ட நோட்டுக்கள் ப. 3.244 கோடி.* இங்ஙனமாக ஒவ்வொரு தேசத்திலும் அரசாங்கத்தார் மிதமிஞ்சிய அளவில் தாள்நாணயங்களைப் பெருக்கினதனால் (inflation

* ஜெர்மனியில் இரும்பு, நிக்கல், அலுமினியம் முதலிய உலோகங்களாற் செய்யப்பட்டநாணயங்களும் வெளியிடப்பட்டன.

of paper currency) எல்லாப் பொருள்களின் விலைகளும் உயர்ந்தன.

பாங்கிக் கடன்கள்.

5. தாள் நாணயங்களைப் பெருக்கியதுமன்றி ஒவ்வொரு தேச அரசாங்கத்தாரும் தத்தம் கடன்பத்திரங்களின் (government securities) ஆதாரத்தின்மேல் பாங்கிகளிலிருந்து மிகுதியான அளவில் கடன்களையும் பற்றுகப் பெற்றனர். இக்கடன்களை வழங்கிய பாங்கிகள் அவற்றை அரசாங்கத்தாருக்கு நாணயங்களாகச் செலுத்தவில்லை. பாங்கிகள் செய்ததெல்லாம் தம் கணக்கில் அரசாங்கத்தார் கடன்பத்திரங்களை வரவாக எழுதிக்கொண்டு அவற்றுற் குறிக்கப்பட்ட தொகைக்குரிய பணத்திற்கு அரசாங்கத்தார் செக்குகளை (cheques) அனுப்புவதற்கு அநுமதியளித்ததேயாம். எனவே இவற்றைப் பாங்கிக் கடன்கள் (bank credits) என்பர். இப்பாங்கிக் கடன்களாலும் பல கேடுகள் விளைந்தன. தாள்நாணயப்பெருக்கால் விலைநிலை உயர்ந்தவாறே பாங்கிக்கடன்பெருக்காலும் விலைநிலை உயர்ந்தது; மேலும் பாங்கிகள் தம் கணக்கில் வரவுக் கலத்திலுள்ள தொகை எவ்வளவோ அவ்வளவுக்கு ஒன்பது மடங்காகப் பிறருக்குக் கடன் கொடுத்து வழங்கினமையாலும் விலைநிலை மேலும் மேலும் உயர்ந்தது.

---

*அரசாங்கக் கடன்பத்திரங்களைத் தங்கநாணயங்களுக்குச் சமமாகக்கருதி அவற்றை எவரும் வாங்கவும் விற்கவுஞ் செய்வாராதலின் அவற்றின் ஆதாரத்தின்மேல் பாங்கிகள் கடன்கொடுத்து வழங்கும். பாங்கிக்கடன்களைத்தவிரக் குடிகளிடத்தில் நாணயமாகவும் தங்கமாகவும்அரசாங்கத்தார் வேறுகடன்களும் வாங்கினார்கள். இக்கடன்களால் நாம் மேற்காட்டிய தீங்குகள் விளைந்தில.

யுத்தத்திற்குப்பின்னேழுந்த கேடுகள்.

6. யுத்தகாலத்தில் நாணயத்திட்டங்களில் எழுந்த குழப்பங்களைவிட யுத்தம் ஓய்ந்து சமாதானம் ஏற்பட்ட பின்னெழுந்த குழப்பங்களே மிகப்பல. அவை இரண்டு காரணங்களால் விளைந்தன; ஒன்று ஜெர்மனியின்மேற் சுமத்தப்பட்ட நஷ்டஈட்டுக்கடன் (reparation payment); மற்றொன்று நேசதேசங்கள் ஒன்றற்கொன்று கொடுத்துதவிய யுத்தக் கடன்கள் (war debts). நஷ்டஈட்டுக்காக ஜெர்மனி நேசதேசங்களுக்குப் பதின்மூன்றுயிரங் கோடி மார்க்குக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. (1924-ல் இத்தொகை ஒருசிறிது குறைக்கப்பட்டது.*) நேசதேசங்கள் ஒன்றற்கொன்று கொடுக்கவேண்டிய கடன்களும் பெருந்தொகைகளாக விளங்கின.

7. சிலவருடங்களாக ஜெர்மனி நஷ்டஈட்டுக்குச் செலுத்திவந்த தொகையும் நேசதேசங்கள் ஒன்றற்கொன்று யுத்தக்கடன்களாகச் செலுத்திவந்த தொகையும் பெரும்பாலும் தங்கமாகச் செலுத்தப்பட்டமையால் ஒவ்வொரு

---

* இத்தொகையை அமெரிக்காதேசத்து மந்திரியாகிய டாஸ் (Dawes) என்பவர் தீர்மானித்ததால் இதற்கு 'டாஸ் திட்டம்' (The Dawes Plan) எனப் பெயர் வந்தது. இத்திட்டத்தின்படி ஜெர்மனி கொடுக்கவேண்டிய தொகை 1924-ல் 100 கோடி மார்க்காக ஆரம்பித்து 1928-ல் 250 கோடி மார்க்காக உயரவேண்டும் எனவும் பின்னர் வருடந்தோறும் 250 கோடி மார்க்குகளாக நஷ்டத்தொகை தீரும்வரை (வருடமுடிவு குறிப்பிடவில்லை) கொடுத்துவரவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தேசத்திலும் உள்ள தலைமைப்பாங்கியின் தங்கஇருப்புத் தொகையிற் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. தங்க மெல்லாம் முதலுடைய தேசங்களுக்குச் சென்றது கடன் பட்ட தேசங்களில் தங்கஇருப்புக் குறைந்தது. இவ்வுண்மை கீழ்க்காட்டிய அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளது.

தங்க இருப்பு (Gold Reserves) கோடி டாலர்கள்.

	1913	1918	1924	1928	1932
அமெரிக்கா	129	265	409	374	404
இங்கிலாந்து	16	52	74	74	58
பிரான்சு	67	66	71	125	325
ஸ்விட்ஜர்லாந்து	3	8	9	10	47
ஜெர்மனி	27	53	18	65	19
ருஷியா	78	—	7	9	16
ஜப்பான்	6	22	58	54	21

8. பெருவெள்ளத்தால் மேடு பள்ளமாகவும் பள்ளம் மேடாகவும் மாறுவதுபோல யுத்தக்கடன்களையும் நஷ்ட ஈட்டையும் திருப்பிச்செலுத்தினதினால் ஜெர்மனி, ருஷியா முதலிய தேசங்கள் தத்தம் தேசத் தலைமைப்பாங்கியிலுள்ள தங்கத்தை இழக்கவும், யுத்தத்திற்குமுன் கடன்பட்டவை களாக விளங்கிய அமெரிக்கா, பிரான்சு, ஜப்பான் முதலிய தேசங்களிலுள்ள தலைமைப்பாங்கிகள் மிகுதியான தங்கத் தைப் பெறவும் நேர்ந்தது. எல்லாத் தேசங்களையும்விட அமெரிக்காவிலும் (U. S. A.) பிரான்சிலும்மே மிகுதியான தங்கம் போய்ச்சேர்ந்தது. இந்நிலையில் கடன்பட்ட தேசங் கள் தங்கத்திட்டத்தை எவ்வாறு கையாளக்கூடும்?

9. தம்மிடம் வந்த தங்கத்தை நாணயங்களாகச்செய்து —அன்றி அதை நோட்டு வெளியீட்டுக்கு ஆதாரமாக வைத்து—நாணயச் செலாவணியைப் பெருக்கினால் அமெரிக்காவிலும் பிரான்சிலும் விலைநிலை உயர்ந்து ஏற்றுமதி குன்றித் தங்கம் வெளிப்போக ஆரம்பிக்கும். ஆனால் அமெரிக்காவும் பிரான்சும் தம்மிடத்துவந்த தங்கத்தைத் தலைமைப்பாங்கியிற் புதைத்துவைத்தன.* இந்நிலையில் தங்கத் திட்டம் எவ்வாறு இயங்கக்கூடும்?

தங்கத்திட்டம் நீங்கியதால் விளைந்த கேடுகள்

10. யுத்தத்திற் கலந்திருந்த தேசங்கள் தங்க ஏற்றுமதிக்குத் தடையிட்டமையாலும், நடுநின்ற தேசங்கள் தங்க இறக்குமதிக்குத் தடையிட்டமையாலும், யுத்தத்திற்குப்பின் கடன்பட்ட தேசங்கள் தங்கத்தை இழந்தமையாலும், தங்கத்தை மிகுதியாகப் பெற்ற தேசங்கள் அதை நாணயச்செலாவணிக்கு ஆதாரமாக வைக்க மறுத்தமையாலும், உலகமெங்கணும் தங்கத்திட்டம் நீங்கியது.

11. யுத்தத்திற்குமுன் பொருள்மாற்று நடப்பதற்கு ஸ்டேர்லிங் உண்டியல்களை எல்லாத்தேசத்தினரும் நாணயங்களாக வழங்கினராகையால் தங்கம் மிகக்குறைந்த அளவி

*அமெரிக்காவில் யுத்தத்திற்குமுன் நோட்டு வெளியீட்டுக்கு இருப்பாக வைக்கப்பட்டிருந்த தங்கம் நூற்றுக்கு 40 விகிதந்தான். ஆனால் தங்கம் உட்புகுந்தபின் இருப்புத்தொகை நூற்றுக்கு 60 விகிதமாக உயர்த்தப்பட்டது.

லேயே தேவையாயிருந்தது. ஆனால் யுத்தம் ஆரம்பித்தபின் எல்லாரும் தங்கத்தையே அயல்நாட்டு வர்த்தகக் கொடுக்கல் வாங்கலுக்கு உபயோகிக்க விரும்பினராகையால் தங்கத்தின் விலை உயர்ந்தது. யுத்தத்திற்குமுன் ஒரு அவுன்ஸ் 22 மாற்றுத் தங்கத்தின்விலை, ஸ்டெர்லிங் கணக்குப்படி, 3ப. 17ஷி. $10\frac{1}{2}$ பெ; ஆனால் 1920 பெப்ருவரியில் அது 6ப.7ஷி.4பெ. ஆக — ஏறக்குறைய இருமடங்காக — உயர்ந்தது. தேச நாணயங்களுக்கும் தங்கத்துக்கும் இடப்பட்டிருந்த மாறாத விலைமதிப்பு நீங்கிற்று. (Currencies were detached or delinked from gold).

12. மேலும், ஒவ்வொரு தேசத்திலும் உள்நாட்டுச் செலாவணிக்காக அரசாங்கத்தாரின் தேவைக்குத் தக்கவாறு தாள்நாணயங்கள் வெளியிடப்பட்டன. இக்காரணத்தாலும் நாணயமாற்றுவிகிதம் எப்பொழுதும் மாறிக்கொண்டே வந்தது.*

---

*உதாரணமாக, ஆங்கிலேயரின் பவுண்டு ஸ்டெர்லிங் 1915 செப்டம்பரில் நூற்றுக்கு 6·5 விகிதம் மதிப்பிழந்தது. அதாவது யுத்தத்திற்குமுன் 100 பவுண்டு தங்க நாணயங்களுக்குக் கொள்ளக்கூடிய ஒரு பொருளுக்கு 1915-ல் 106·5 ஸ்டெர்லிங் (தாள்) நாணயங்கள் கொடுக்கவேண்டியதாயிற்று. யுத்தத்திற்குமுன் ஒரு சாவரன் தங்கநாணயம் 4·866 தங்க டாலருக்குச் சமமான விலை மதிப்புடையதாக இருந்தது. (மாற்றுவிகிதம் 1 : 4·866). ஆனால் 1915 செப்டம்பரில் அது 1 : 4·765 ஆகவும், 1919-ல் 1 : 3765 ஆகவும், 1920 பெப்ருவரியில் 1:320 ஆகவும் குறைந்தது. டாலர் ஒன்றுமட்டுமே ஸ்திரமான மதிப்புடையதாக விளங்கிற்று.

13. நாணயமாற்றிலும் பொருள்களின் விலைநிலையிலும் ஏற்பட்ட வேறுபாடுகளினால் வெளிநாட்டு வர்த்தகம் பெரிதும் இடர்ப்பட்டது. கைத்தொழிலில் மேம்பாடடைந்திருந்த பலதேசங்களின் செல்வநிலை குன்றியது. ஆங்காங்கே வேலையில்லாமை முதலிய சங்கடங்களும் விளைந்தன.

வெள்ளிவிலை இக்காலத்தில் உயர்ந்ததினால் இந்திய நாணயமாகிய ரூபாயின்மாற்றுவிகிதமோ உயர்ந்தது. 1914-ல் ரூபாய்க்குப் பதினாறு பென்ஸாக இருந்த மாற்றுவிகிதம் 1918-ல் 18 பெ. ஆகவும், 1919-ல் 28 பெ. ஆகவும் உயர்ந்தது.

11

தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவுதல்.

(The Restoration of the Gold Standard)

தீவாய்ப்பட்டழிந்த தம் வீடுகளைத் திருப்பிக் கட்டுவதற்கு மக்கள் எவ்வாறு தீவிரமாக முயல்வரோ அவ்வாறே யுத்தத்தாற் சிதைத்தழிந்த தம் பொருளாதார நிலையைச் சீர்திருத்துவதற்கு ஒவ்வொரு தேச அரசாங்கத்தாரும் தீவிரமாக முயன்றனர். அம்முயற்சிகளுள் நாணயத்திட்டங்களைப் புதுப்பித்தமை நாம் இங்கு ஆராயக்கிடந்தது.

இங்கிலாந்தின் புதிய தங்கத்திட்டம்.

2. முதலில் இங்கிலாந்தில் அமைக்கப்பட்ட நாணயத்திட்டத்தைப்பற்றிச் சிறிது கூறுவேம். 1918-ல் ஆங்கில அரசாங்கத்தார் நாணயத்திலும் அரசிறையிலும் (Puplic finance) யுத்தத்தால் விளைந்த கேடுகளை ஆராய்ந்து, அவற்றை நீக்கும் வழிகளைக்கண்டு கூறுமாறு கன்லிவ் பிரபுவை (Lord Cunliffe) தலைவராகவுடைய ஒரு விசாரணைச் சபையை அமைத்தனர். இச்சபையார் இரண்டு வருட ஆராய்ச்சிக்குப்பின் யுத்தத்திற்குமுன் வழங்கிய தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவினாலன்றி இங்கிலாந்தின் குறைபாடுகள் நீங்கா எனத் தம் முடிபை வெளியிட்டனர்.

3. கன்லிவ் சபையாரின் ஆலோசனையை அங்கீகரித்து 1925-ல் ஆங்கில அரசாங்கத்தார் தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவினர். ஆனால் புதிதாக நிறுவப்பட்ட இத்தங்கத் திட்டத்திற்கும் யுத்தத்திற்குமுன் வழங்கப்பட்ட தங்கத் திட்டத்துக்கும் சில வேறுபாடுகள் காணப்பட்டன. இப் புதிய தங்கத்திட்டத்தில் தங்க நாணயங்களைக் குடிகள் வழங்கக்கூடாதென்றும், உள்நாட்டுச் செலாவணிக்காகத் தாள் நாணயங்களுக்கு மாற்ருகத் தங்க நாணயங்களை இங்கிலாந்து பாங்கி வழங்காதென்றும், வெளிநாட்டுக் கடன்களைத்தீர்க்க ஒரேதடவையில் 400 அவுன்ஸ் தங்கத்துக்குக் குறையாமல் தங்கம் வேண்டுவோர்க்குமட்டுமே அப்பாங்கி தாள் நாணயங்களுக்கு மாற்ருகப் பழைய விலைப்படி (ஒரு அவுன்ஸ் நிறை 22 மாற்றுத் தங்கம்= 3 பவுண்டு 17 ஷிலிங் 10½ பென்ஸ்) தங்கத்தை வழங்கும் என்றும் சட்டம் (The Gold Standard Act. 1925) இயற்றப்பட்டது. நாணயஞ் செய்வதற்கு வேண்டும் அளவில் தங்கம் தேசத்தில் இல்லாமையால் தங்கநாணயச் செலாவணி நீக்கப்பட்டது; ஆயினும் குறிப்பிட்ட விலையில் (ஒரு அவுன்ஸ் 3 ப. 17 ஷி. 10½ பெ.) இங்கிலாந்து பாங்கி தங்கத்தைத் தடையின்றி வாங்கியும் (400 அவுன்ஸ் நிறைக்குக் குறையாமல் வெளிநாட்டுக் கடன்களை தீர்க்கக் கேட்பாருக்கு) விற்றும் வரச் சட்டமியற்பட்டமையால் இங்கிலாந்தில் தங்கத்திட்டமே நிறுவப்பட்டது எனக் கொள்ளவேண்டும்.*

---

*தங்கத்திட்டத்தின் சிறப்பிலக்கணம் இங்குக் கடைசியாகக் குறிப்பிட்ட அம்சமே என இந்நூலிற் பலவிடங்களிலும் வலியுறுத்தப்பட்டுளது. ஆதலால் யுத்தத்திற்குமுன் வழங்கியதைத் தங்க

தங்கத்திட்டத்தை நிறுவியதால் விளைந்த கேடுகள்.

4. ஆங்கில அரசாங்கத்தார் தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவிய செயல் பாராட்டற்குரியதே. ஆயினும் அவர்கள் தங்கள் பவுண்டுநாணயத்துக்கும் தங்கத்துக்கும் யுத்தத்திற்கு முன்னிருந்த விலையை அறுதியிட்டதுதான் அவர்களுக்கும் பிறநாட்டார்களுக்கும் கேடாக முடிந்தது. அதன் காரணங்களைக் கீழே காட்டுவோம்.

5. யுத்தகாலத்தில் தாள் நாணயங்களும் பாங்கிக் கடன்களும் அளவுக்கு மிஞ்சிப் பெருக்கப்பட்டமையால் பவுண்டு தனது மதிப்பை யிழந்தது. இவ்வாறு மதிப்பிழந்துநின்ற பவுண்டு நாணயத்தைப் பழைய உயர்ந்த மதிப்புப்படி நிறுவவேண்டுமானால் நாணயச் செலாவணியின் அளவைக் குறைக்கவேண்டும். இதற்காகவே ஆங்கில அரசாங்கத்தார் தாம் முன் வெளியிட்டிருந்த தமது அரசாங்கத் தாள்நாணயங்களையும் (Treasury Notes) கடன்பத்திரங்களையும் (Treasury Bills) சிறிது சிறிதாகச் செலாவணியினின்றும் நீக்கினர். இங்கிலாந்து பாங்கியினின்றும் மிகுதியான தங்கத்தை வாங்கி, அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாதபடி பாங்கி வட்டியும் உயர்த்தப்பட்டது. இங்ஙனமாக நாணயச்செலாவணியும் பாங்கிக்கடன்களும் குறைக்

நாணயத்திட்டம் (Gold Coin Standard) எனவும், 1925-ல் நிறுவியதைத் தங்கத்திட்டம் (Gold Bullion Standard) எனவும் சிலர் வேறுபடுத்திக்கூறுதல் இழுக்கு என ஆசிரியர் கேசல் மிக நுட்பமாகவும் அழகாகவும் எடுத்துக்காட்டிய உண்மையை நாம் முன்னரே குறிப்பித்துள்ளோம் (பக்கம் 36)

கப்பட்டமையால் தேசமெங்கும் பணமுடை எழுந்து, பொருள் விலைநிலை (price level) குறைந்து, தொழின் முயற்சிகள் இடர்ப்பட்டு, ஏற்றுமதி குன்றிக் கூலியாள்களுக்கு வேலையில்லாமை (unemployment) முதலிய பல கேடுகள் எழுந்தன. பணமுடை காரணமாகப் பொருள் விலைநிலை குறைந்ததனால் பொருள்களை உற்பத்திசெய்வாரின் வருவாயும் குறைந்தது; அதனால் அரசாங்கத்தார் பெறும் இறைப்பணமும் குறைந்தது. இங்ஙனமாகத் தேசப்பொருளாதாரநிலை பலவழியிலும் தாழ்வெய்தியது.*

6. மேலும், இங்கிலாந்து பாங்கியின் வட்டி விகிதம் உயர்த்தப்பட்டிருந்ததனால் அவ்வுயர்ந்த வட்டியைப் பெறுவதற்காகப் பிறநாடுகளிலுள்ள தங்கம் இட்டுவைப்புக்காக (deposit) இங்கிலாந்து பாங்கிக்கு அனுப்பப்பட்டது. இவ்வாற்றால் அநேக நாடுகள் தம்பாலுள்ள தங்கத்தையிழந்து, தங்கத்திட்டத்தைக் காக்கமுடியாது தடுமாறின. இங்கிலாந்தினுட்சென்ற தங்கம் யுத்தக்கடன்களுக்காக அமெரிக்

* இக்கருத்துக்களை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டிய சர் சார்லஸ் மார்கன்-வெப் என்பவரின் மொழிகளைக் கீழே தருகிறோம். 'This outstanding instance of cold-blooded currency manipulation...performed in the name of the gold standard...produced industrial disasters...Returning prosperity was transformed into deep industrial depression... Real incomes were reduced all round by 10%...Expanding exports were handicapped by an increase of 10% in their export price. The burden of the National Debt was increased by £700 millions' (*The Rise and Fall of the Gold Standard, pp.* 92—3.).

காவுக்குச் செலுத்தப்பட்டதால் இங்கிலாந்து பாங்கியின் வட்டி விகிதத்தை உயர்த்தியது பிறநாடுகளிலுள்ள தங்கத்தையெல்லாம் அமெரிக்காவுள் உய்க்கும் உபாயமாக மாறிற்று §

7. தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவினால் மாற்று விகிதங்கள் நிலைபெற்றிருக்கும்; அதனால் வர்த்தகப்பொருள்களின் விலை ஒருநிலை எய்தும்; உலகவர்த்தகம் ஓங்கும்; என எண்ணி, ஆங்கிலேயர் தங்கத்திட்டத்தைத் தம் நாட்டில் நிறுவ, அது அவர்களுக்கும் உலகத்துக்கும் பெருங்கேடு விளைவிப்பதாக முடிந்தது.

அமெரிக்காவும் தங்கத்திட்டமும்

8. தன்னிடத்து வரும் தங்கத்தை நாணயங்களாகப் பதிப்பித்தும், தாள்நாணய வெளியீட்டுக்கு இருப்பாகவைத்தும், நாணயச்செலாவணியைப் பெருக்கினால் அமெரிக்காவில் பொருள் விலைநிலை உயரும்; அப்பொருள்களைப் பிற நாட்டார் வாங்கார்; ஏற்றுமதி குறையும்; தங்கம் வெளிப்போகத் தொடங்கும் ; இவ்வாற்றால் தங்கத்தையிழந்த தேசங்கள் அதை மீண்டும் அடைய இயலும். அன்றி, அமெரிக்கா அத்தங்கத்தைத் தானே பிறநாடுகளுக்கு நேராகக் கடனாக வழங்கலாம்.

---

§ 'Britain was placing the whole of the magnificent organisation of her international currency and of the London Money Market at the disposal of the United States, in order to collect all the available gold in the world and ship it to the United States' (*Ibid*).

9. அவ்வாறு செய்திருந்தால் யுத்தத்திற்கு முன்னிருந்தவாறு தங்கத்திட்டம் இனிது இயங்கியிருக்கும். ஆனால் அமெரிக்கா அவ்வாறு செய்யாது, தன்னிடத்து வந்த தங்கத்தையெல்லாம் தலைமைப் பாங்கியில் புதைத்துவைத்து, தங்கத்திட்டத்துக்கு விலங்கிட்டு, அதை இயங்காதபடி செய்தது.* இது நிற்க.

பிரான்சு தேசத்தின் தங்கத்திட்டம்.

10. 1928-ம் ஆண்டில் பிரஞ்சுக்காரரும் தங்கத்திட்டத்தைத் தம் தேசத்தில் நிறுவினர். ஆனால் அவர்கள் ஆங்கிலேயரைப்போலத் தமது நாணயத்துக்கும் தங்கத்துக்கும் யுத்தத்திற்குமுன்னிருந்த பழைய விலையை அறுதியிடாமல் அந்நாணயத்துக்கு 1928-ம் ஆண்டில் இருந்த புதிய விலையையே அறுதியிட்டனர். அதாவது யுத்தத்திற்குமுன் ஒரு பிராங்கு நாணயம் ஆங்கில நாணயத்துடன் ஒப்பிடுங்கால் சுமார் 10 பென்ஸ் மதிப்புடையதாக விளங்

---

* இக்காரணத்தால் 1925-ல் இங்கிலாந்தில் நிறுவப்பட்டதைத் தங்கத்திட்டம் என்னாது டாலர் நாணயத்திட்டம் எனக் கூற வேண்டும் என்பர் பொருளாதார நிபுணர். 'The Federal Reserve Board, as far back as 1923, openly proclaimed its deliberate abandonment of the automatic pre-war gold standard, with its regulation of the volume of credit by gold; and the substitution of a system of credit control designed primarily to promote the 'national' industrial and commercial development of the United States'. *Evidence of the Federation of British Industries to the Macmillan Commission.*

கிற்று (25.225 பிராங்குகள் = 1 பவுண்டு); ஆனால் யுத்தத் திற்குப்பின் அந்நாணயம் ஐந்துமடங்கு மதிப்பிழந்து சுமார் 2 பென்ஸுக்குச் சமமாகவே மாற்றப்பட்டது. ஆதலால் பிரஞ்சுக்காரர் தங்கத்திட்டத்தைத் தம் தேசத்தில் மீண்டும் நிறுவியபொழுது தமது பிராங்கு நாணயத்திற்கு இப்புதிய மதிப்பாகிய குறைந்த மதிப்பையே lower (parity) இறுத்தனர். இவ்வாறு செய்ததனால் அவர்கள் ஆங்கிலேயரைப் போலத் தம் தேசத்தில் நாணயச் செலாவணியையும் பாங்கிக் கடன்களையும் குறைக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

11. ஆனால் பிரான்சு தங்கத்திட்டத்தை நிறுவியபின் அத்தேசத்திற்குள் வெளிநாடுகளிலுள்ள தங்கம் மிகுதியான அளவில் வரத்தொடங்கிற்று.* ஆயினும் தங்கம் மிகுந்த அளவுக்குத் தாள்நாணயம் மிகவில்லை. சிறிதளவு மிகுந்த

---

* இதற்கு இரண்டு காரணங்கள் காட்டப்படுகின்றன. (1) பிரான்சு தேசத்தின் தலைமைப்பாங்கி தன்னிடத்துள்ள வெளிநாட்டு உண்டியல்களை (foreign exchange or short-term assets) விற்று, அவற்றிற்குப் பதிலாகத் தங்கத்தை வாங்கி இருப்பு வைத்தது. 'The greater part of the gold inflow in 1929 represented realisation by the Bank of France of some of its foreign short term assets'. (2) மேலும், பிரான்சு தேசத்தின் வர்த்தக ஏற்றுமதி மிகுந்ததனாலும் வெளிநாட்டார் பிரான்சுக்குத் தங்கத்தை அனுப்பினர். 'In 1929 the balance of current international payments showed a heavy surplus due to France.' *Midland Bank, Monthly Review, March-April 1932.*

தாள்நாணயமும் வர்த்தகம், கைத்தொழில் முதலியவற்றை விருத்திசெய்யுந்துறையில் உபயோகிக்கப்படாமல், பாங்கிகளில் இட்டுவைப்பாகவும் வீடுகளிற் புதையலாகவும் (hoarding) சேமித்துவைக்கப்பட்டது. † இக்காரணத்தால் பொருள்விலைநிலை உயராதும், பிரான்சுக்குள் புகுந்த தங்கம் மற்றைத் தேசங்களுக்குச் செல்லாதும் ஒழிந்தன. தங்கத்தையிழந்த தேசங்களெல்லாம் இங்கிலாந்தைப்போலவே பல தொல்லைகளுக்குட்பட்டு உழன்றன.

அமெரிக்காவின் செல்வப்பெருக்கம்.

12. இங்ஙனமாகத் தங்கத்தையிழந்த எல்லாத் தேசங்களும் பணமுடை, வேலையில்லாமை, வறுமை முதலிய பல பீடைகளாற் பிணிக்கப்பட்டு உழன்றுகொண்டிருக்க, தங்கத்தை மிகுதியான அளவிற் பெற்ற பிரான்சில் பொதுவாகவும், அமெரிக்காவில் சிறப்பாகவும் பணப் பெருக்கமும் கைத்தொழில் வளர்ச்சியும் மேன்மேலும் ஓங்கின. யுத்தத்திற்குமுன் கடன்பட்ட தேசமாக இருந்த அமெரிக்கா யுத்தத்திற்குப்பின் முதலுடைய தேசங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்து விளங்கலாயிற்று. 1930-ம் ஆண்டில் அதன் தங்க இருப்பு இங்கிலாந்தின் தங்க இருப்பைக்காட்டிலும் ஆறுமடங்கு உயர்ந்தது. 1932-ல், அது எழுமடங்காயிற்று! (பிற்காட்டிய ஆண்டில் அமெரிக்காவின் இருப்பு

† 'The explanation probably lies partly in under-investment of savings, and partly—if not mainly—in a strong re-assertion of the pre-war habit of hoarding'. (Ibid).

404 கோடி டாலர்; இங்கிலாந்தின் இருப்பு 58 கோடி டாலர்).

13. *நிறைசெல்வத்தைக் கண்ட அமெரிக்கர் இறுமாந்து போயினர்.* கடன்கேட்ட தேசங்களுக்கெல்லாம் (விசேடமாக, ஜெர்மனிக்கும்) மிகுதியான கடன்களைத் தாராளமாக வழங்கினர்; தொழில்முதலாளிகள் தம் தொழிற்சாலைகளை விரித்தும் பெருக்கியும் பொருள் உற்பத்தியைப் பன்மடங்காக மிகுவித்து, மிக்க இலாபத்தையும் பெற்றனர்; 'வறுமையை அமெரிக்காவினின்றும் வெருட்டி விட்டோம்' என அந்நாட்டு மக்கள் கூத்தாடினர். ஆனால், பிரான்சும் அமெரிக்காவும் அன்றி மற்றெல்லா நாடுகளும் வறுமைக் கடலுள் ஆழ்ந்து பெரிதும் துன்புற்றன.

12

உலகப் பொருளாதாரக் குழப்பம்

(The World Economic Crisis)

தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவியதனால் அமெரிக்கா, பிரான்சு ஆகிய இவ்விருதேசங்களைத் தவிர மற்றெல்லாத் தேசங்களும் பலபல இடுக்கண்களுட்கிடந்து நெருக்கடிப்படும் தருணத்தில் உணவுப் பொருளுற்பத்தியும் பிற விளைபொருளுற்பத்தியும் உலகவர்த்தகத்தின் மொத்த அளவும் (volume of world trade) ஓங்கிக்கொண்டுவந்தன. 1913-ம் ஆண்டுடன் ஒப்பிட்டால் அவற்றின் வளர்ச்சி பின்வருமாறு உயர்ந்து காணப்பட்டது.*

பொருள் வளர்ச்சியின் உயர்வு.

1. மக்கட்பெருக்கு	100க்கு 5 விகிதம்	100க்கு 9 விகிதம்
2. உணவுப்பொருளுற்பத்தி	,, 10 ,,	,, 15 ,,
3. பிற விளைபொருளுற்பத்தி	,, 25 ,,	,, 45 ,,
4. உலக வர்த்தகத்தின் அளவு	,, 7 ,,	,, 26 ,,

World Economic Survey, League of Nations.

2. இவ்வளர்ச்சியைக் கண்ணுற்ற நிபுணர்கள் அனைவரும் உலகிற் புதுயுகம் தோன்றிவிட்டதென்று பெருமகிழ்வெய்தினர். ஆனால், திடீரென, ஒருவரும் எதிர்பாரா வண்ணம், ஓராண்டுக்குள் உலகமுழுவதும், இதுவரை நிகழ்ந்திராத பெரும் பொருளாதாரக் குழப்பத்துக்குள் ஆழ்ந்தது. அதற்கு மூன்று முக்கிய காரணங்கள் காட்டுவர். அவற்றுள் முதலாவதாக நிற்பதை (தங்கத்திட்டத்தில் ஏற்பட்ட குழப்பங்கள்) நாம் முந்தின கட்டுரையில் விளக்கினோம். எஞ்சிய இரண்டு காரணங்களும் கீழே தரப்படும்.

உலகப் பொருளாதாரநிலையிலேற்பட்ட புதிய மாறுதல்கள்.

3. யுத்தத்திற்குப்பின் ஒவ்வொரு தேசத்திலும் புதிய புதிய இயந்திரங்களைக் கண்டு அவற்றை நிறுவியும், தொழிலாளர்களின் திறமையை மிகுவித்தும், தொழில் முதலாளிகள் பொருள் உற்பத்தியைப் பெருக்கிவந்தனர்.* இப்பொருட்பெருக்கு, பெரும்பாலும் இயந்திரங்களை நிறுவியது காரணமாகப் பெறப்பட்டது. இதனால் கூலி வேலையாளரிற் பெரும்பாலோர் வேலையினின்றும் நீக்கப்பட்

* 'Between 1925 and 1929—industrial production rose to an extraordinary extent. In Poland the rise was 38%, in Canada 54%, in France 30%, in Sweden 27% and in Germany 22%...In Great Britain...the physical output per worker in industry rose by more than 11% between 1924 and 1929...A sample investigation of 35 factories (in America) which have continuous records of output from 1917 to 1927 showed an increased productivity per man-hour of 74 per cent over that period.' (Cole).

டனர். வேலையில்லாமையினால் இவர்கள் வருவாயிழந்தனர். தொழிற்சாலைகளினின்றும் உற்பத்தியாக்கப்படும் பொருள்களை எவ்வளவு குறைந்த விலைக்கு விற்பினும் பொதுமக்கள் வருவாயற்றிருப்பரேல் அவற்றை எப்படி வாங்கி உபயோகிப்பர்? வாங்குவாரின்றேல் பொருளுற்பத்தியைப் பெருக்குவதனால் யாது பயன்? இது நிற்க.

4. யுத்தத்திற்குமுன் சீனா, பெர்சியா, இந்தியா, ஜப்பான் முதலான கீழைத்தேசங்களும், அர்ஜென்டைன், பிரேசில் (Brazil), கானடா முதலான மேலைத்தேசங்களும் கைத்தொழில் வர்த்தகம் முதலான துறைகளில் பின்னடைந்த நிலையிலிருந்தன. ஆதலால் இவை பெரும்பாலும் உணவுப்பொருள்களையும் மூலப்பொருள்களையும் விளைவித்து, அவற்றைக் கைத்தொழிலில் முன்னேற்றமடைந்திருந்த மேற்கு ஐரோப்பிய தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்து, அவற்றிற்குப் பதிலாக அத்தேசங்களிலிருந்து இயந்திரங்களின் உதவியாற் செய்யப்படும் ஆடி, ஆடை முதலிய செய்பொருள்களைப் பெற்றுவந்தன. உலகப் பொருளாதார நிலை இவ்வாறிருந்த காலமெல்லாம் வர்த்தகமும் கொடுக்கல் வாங்கலும் தங்கத்திட்டமும் இடையூறின்றி இயங்கிவந்தன. ஆனால் யுத்தகாலத்திலும் அதற்குப்பின்னும் மேற்காட்டிய பின்னடைந்த தேசங்கள் காப்புவரிகளினாலும் (Protective tariffs) அரசாங்க உதவியினாலும் (State aid) தத்தம் இயந்திரக் கைத்தொழில்களை வளர்த்துத் தாம் முன் இறக்குமதி செய்துவந்த செய்பொருளகளிற் பலவற்றைத் தாமே செய்து, மேற்கு ஐரோப்பிய தேசங்களுடன் போட்டியிட்டன. இப்போட்டியை வெல்ல மேற்கு ஐரோப்பிய

தேசங்கள் மிகப் புதிய புதிய இயந்திரக்கருவிகளைச் செய்தும், வேலையாட்களின் திறமையை மிகுவித்தும், செய்பொருள்களின் செலவைக் (cost of production) குறைத்து அப்பொருள்களைத் தாம் முன் விற்றுவந்த (பின்னடைந்த) தேசங்களில் விற்க முயன்றன. இவ்வாறு செய்ததானது புதிதாக வளர்க்கப்பட்ட கைத்தொழில்களுக்குக் கேடு விளைவிப்பதாயிற்று. ஆதலால் இத்தேசங்கள் மேற்கு ஐரோப்பிய தேசங்களினின்றும் இறக்குமதியான பொருள்களுக்கு அதிகவரி விதித்து அவற்றைத் தடுத்தன. இக்காரணத்தால் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகமும் கொடுக்கல் வாங்கலும் பெரிதும் இடர்ப்பட்டன.

5. இஃது இவ்வாறாக, நாம் முன் கட்டுரையிற் காட்டியபடி, இங்கிலாந்து தனது நாணயமதிப்பை உயர்ந்தவிகிதத்தில் நிறுவியதன் பயனாகத் தங்கம் இங்கிலாந்திலிருந்தும் பிறநாடுகளிலிருந்தும் மிகுதியான அளவில் அமெரிக்காவுக்கும் பிரான்சுக்கும் அனுப்பப்பட்டமையாலும், அவ்வாறு அனுப்பப்பட்ட தங்கம் அவ்விரு தேசங்களிலும் புதைந்து போனமையாலும், தங்கத்தையிழந்த மற்றைத் தேசங்களெல்லாம் நாணயச் செலாவணி குறைந்ததனாலுண்டான கேடுகளுக்குள்ளாயின. இக்கேடுகளைப் போக்க, அவை ஒவ்வொன்றும் அதனதன் தங்க இருப்பைப் பாதுகாப்பதற்காக இறக்குமதிகளைத் தடுத்தல் (prohibitions), அவற்றின் அளவை வரையறுத்தல் (import quotas), தங்க ஏற்றுமதியைத் தடுத்தல் (exchange restrictions), வெளிநாட்டுக் கடன்களை நிறுத்தல் (moratoria, stand-still agreements),

முதலான முறைகளைக் கைக்கொண்டன. அந்தோ! இம் முறைகள் முதலில் மேற்கு ஐரோப்பியநாடுகளின் சங்கடத்தை மேலும் அதிகப்படுத்தின. ஆனால் இறுதியில் இவை பின்னடைந்ததேசங்களின் வர்த்தகத்துக்கும் கேடுண்டாக்கின. எப்படியெனில், தம் ஏற்றுமதி குன்றியதனாலும், வெளிநாட்டுக் கடன்கள் திருப்பிச்செலுத்தப் படாமையினாலும் மேற்கு ஐரோப்பியநாடுகள் பின்னடைந்த தேசங்களின் உணவுப்பொருள்களையும் மூலப் பொருள்களையும் வாங்க இயலாது அவற்றிற்கு உயர்ந்த இறக்குமதிவரிகளை விதித்தன. என்னே! பொருள்களை உற்பத்திசெய்ய மக்கள் படும் பாடுகள் எத்துணை!; ஆனால் அவற்றை வாங்கி உபயோகிக்க இயலாதபடி அரசாங்கத்தார் இடும் தடைகள் எத்தனை!

6. இங்ஙனமாக, யுத்தத்திற்குமுன் பின்னடைந்த நிலையிலிருந்த தேசங்கள் யுத்தத்திற்குப்பின் முன்னேற்ற மடைந்து விளங்கிய இப்பெரும் மாறுதலும், இம்மாறுதல் காரணமாக அவை முன்போல மேற்கு ஐரோப்பியநாடுகளின் செய்பொருள்களை வாங்க மறுத்து அவற்றிற்கு உயர்ந்த வரிகளை விதித்ததும், தம் ஏற்றுமதி குன்றியதால் மேற்கு ஐரோப்பியநாடுகள் இத்தேசங்களின் இறக்குமதிப் பொருள்களுக்கு உயர்ந்தவரிகளை விதித்ததும் ஆகிய செயல்களே உலகப் பொருளாதாரக்குழப்பத்துக்குரிய இரண்டாவது முக்கிய காரணமாகும்.

7. உலகத்திற் பெரும்பாலான தேசங்கள் நாம் முற் கூறியவாறு பற்பல இடர்ப்பாடுகளால் துன்புற்றுக்கொண்

டிருக்கையில், யானை வருமுன் அது வருவதன் அறிகுறியாக மணியோசை கேட்பதுபோல, வரப்போகும் பெரும் பொருளாதாரக்குழப்பத்துக்கு அறிகுறியாக மலைபோல் உயர்ந்திருந்த அமெரிக்காவின் பொருளெழுச்சி கடல் போல் இழிந்தது. 1929-ம் வரு அக்டோபர் மாதத்தில் அத்தேசத்தினுள் மிகப்பெரிய ஸ்தாபனமாகிய நியூயார்க் குப் பங்குமார்க்கெட் (Stock Exchange) நொடித்தது. இதனால் பொதுமக்களும் பாங்கர்களும் பெரும் பொருள் நஷ்டமடைந்தனர். இந்நஷ்டத்தைத் தீர்க்க அவர்கள் தாம் வெளிநாட்டுப்பாங்கிகளில் இட்டுவைத்திருந்த தமது பணத்தையும் அவற்றிற்கு வழங்கியிருந்த கடன்களையும் திருப்பிக்கொடுக்குமாறு கேட்டனர். கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமல் ஆஸ்திரியாவிலுள்ள ஒரு பெரிய பாங்கியும் (Credit Anstalt) ஜெர்மனியிலுள்ள பல பாங்கிகளும் நொடித்தன.

8. ஜெர்மனியிலுள்ள பாங்கிகளைக் காப்பாற்றுவதற் காக அவற்றிற்குக் கடன்களை வழங்க இங்கிலாந்து பாங்கி முற்பட்டது. ஆனால் இதற்கிடையில் இங்கிலாந்தை அச் சமயம் ஆட்சிசெய்த தொழிற்கட்சியார் (Labour Government) அரசாங்கச் செலவை மிகுதிப்படுத்தியிருந்தனராத லால் அத்தேசத்துக்குப் பெருங் கடன்சுமை வந்துவிடு மென்றும், இங்கிலாந்துபாங்கியின் தங்கஇருப்புக் குறைந்து விடுமென்றும், ஆதலால் அப்பாங்கியில் தங்கத்தை இட்டு வைத்திருப்பவர்கள் அதைத் திருப்பிப்பெற இயலாதென் றும், ஒரு புரட்சி உலாவிற்று. அச்சமயத்தில் இங்கிலாந்து பாங்கி வெளிநாட்டுப்பாங்கிகளில் கடன்கொள்ளத் தொடங்

கிற்று. இச்செயல் அப்பாங்கியின் தங்க இருப்புக் குறைந்து விட்டது என்னும் புறட்சியைக் கிளப்பினவர்களின் கூற்றை மெய்ப்பித்தாற்போலிருந்தது! உடனே இங்கிலாந்து பாங்கியில் தங்கத்தை இட்டுவைத்திருந்த எல்லாத் தேசத்தினரும் அதைத் திருப்பிப்பெற விரைந்தனர். 1931-ம் ஷூ ஜூலை, ஆகஸ்டு ஆகிய இரண்டு மாதங்களில் மட்டும் சுமார் 20 கோடி பவுண்டு தங்கம் இவ்வாறு திருப்பிப் பெறப்பட்டது. தனது தங்க இருப்புக்குறைந்ததனால் இங்கிலாந்துபாங்கி 130கோடிபவுண்டு தங்கத்தை பிரான்சிலும் அமெரிக்காவிலுமிருந்து கடனாகப்பெற்றது. அதன் பின்னரும் தங்கம் இங்கிலாந்துபாங்கியினின்றும் வெளிப்போந்துகொண்டேயிருந்தது. இதனால் அரசாங்கத்தார் தங்கத்திட்டத்தை நீக்கி இங்கிலாந்துபாங்கி தனது தாள் நாணயங்களுக்கு மாற்றாகத் தங்கத்தை அளிக்கவேண்டிய சட்டத்தை அகற்றினர். இங்கிலாந்து தங்கத்திட்டத்தை நீக்கியது. (செப்டம்பர் 21, 1931).

9. தங்கத்திட்டம் நீக்கப்பெறவும் உலகப்பொருளாதாரநிலை மிகப் பெருங்குழப்பத்தில் ஆழ்ந்தது. நாணய மாற்று விகிதங்கள் ஒரு நிலைபெறாது அடிக்கடி மாறிக் கொண்டுவந்தமையால் வெளிநாட்டுவர்த்தகம் பெரிதும் இடர்ப்பட்டது. மேலும், தங்கத்திட்டத்தைக் கைவிட்ட தேச நாணயங்களின் வெளிநாட்டுமதிப்புக் குறைந்து, அத்தேசங்களின் ஏற்றுமதிப்பொருள்களின்விலை இறங்கினதனால் அவற்றின் ஏற்றுமதி ஓங்கிற்று. இது தங்கத்திட்டத்தைக் கைக்கொண்டிருந்த தேசங்களுக்கு நஷ்டம் விளைவித்தது; ஆதலால் அவை தம் தேசத்துக்குள் இறக்குமதி

யாக்கப்படும் அவ் வெளிநாட்டுப் பொருள்களுக்கு மிக வுயர்ந்த வரிகளை விதித்தன. அல்லது இறக்குமதிகளை முழுதுந் தடுத்தன. உலகவர்த்தகம் இவ்வாறு இடருற்றதனால் நாணயத்திட்டத்தில் எழுந்த குழப்பங்களைப் போக்கித் தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவவேண்டி எல்லாத்தேசத்தோரும் 1933-ம் ஆண்டு ஜூன் மீ 21உ லண்டன் மாநகரில் ஒரு மகாநாடு கூட்டினார்கள். இவ்வுலகப் பொருளாதார மகாநாட்டிற்கு (World Economic Conference) 62தேசங்களிலிருந்து சுமார் 2000 நிபுணர்கள் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டிருந்தனர்.

10. தங்கத்திட்டத்தை நிறுவினால் பொருளாதாரக் குழப்பம் ஒழிந்துவிடும் என இம்மகாநாட்டைக்கூட்டுவித்த சர்வதேசசங்கத்துப் பொருளாதார இலாக்கா (Economic Section of the League of Nations) நிபுணர் எண்ணினர். ஆதலின் இக்கொள்கையை அடிப்படையாகக்கொண்டு அவர்கள் தயாரித்த நிகழ்ச்சிக் குறிப்பில் (1) ஒவ்வொரு தேசத்தின் வெளிநாட்டுக்கடன்களையும், சிறப்பாக, யுத்தக்கடன்களையும் குறைக்கவேண்டும்; (2) ஒருதேசத்திலிருந்து மற்றொருதேசத்துக்கு ஏற்றுமதியாக்கப்படும் தங்கத்துக்குத் தடையிடக்கூடாது; (3) ஒரு தலைமைப்பாங்கி நெருக்கடியான நிலையிலிருந்தால் அதனைப் பிற தலைமைப்பாங்கிகள் ஆதரிக்கவேண்டும்; (4) முதலுடைய தேசங்கள் தம்மிடத்துவந்த தங்கத்தைப் பிறநாடுகளுக்குக் கடனாகத்தடையின்றி வழங்கவேண்டும்; கடன்பெற்ற தேசங்கள் தங்கள் கடன்களுக்குப் பதிலாகப் பொருள்களைச் செலுத்தும்போது அவற்றை அங்கீகரிக்கவேண்டும்; (5) எல்லாத்

தேசங்களும் வர்த்தகத்துக்கு இட்டுள்ள தடைகளை ஒழிக்க வேண்டும்;—என்ற ஆலோசனைகள் கூறப்பட்டன. இவ்வாலோசனைகளைச் சொல்லிவிடுவது எளிது தான்! ஆனால் இவற்றை நடைமுறையிற் கொண்டுசெலுத்துவது தானே இயலாத காரியம். ஆதலால் இறுதியில் இம்மகாநாடு ஒருமுடிவுக்கும் வராது 1933ஆம் ஜூலை 27உ கலைந்தது*

---

* நிகழ்ச்சிக்குறிப்பிற்காட்டிய ஆலோசனைகள் ஒவ்வொன்றையும் மகாநாட்டிற் கூடியநிபுணர்கள் ஆராயத்தொடங்கினர். முதலாவது 'தங்கத்திட்டத்தை நிறுவுவதற்கு முன்நிபந்தனையாக யுத்தக் கடன்களைக் குறைக்கவேண்டும்' என இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய தேசங்கள் கோரின. இதை அமெரிக்கா ஒப்புக்கொள்ள மறுத்தது. இரண்டாவதாக, ஏற்றுமதி இறக்குமதி வரித்தடைகளை ஒழிக்கவேண்டுமென மேற்கு ஐரோப்பியநாடுகள் வேண்டின. ஆனால் காப்புவரிகளால் தம் தேசக் கைத்தொழில்களை வளர்த்து வந்த போலண்டு, ருமேனியா முதலான தேசங்கள் இதற்குச் சிறிதும் இணங்கவில்லை. அப்பால் பிரான்சு முதலான தங்கத்திட்டத் தேசங்கள் (gold standard countries) முதலில் நாணயமாற்றுவிகிதங்களை நிலைநிறுத்திக்கொண்டு (stabilising exchanges) அதன்பின்னர் வேறுகாரியங்களை ஆலோசிக்க வேண்டும் என்றன. இதற்கு இங்கிலாந்தும் அமெரிக்காவும் இணங்கவில்லை. இங்ஙனமாக, ஒவ்வொரு தேசமும் தன் தன் தேசீயப்பொருளாதார நன்மையை மட்டும் முதன்மையாகக் கருதி ஒன்றற்கொன்று முரண்பட்ட கோட்பாடுகளையே சாதித்ததால் இப்பொருளாதார மகாநாடு ஒரு முடிவுக்கும் வராது, கலைந்தது.

13

புதிய நாணயத்திட்டங்கள்

(The New Currency Systems)

உலகப் பொருளாதார மகாநாடு கலைந்தபின் ஆங்கிலேயரும் மற்றும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பிரதிநிதிகளும் ஒட்டாவா (Ottawa) நகரில் கூடித் தங்கத்திட்டத்தை நீக்கி ஸ்டெர்லிங்காகிய தாள்நாணயத் திட்டத்தையே கைக்கொள்ளுவோம் என்று ஓர் அறிக்கையை (Manifesto) விடுத்தனர். அதன்பின்னர் ஸ்வீடன், நார்வே, அர்ஜெண்டைன், சீனு முதலான நாடுகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நாணயத்திட்டமாகிய ஸ்டெர்லிங் திட்டத்தை ஒப்புக்கொண்டிருக்கின்றன. எனவே இப்பொழுது உலகத்திற் பெரும்பாலான நாடுகளில் வழங்கப்படும் நாணயம் ஆங்கிலேயரின் தாள்நாணயமாகிய ஸ்டெர்லிங்கேயாம். இந்நாடுகள் ஸ்டெர்லிங் திட்டத்தைக் கைக்கொண்டவை (Sterling Group, Sterlingaria) எனப்பொருள்படும் ஸ்டெர்லிங் மண்டலம் என்ற புதிய பதமும்கூட இப்பொழுது வழக்கிலேறியிருக்கிறது!

ஸ்டெர்லிங் திட்டம்.

2. இப்பொழுதுள்ள புதிய ஸ்டெர்லிங் திட்டத்துக்கும் யுத்தத்திற்குமுன்னிருந்த பழைய ஸ்டெர்லிங் திட்டத்

துக்கும் பெரிய வேறுபாடுண்டு. பழைய ஸ்டெர்லிங் திட்டத்தில் (கட்டுரைகள் 5, 9.) இங்கிலாந்துபாங்கியிலுள்ள தங்க இருப்பின் அளவைச் சார்ந்து தாள்நாணயம் வெளியிடப்பட்டது. ஆனால் இப்பொழுதுள்ள புதிய திட்டத்தில் ஸ்டெர்லிங் தாள் நாணயம், பொருளுற்பத்தி வர்த்தகம் முதலானவற்றின் ஏற்றத்தாழ்ச்சிக்கேற்றவாறு வெளியிடப்படுகிறது. ஆதலால் இங்கிலாந்தின் பொருள்விலைநிலை ஏறக்குறைய எப்பொழுதும் ஒருநிலையாய்நின்றுவருகிறது. மற்றைத் தேசங்களின் பொருள் விலைநிலையோ அடிக்கடி மாறுபட்டுவருகின்றது (இவ்வுண்மை கீழ்க்காட்டிய அட்டவணையால் அறியப்படும்.)

சில முக்கிய தேசங்களின் விலைநிலை

வருஷ		ம்	இங்கிலாந்து	அமெரிக்கா	பிரான்சு	ஜெர்மனி	தங்க விலை
1931	செப்	21	100	100	100	100	100
1932	ஜனு	27	108·3	93·5	93·6	91·6	140·9
1932	ஜூலை	26	108·1	100·9	89·7	86·6	145·7
1934	ஜனு	31	108·8	100·6	87·2	85·5	156·7
,,	செப்	26	108·7	116·1	81 4	92·5	166·2
,,	டிசம்	19	108·7	113·7	78.6	92·9	165·8
1935	ஜனு	2	109·4	115·1	77·1	92·8	165·8

* *The Economist Jan· 5, 1935.*

3. மேலும், ஆங்கிலேயர் தமது ஸ்டெர்லிங் நாணயத்தின் மாற்று மதிப்பையும் ஸ்திரமாக நிறுவிவருகின்றனர்! இதற்காக அவர்கள் அரசாங்கத்தார் இங்கிலாந்து பாங்

கிக்கு 150 கோடி பவுண்டு கடனுக வழங்கியுள்ளனர். இந்நிதியைக்கொண்டு ஸ்டெர்லிங்கின் மாற்றுமதிப்பு உயரும்போது அதைக் குறைத்தும், குறையும்போது அதை உயர்த்தியும் அது சமநிலையெய்தச் செய்கின்றனர்.*

4. இங்ஙனமாக, ஆங்கிலேயரும் வேறுபல நாட்டினரும் ஸ்டெர்லிங் தாள்நாணயத்தைக்கொண்டே தங்கத்திட்டத்தால் எய்தப்பெற்ற இரு பெரும் பயன்களையும் [ஸ்திரமான பொருள்விலைநிலை (stability of price level), ஸ்திரமான மாற்று விகிதங்கள் (stability of exchanges)] அடைந்துவருகின்றனர்! தங்கத்திட்டத்தைவிட ஸ்டெர்லிங் திட்டமே சிறப்புடையதாக விளங்கிவருகிறது!

லத்தீன் நாடுகளின் தங்கத்திட்டம்.

5. ஆனல் பிரான்சு, இத்தாலி, பெல்ஜியம், போலண்டு, ஸ்விட்ஜர்லாந்து முதலான லத்தீன் நாடுகள் யுத்தத்திற்குமுன்னிருந்த தங்கத்திட்டத்தை இன்னும் போற்றி வருகின்றன. எனினும் தங்கவிலை ஸ்திரமாக நிலைபெறுமையால் இந்நாடுகளின் உள்நாட்டுநாணயமதிப்பும் (பொருள் விலைநிலை) வெளிநாட்டு மாற்றுமதிப்பும் அடிக்கடி மாறுபட்டு, அதுகாரணமாகப் பொருளுற்பத்தி குறைதல்

---

*ஆதலால் இந்நிதி நாணயமாற்றுச் சமநிலை நிதி (Exchange Equilisation Account) என வழங்கப்படுகிறது. மற்றை நாணயங்களின் மதிப்பு மாறுபட்ட காலத்தும் ஸ்டெர்லிங் மதிப்பு சமநிலைநிற்றல் வியக்கத்தக்கதன்றே? இதன் உபாயம் 'நாணயமாற்று' என்ற நூலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

போன்ற பலகேடுகள் விளைகின்றன. இவ்வுண்மைகள் கீழ்வரும் அட்டவணையால் நன்கறியப்படும்.†

வருடம்	தங்க விலை	பொருள் விலைநிலை	பொருளுற்பத்தி	கூலியாட்களுக்குக் கிடைக்கும் வேலையின் அளவு (employment)	ஏற்றுமதி (மொத்த உலக வர்த்தகத்தில் இந்நான்கு தேசங்களின் பாகம்)
1931	100	100	100	100	2·79
1932	145	85·2	74·2	87	2·78
1933	150	79·4	88·9	88·1	2·69
1934	165	76·8	87	86·5	2·68

அமெரிக்காவின் நாணயத்திட்டம்.

6. 1933-௵ ஜூலை-மாதத்தில் அமெரிக்கா தங்கத் திட்டத்தை நீக்கி இங்கிலாந்து முதலான நாடுகளைப் போலவே தனிப்பட்ட தாள்நாணயத்திட்டமொன்றை ஏற்படுத்தியது. மேலும், பொருள்விலைநிலையை 1926-ம் ஆண்டில் இருந்தபடி உயர்த்தி, அதன்பின்னர் அது ஏற்றத் தாழ்வெய்தாதபடி ஸ்திரப்படுத்தவேண்டு மென்பதும் அமெரிக்காவின் நோக்கம். இந்நோக்கம் முற்றுப்பெற அந் நாட்டுத் தலைவரான ரூஸ்வெல்ட் என்பவர் மிகப் பல அரிய

†*The Road to Recovery* by Sir Henry Strakosch, Supplement to the *Economist*, Jan. 5, 1935.

முறைகளைக் கையாண்டுவருகிறார். பொருள் விலைநிலையும் உயர்ந்துவருகிறது, ஆனால் மற்றைத்தேச நாணயங்களின் மாற்று மதிப்பிலேற்படும் ஏற்றத்தாழ்வுகளால் டாலர் நாணயத்தின் மாற்றுமதிப்பு அடிக்கடி மாறுபடுகிறது. ஆதலால் அமெரிக்காவின் வெளிநாட்டு வர்த்தகம் பலவழிகளிலும் இடர்ப்படுகின்றது. ஜெர்மனி முதலான மற்றெல்லா நாடுகளின் நிலையும் இவ்வாறே இருந்துவருகிறது.

7. இங்ஙனமாக, ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறான நாணயத்திட்டங்கள் வழங்கப்பெற்றுவருகின்றமையால் அவ்வந்நாட்டுப் பொருள்விலை அடிக்கடி மாறுபட்டு அது காரணமாகப் பொருளுற்பத்திகுறைதல்போன்ற பல கேடுகள் விளைகின்றன. மேலும், நாணயமாற்றுவிகிதங்களும் ஸ்திரமாக நிலைபெறாமையால் வெளிநாட்டுவர்த்தகத்தின் அளவும் குறைந்துவருகின்றது. இவ்வாறான குறைகளைப் போக்க ஒவ்வொருநாட்டிலும் அவ்வந்நாட்டு அரசாங்கத்தார் பல முறைகளைக் கையாண்டுவருகின்றனர்.* ஆயினும், எல்லா நாட்டினருக்கும் பொதுவான ஒரு உலக நாணயத்திட்டம் இன்றேல், உலகவர்த்தகம் முன்னிருந்தவாறு ஓங்காதென்பது திண்ணம். இத்தகைய உலகநாணயத்திட்டம் எத்தன்மைத்து என்பதுபற்றி இனிவரும் கட்டுரையில் விளக்கிக்காட்டுவோம்.

---

* விரிவஞ்சி இவற்றை இங்கு விவரிக்காது விடுகிறோம். முழுவிவரங்களும் அறியவிரும்புவோர் London Royal Economic Society-யாரால் 'Current Economic Conditions in Europe' என்ற தலைப்புடன் மூன்று மாதத்திற்கொருமுறை வெளியிடப்பட்டுவரும் பிரசுரங்களைப் பார்க்க.

14

எதிர்கால உலகநாணயத்திட்டம்

(The Future of the International Monetary System)

இக்காலப் பாங்கர்களுள்ளும், பொருளாதார நிபுணர் களுள்ளும், அரசிறை அமைச்சர்களுள்ளும் ஒரு பகுதி யினர், 'புதியதோர் உலகநாணயத்திட்டத்தை நாம் தேடவேண்டாம்; பழைய உலகநாணயத்திட்டமாகிய தங்கத்திட்டத்தையே மீண்டும் நிறுவினாற் போதுமானது ; 'அதுவே எல்லாவற்றிலும் சிறந்தது' எனக் கூறுகின்றனர்.

தங்கத்திட்டத்தையே மீண்டும் நிறுவக்கூடுமோ?

2. நாம் முன் கட்டுரைகளில் எடுத்துக்காட்டியபடி, தங்கத்திட்டம் பல நயங்களையுடையதாகவிருப்பினும், தாள் நாணயவெளியீட்டுக்கு ஆதாரமாகவைக்கவேண்டுமளவுக்கு இப்பொழுது தங்கம் கிடைக்கப்பெறினும், * பொருளா

---

* இந்நூலில் 80-ம் பக்கத்தில் நாம் காட்டிய அடிக்குறிப்பு எழுதிய சமயத்தில் (1934-ம் ஆண்டு மேமீ) 1940-க்குப்பின் தங்கவுற் பத்தி குறைபடும் எனப் பல நிபுணர் கூறினர். ஆனல் அதன்பின் னர் இந்தியாவிலிருந்து மிகுதியான அளவில் ஏற்றுமதியான தங்கம் ஐரோப்பாவிலுள்ள தலைமைப் பாங்கிகளில் குவிந்துள்ளமையால்

தாரக் குழப்பத்தால் எழுந்த விலைத்தாழ்ச்சி, கடன்சுமை வர்த்தகத்தடைகளின் மிகுதி முதலான கேடுகள் எல்லாத் தேசங்களிலும் இன்னும் நீங்காமையால், தங்கத்திட்டத்தை மீண்டும் நிறுவுதல் கூடாதகாரியமாகும். பொருளாதாரக் குழப்பத்தால் எழுந்த கேடுகள் எல்லாம் நீங்கினபின்னும் அமெரிக்காவும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யநாடுகளும் ஒத்துழைத்தாலன்றித் தங்கத்திட்டத்தை நிறுவ இயலாது. இப்பொழுதுள்ள தனது ஸ்டெர்லிங் நாணயத்திட்டம் இனிது இயங்கி வரும்போது இதைத் தவிர்த்து, ஆறுண்டுகளாகத் (1925–1931) தனக்குப் பல இன்னல்களை விளைவித்துவந்த தங்கத் திட்டத்தை இங்கிலாந்து மீண்டும் நிறுவுமோ? இங்கிலாந்து அதனை நிறுவாவிட்டால் மற்றைத் தேயத்தினர் அதை நிறுவியும் பயனில்லை.

உலகத் தாள்நாணயத்திட்டம்

3. தங்கத்திட்டத்தை நிறுவ இயலாதாயின்* எல்லாத் தேசங்களுக்கும் பொதுவான உலகத் தாள்நாணயத் திட்டத்தை (International Paper Currency) நிறுவுவதும்

இனித் தாள்நாணய வெளியீட்டுக்கு ஆதாரமாக வைக்கப்படவேண்டிய தங்கம் குறைபடாதெனக் கூறுகின்றனர். 'The value of existing stocks and new accretions to the monetary gold stock of the world would be enough to maintain the purchasing power of gold stable for substantially more than a generation' (Sir Henry Strakosch).

* 'The restoration of the gold standard is about as feasible as the restoration of Queen Anne'—Sir Charles Morgan-Webb.

இயலாத காரியமே. தங்கத்திட்டத்தை இயங்கச்செய்வதிலேயே ஒருதேசத்துக்கும் மற்றொருதேசத்துக்கும் வேற்றுமையும் முரணும் ஏற்படும்பொழுது தாள்நாணயத்திட்டத்தில் அவை எங்ஙனம் ஏற்படாதிருக்கும்?‡ இது நிற்க.

வேறொரு திட்டம்

4. உலக நாணயத்திட்டத்தின் முக்கிய இலக்கணம், ஒவ்வொரு தேசத்தின் நாணயமும் மற்றைத் தேசங்களின் நாணயங்களுக்கு மாற்றப்படும்போது நிலையான மாற்று மதிப்பை உடையதாக விளங்குவதே. ஆதலால் இனி ஒவ்வொரு தேசத்திலும் இப்பொழுது வழங்கப் பெற்றுவரும் தாள்நாணயத்தின் மூலம் பொருள் விலைநிலையை ஸ்திரமாக நிறுவி, அந்நாணயத்துக்கும் மற்றைத் தேசநாணயங்களுக்கும் ஒரு நிலையான மாற்றுவிகிதத்தை அறுதியிட்டு, அவ்வாறு அறுதியிடப்பட்ட மதிப்பை நிலைபெற்றுவரச் செய்துவிட்டால் அது புதியதோர் உலகை நாணயத்திட்டத்தை ஏற்படுத்தியதாகும்.*

---

‡ 'The satisfactory functioning of such a standard postulates a similarity of understanding and outlook on monetary affairs, a degree of faith in the standard itself and a measure of international co-operation for its management, which we have no right to expect' (Sir Henry Strakosch).

*'Each national economic unit should have its own local currency,...and keep the internal purchasing power of that currency stable...For, each nation keeping its own internal prices stable, variations in the exchange values of the different local currencies would occur only infrequently and after longish intervals' (Sir Basil Blackett, ***Planned Money***).